
# சமரும் மருத்துவமும்



சூரியவன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ALL CEYLON DISTRIBUTORS
THAR BUILDING
JAFFNA
No. 212-214 K. K.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சமரும் மருத்துவமும்



## தூயவன்

தமிழ்த்தாய் வெளியீடு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சமரும் மருத்துவமும

*போர்க்களப் பதிவுகளும் புதிய புதினங்களும்*

தூயவன்

முதற்பதிப்பு

மே 2003

அச்சமைப்பு

நிலா பதிப்பகம், கிளிநொச்சி

புகைப்படங்கள்

விடுதலைப்புலிகளின்

புகைப்படப்பிரிவினர்

வெளியீடு

தமிழ்த்தாய் வெளியீட்டகம்

நிலாபதிப்பகம், கிளிநொச்சி

விலை - 100/=

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அனுபவ எழுத்துக்கள்

விடுதலையை நோக்கி விரிந்து செல்லும் எமது போராட்ட வரலாற்றின் அம்சமான போர்க்களப் பதிவுகளை எமது போராளிகளிற் பலர் பதிவுசெய்தும் வெளிப்படுத்தியும் வருகிறார்கள். இது மகிழ்ச்சிக்குரியது. பாராட்டுதலுக்குரியது. கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி, மேஜர் பாரதி, கப்டன் மலரவன், லெப்.கேணல் பாவரசன், மேஜர் பகலவன் எனப்பலர் இந்தப்பங்களிப்பிலும் அரிய போராட்டப் பணியிலும் செயற்பட்டு, எமது போராட்ட வரலாற்றுக்குப் பெருமைசேர்த்திருக்கின்றனர். இத்தகைய தொடர்ச்சியான வெளிப்பாட்டுப் பங்களிப்பில் மருத்துவத்துறையைச் சேர்ந்த திரு.தூயவன் அவர்கள் இப்போது தன்னுடைய பணியை ஒரு நூலாக முன்வைத்திருக்கின்றார்.

எமது தாயக விடுதலையை நெஞ்சினில் சுமந்து, அதன் செல்நெறியில் சந்தித்த சுமைகளை தோளில்சுமந்து, தாயகத்தை துண்டாட வந்தபகையை களத்திடை சந்தித்த வேளைகளில் விழுப்புண்களை ஏற்று நிற்கும் எமது போராளிச் செல்வங்களை தம் மடியில் தாங்கி அவர்களை காலனின் கையிலிருந்து காப்பாற்றும் பணியில் எமது மருத்துவப்போராளிகளே சவால்களைச்சந்தித்து மருத்துவ ரீதியாக வேதனைகளையும் சந்திக்கின்றனர். கொட்டுகின்ற எதிரிகளின் ரவைமழைகளின் மத்தியிலும், சிந்துகின்ற குருதிமழையை கட்டுப்படுத்தி எப்படியாவது எம்மண்ணின் மைந்தர்களை காப்பாற்றியே தீருவோம் எனும் போராட்டங்களை எதிர்கொள்வர். இருந்தும் போராளிகள் சிலரது உயிர்கள் பிரிந்துவிடும் கணத்தில் இவர்களது நெஞ்சுக்கூட்டுக்குள் இதயம் கசியும். இருப்பினும் தளராது, சோராது தமது தலையாய உயிர்காக்கும் உயரிய பணியில் உறுதியுடன் தொடர்ந்து செயற்பட்டு வருபவர்கள் எமது மருத்துவத்துறைப் போராளிகள். அவர்களில் ஒருவராக போராளி மருத்துவராக இருக்கும் தூயவன் இங்கே தனது போர்க்கள பதிவுகளை எழுத்துருவில் வடித்துள்ளார்.

"களத்தில் கேட்பது வேட்டொலி மக்கள் கேட்பது வெற்றியொலி மருத்துவப்பிரிவினர் கேட்பது வேதனையொலி எனும் தலைவரின்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கருத்துக்கமைவாக எமது மண்ணில் நாம் சந்தித்த போர்க்களங்களில் சரிந்த மண்ணின் மைந்தர்களின் வேதனை ஒலிகள் இவர்களது சப்த நாடிகளில் இன்னமும் எதிரொலித்தபடியே இருக்கும். அந்த வேதனைத்துளிகளை எம்மக்களோடு பகிர்ந்து கொள்வதென்பது சாலப்பொருத்தமானதொரு விடயமே. எனவே இந்நூல் இக்காலகட்டத்தில் வெளிவருவதென்பது போற்றுதற்குரியதொன்றே.

தூயவன் சமர்க்களங்களில் களமருத்துவராகத் திறம்படப் பணியாற்றி எமது போராட்டத்துக்கு வலுச்சேர்த்து வருபவர். அதேவேளை அந்த அனுபவங்களை சமர்க்கள மருத்துவப்பணிக்கு நிகரான எழுத்துப்பணி மூலம் பதிவு செய்தும் எழுதியும் வருபவர்.

ஏற்கனவே இவருடைய ஒரு நூல் வெளிவந்திருக்கிறது. 'சமரும் மருத்துவமும்' என்ற இந்த நூல் தூயவனுடைய இரண்டாவது நூல். தொடர்ச்சியாக எழுதிவரும் தூயவனுடைய படைப்புக்கள் வெளிச்சம், ஈழநாதம், விடுதலைப்புலிகள், புலிகளின்குரல் வானொலி என எமது வெளியீட்டுப் படைப்பாக்கங்களில் வெளிவந்து கொண்டிருப்பவை. எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் அறிமுகமாக வேண்டிய படைப்புக்களை தூயவன் எழுதி வருவதையிட்டு நான் பெருமையடைகின்றேன் மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தகைய பணியையும் பங்களிப்பையும் எமது போராட்டமும் வரலாறும் வேண்டிநிற்கிறது. இதை நூலாக வெளியிட்டுப் பரவலாக்கும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்தையும் பாராட்டுகின்றேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**சு.ப. தமிழ்ச்செல்வன்,**
**பொறுப்பாளர்**
**அரசியல்துறை**
**தமிழீழம்.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## தூயவனின் பேனாவுக்குண்டு அபூர்வசக்தி

'விடுதலை' என்ற சொல்லே சொற்களில் அதிக பெறுமதியானது. விடுதலை பெறாத எந்த ஒரு இனமும் முழுமை பெற்ற இனம் அல்ல.விடுதலை நோக்கிய எமது பயணத்தின் வளர்ச்சி வீதம் விரைவானது. அபூர்வமானது. எதிரிக்கு எதிரியின் படையணிக்கு காலத்திற்கு காலம் பலர் தலைமை தாங்கினார்கள். எங்களுக்கு எங்கள் படையணிக்கு எமது தலைவர் ஒருவரே தலைமை தாங்கினார். வெற்றி பெற்றார்.எமது தலைவர் ஒரு விடுதலை அமைப்பை மாத்திரம் உருவாக்கி வழிநடத்தவில்லை ஒரு நாட்டிற்குரிய சகல கட்டமைப்புக்களையும் உருவாக்கி ஒழுங்கமைத்துள்ளார். அவரால் ஒழுங்கமைக்கப்பட்டவற்றுள் விடுதலைப்புலிகள் மருத்துவப் பிரிவும் குறிப்பிடத்தக்கது.விடுதலைப்புலிகள் மருத்துவப்பிரிவின் வளர்ச்சியானது களத்தில் விழுப்புண்ணடையும் போராளிகளின் ஆரம்ப சிகிச்சையில் ஆரம்பித்து இன்று களத்தில் காயமடையும் போராளிகளின் ஒட்டுமொத்த மருத்துவ தேவைகளை நிறைவேற்றுவதுடன் எமது மக்களின் மருத்துவ சுகாதார பிரச்சனைகளையும் உடனுக்குடன் தீர்ப்பதில் வெற்றி பெற்று வருகிறது.

இராணுவ மருத்துவர் அணியென்பது விடுதலைப்புலிகள் மருத்துவப் பிரிவின் முதுகெலும்பாகும். இந் நூலின் ஆசிரியர் இராணுவ மருத்துவர் தூயவன் அவர்கள் கடந்த பத்து வருட காலத்தில் களங்களிலும் தள சத்திரசிகிச்சைக் கூடங்களிலும் ஏற்பட்ட தனது நேரடி அனுபவங்களின் ஒரு பகுதியையும் சக இராணுவ மருத்துவர்களின் சில அனுபவங்களையும் இந்நூலில் அழகாகவும் உயிரோட்டமாகவும் தந்திருக்கிறார்.இராணுவ மருத்துவர்கள் பார்வைக்கு சாதாரணமாய்த் தெரிந்தாலும் அவர்களில் ஏதோ கதைக்க எத்தனித்தே மடிமீதினில் வீரச்சாவடைந்த போராளியின் இறுதிக்கணங்கள் மனதில் இரும்புக்குத்தியாய் குந்தி இருக்கும். ஒரு இலட்சம் மைல்களை நடந்து திரிந்த காலை இன்று சிதைந்ததற்காய் அப்புறப்படுத்துகையில் சிதைந்து போகும் மன அமைதியும் இருக்கும் - நெருங்கிய போராளியானாலும் நோயாளியாகியதால் அவனது உண்மை நோயை அவனுக்கு ஒழித்து வைத்து மனச்சாட்சியை பாக்கு வெட்டியால் துண்டாகும் நறுக்கு வாழ்வும் இருக்கும் - கைகளுக்கருகில் நின்று மருத்துவப் போராளியாய் சுழன்று திரிந்து கேட்காமலே உணவு எடுத்துதந்து சாப்பிட்டவுடன் கோப்பையை பறித்துப்போகும் அந்தப் போராளிகளின் வீரச்சாவு நாட்கள் மூளையில் ஆணியால் துளைபோடப்பட்டிருக்கும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தூயவன் தனது வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தனது அனுபவங்களை இலக்கிய வாயிலினூடாக எங்களது மக்களுடன் பகிர்ந்து கொள்வது மிகவும் பாராட்டத்தக்கது. இந்நூலிலுள்ள பல ஆக்கங்கள் ஏற்கனவே பிரசுரமானவை. பலராலும் பாராட்டப்பெற்றவை. நாளை வரலாற்று ஆசிரியர்களுக்கும் துணைபுரியக்கூடியவை. வெள்ளைப்பொய்கள் விளைவழியா விதிகள் போன்ற பல தலைப்பங்கள் ஆக்கங்களுக்கேற்ப அசத்தலாய் மிளிர்கின்றன. இந்நூலின் உள்ளடக்கங்கள் ஒவ்வொரு ஈழத்தமிழனாலும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியவை கால வெள்ளத்தில் இந்நூல் பிறமொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு உண்மை உலகிற்கு தெரியப்படுத்தப்படவேண்டும்.

தூயவனின் 'இலக்குத் தெரிகிறது' என்ற கவிதை நூல் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளது "இன்னுமொரு போர்முகம்" என்ற ஒரு உண்மைச்சம்பவத்தின் தொடர்கதை ஈழநாதத்தில் தொடராக வெளிவந்து மக்களின் பாராட்டைப்பெற்றது.

தூயவனிடம் போராளிகளுக்கே உரிய கடுமையான உழைப்பும் மக்கள் மீதான ஆழ்ந்த அக்கறையும் இருக்கிறது. புதிதாக ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற முயற்சி இருக்கிறது.தமிழீழம் பற்றிய பெரிய கற்பனை இருக்கிறது. இவரது பேனாவுக்கு எமது போராட்டத்தை வரலாற்று நிகழ்வுகளை வெளிக்கொணரும் அபூர்வ சக்தி இருக்கிறது. மற்றவர்களைப் போல் நானும் இவரிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கின்றேன். இந்நூலுக்கு முன்னுரை வழங்குவதை பெருமையாகக்கருதுகின்றேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நன்றி
வணக்கம்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

கா.சுஜந்தன்
மருத்துவப்பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

# என்னுரை


சமரும் மருத்துவமும் எனும் இந்நூல் வெளிவருவது மகிழ்வைக் கொடுக்கின்றது. 1993-2003 வரையான காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் ஏடு, வெளிச்சம் சஞ்சிகை, புலிகளின் குரல் வானொலி, ஆகியவற்றில் வெளியானவை இதில் தொகுக்கப்பட்டுள்ளன. இது போர் நிகழ்ந்த காலத்தின் மருத்துவப்பிரிவின் குறுக்குவெட்டு முகத்தோற்றத்தை மேலெழுந்தவாரியாக வெளிப்படுத்தும் என நம்புகின்றேன். அடிப்படைகள் எனும் ஆக்கம் மட்டும் புனைவு சார்ந்தது. ஏனையவை போர்ப்பணியில் ஈடுபட்டிருந்தபோது மனதைத் தொட்ட உண்மை நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்றன.

எழுத்துலகிலான எனது பயணத்தை சாத்தியமாக்கி இப்புத்தகம் வெளிவரக் காரணமானவர்களானஎழுத்தறிவித்து இலக்கிய வளமூட்டிய பெற்றோர்க்கும், ஆசான்களுக்கும், அனுபவப் பதிவுகளின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டு ஊக்கம் தந்த எம் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தேசியத் தலைவர் அவர்கட்கும், எழுத்தும் ஒரு செயல்தான் என உற்சாகமும் வாழ்த்தும் தந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கட்கும் முகவுரை தந்து மதிப்பளித்த வைத்தியக் கலாநிதி திரு.சுஜந்தன் அவர்கட்கும்

பலவழிகளில் ஆற்றுப்படுத்தி வருபவர்களான விடுதலைப் புலிகள் ஏட்டின் ஆசிரியர் திரு.சு.ரவி, கவிஞர் புதுவைஇரத்தினதுரை, வெளிச்ச ஆசியர் திரு.கருணாகரன், திரு.வே.பாலகுமாரன், திரு.ராதேயன், மூத்த தளபதி ச.பொட்டு, திரு.தமிழன்பன், எமது பிரதேச மருத்துவர்கள், மருத்துவ நிர்வாகப் பொறுப்பாளர் திரு.ரேகா, மற்றும் தமிழீழ மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கும் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாளர் திரு.அன்ரனி அவர்கட்கும் தமிழ்த் தாய்வெளியீட்டகத்தினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தூயவன்
(சு. தனேஸ்குமார்)
14-05-2003




தாயக விடுதலைப்போரில்
சுமைதாங்கிகளாகவும் தலைக்கொடுப்போராகவும்
பங்காற்றிய மக்களுக்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சமராடும் முனையில் உயிர்காக்கும் பணி

## ஒரு மருத்துவப்போராளியின் முதல் அனுபவம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

10.11.1993 அன்று நடுநிசி, இருளுடன் கடுமையான குளிர்காற்று உடலை ஊடுருவிச் செல்வதை உணர்கிறேன். பாரம் கூடிய நீர்த்துளிகள் என்மேல் விழுந்து தெறிக்கின்றன. எனது பாதணிகள் நிலத்தில் புதைவதை உணர்கிறேன். முன்னால் வழிகாட்டிச் செல்பவரின் உதவியுடன் வேகமும் எனக்கும் கைகொடுக்கிறது. இது ஒரு தென்னந்தோப்பு என்பதைப் புரிய முடிகின்றது.

திடீரென என் முன்னால் சாக்குப்படங்கு ஒன்று தொங்குவதைத் தொட்டுத் தெரிந்துகொண்டேன். அதை விலக்கிச் செல்ல இன்னுமொரு சாக்குப் படங்கு தட்டுப்பட்டது. அதையும் விலக்கிய போது, கண்ணைப்பறிக்கும் மின் ஒளியூட்டிய ஒரு கொட்டகையினுள் நான் நின்றேன். இவ்வொளியின் ஒரு கீற்றுக்கூட வெளியில் தெரியவில்லையே! ஆம், அப்படியொரு ஒளிக்கீற்று வெளியில் தெரியுமானால் நாம் அங்கிருப்பது சாத்தியமாகாது.எனக்கு இது முதலனுபவம்.

வெள்ளாடை அணிந்தவண்ணம் பிரதான மருத்துவர்களும் வேறு சிலரும் நோயாளியைச் சுற்றி நின்று சிகிச்சை செய்வதைத்தான் தெரிந்திருந்தேன். 'அல்பா' கதிரால் அச் சத்திரசிகிச்சை அறை தொற்று நீக்கப்பட்டிருக்கும். எதுவித வேறுபாடு, இடையூறுகளும் இருக்காது பணி நிதானமாக நடைபெறும். ஆனால் இங்கு சுற்றிவர மண்மூட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒரு பக்கம் மேசையொன்றில் மருத்துவப்பொருட்கள் சீராக அடுக்கப்பட்டுள்ளன. தரையில் விரித்திருக்கும் பாய்களைக் கொண்டு இவ்விடம் ஒரே தடவையில் நாற்பது பேரைக் கவனிக்கக் கூடியதாக இருக்கும் என்பதை விளங்கிக் கொண்டேன். நேராக இரண்டு பக்கமும் சுமார் 8 அடி உயரத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிறு அங்கு சிகிச்சைக்காக வருபவர்களுக்கு திரவ ஊடகம் அவசியம் ஏற்றவேண்டியிருக்கும் என்பதை உறுதிப்படுத்தியது.

அங்கு நிற்கும் ஒவ்வொருவரினதும் முகத்தை பார்க்கின்றேன். எல்லோரிடத்திலும் ஒரு அமைதி நிலவுகிறது. ஆனால் அவர்களின் கண்கள் எதையோ வினவுவது போல இருக்கிறது. எத்தனையோ களங்களின் அனுபவத்தை பெற்ற இவர்கள் எதையும் கதைக்காதது எனக்கு வியப்பளிக்கவில்லை. ஏனெனில் இவர்கள் செயல் வீரர்கள்.
சாமம் இருள் வடிவில் கழிகிறது.
எல்லோரும் பரபரப்பாகின்றார்கள்.

ஏதோவொன்றை அவர்கள் தெரிந்துவிட்டார்கள். நானும் அவர்களுடன் இணைகிறேன். துப்பாக்கிச் சத்தங்களும் பாரிய குண்டுவெடிப்புச் சத்தங்களும் தூரத்தில் கேட்கின்றன. "சண்டை தொடங்கிவிட்டது— சண்டை தொடங்கி விட்டது—" எல்லோர் வாய்களும் முணுமுணுக்கின்றன.

வாகனம் நாம் இருக்கும் கொட்டிலின் முன் வந்து 'பிறேக்' அடித்து நிற்கிறது. "விலகு— விலகு— என்ர அம்மா— ஐயோ என்ர அம்மா—" எனக் கேட்கும் குரல்கள் என்னை ஒரு கணம் உலுப்பியது. முன்னிருந்த சாக்குப் படங்கு விலக, காயப்பட்ட போராளிகளைத் தூக்கிக்கொண்டு உள்ளே விரைந்துவந்து கிடத்துகிறார்கள். இரத்த மணம் வீசுகிறது. அவர்கள் வேதனையால் முனகும்போதும் நடமாடல்களின்போது ஏற்படும் காலடிச் சத்தமும் அவ்விடத்தின் சூழலை முற்றாக மாற்றி விடுகிறது. ஒவ்வொரு போராளியாக பிரதான மருத்துவர் வேகமாகக் கவனிக்கிறார். நாடித்துடிப்பையும் காயங்களின் தன்மையும் கவனித்து, யாருக்கு முதலில் அவசர சிகிச்சை செய்ய வேண்டும் என முடிவெடுத்து அவர் செயற்படத் தொடங்குகின்றார். எல்லோரும் இயங்குகின்றார்கள்.

காயக்காரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இட நெருக்கடி ஆயினும் எவரும் நிதானம் இழந்தாயில்லை. காயமடைந்த போராளிகளின் வேதனைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கதறலைக் கேட்டும் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமலும் பணி தொடர்கிறது.

பிரதான மருத்துவர் என்னை அழைக்கிறார். மயக்க நிலையில் இருக்கும் போராளி ஒருவரைப் பார்த்தவண்ணம், " முயற்சி செய்வம்" என்றபடியே செயற்கைச் சுவாச முறைகளைச் செய்யும் படி பணிக்கிறார். நான் முழங்காலில் இருந்தபடி கைகளை நெஞ்சில் வைத்து அழுத்தம் கொடுக்கிறேன். இன்னொரு போராளியும் செயற்கைச் சுவாசம் கொடுக்கிறான்.

அப்பொழுது எனது பாதத்தில் யாரோ தட்டுவது போல் உணர்ந்து திரும்புகின்றேன். "அண்ணா, தண்ணி தாங்கோ.... ஐயோ தண்ணி தாங்கோ..." இன்னுமொரு காயமடைந்த போராளியின் குரல் என் இதயத்தைப் பிழிகிறது.

ஆனால் "ஒப்பிரேசன் செய்யிறதென்றால் தண்ணீர் கொடுக்கக்கூடாது" என்ற கட்டளை என்னைத் தடுக்கிறது. ஏனோ என்மனம் அந்தரிக்கிறது.

எனது பாதத்தைத் தடவியபடியே அந்தப் போராளி தண்ணீர் கேட்கிறான். இன்னுமொரு போராளி இதயமும் இயங்காமல் சுவாசமும் இல்லாமல் கிடக்கிறான்.

உயிர்.... உயிர் எவ்வளவு உன்னதமானது! பிரதான மருத்துவர் அப் போராளியின் கண்ணிமையைப் பார்த்துவிட்டுத் தலையாட்டுகின்றார். "பிறெயின் டெத்தாயிட்டு" எனக்கூறி விலக்குகின்றார். ஏதோ நினைவு வந்தாற்போல பின்னால் திரும்பி, தண்ணீர் கேட்ட போராளியைப் பார்க்கிறேன். இன்னுமொரு மருத்துவர் அவனது நாடித்துடிப்பைச் சோதித்துவிட்டு, கண்ணிமையையும் விரித்துப் பார்த்து விட்டு விலகுகின்றார்.

"ஐயோ...." என்று கத்தவேண்டும் போல் இருக்கிறது.

அப்போது யாரோ எனது முதுகில் தட்டிக் கொடுப்பதை உணர்ந்து திரும்பினேன். அங்கு நின்ற பொறுப்பாளர் என்னைப் பார்த்து.

"ஒன்றுக்கும் கலங்காதேயும் நாம் கடக்கவேண்டிய பாதை இதைவிடக் கடுமையானது... உம் கடமையைத் தொடரும்..." எனப் பணிப்பது போல உணர்கிறேன். மனச்சுமையிலிருந்து விடுபட்டு, இன்னுமொரு காயமடைந்த போராளிக்குச் சிகிச்சை செய்யத் தொடங்குகிறேன்.

மரணத்தைக் கண்டு பதற்றப்படுவதல்ல... அதன் பிடியிலிருந்து மனிதர்களை மீட்பதுதானே எங்கள் தளராத பணி? அதில் ஆழ்கிறேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# இலட்சிய வாழ்வில் ஒரு துளி

**உரிமைப்போரில் உணர்வுப்புலன் இழந்தும்
உள்ளம் தளராத புலிவீரர்கள்**



தன் அருகில்வந்து தானியங்கள் கொத்தியுண்ணும் பல்வகைப் புறாக்களின் அழகை ரசித்தவண்ணம் இருக்கிறான். அவை 'தெத்தித் தெத்தி' நடப்பதும், காலைச் சூரிய ஒளி அவற்றின் கழுத்தின் மேற்பகுதியில் பட்டுத்தெறிப்பதால் மேலும் மினுமினுப்பைக் கொடுப்பதும், அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்க வேண்டும். ஆயினும் அவனின் ஒளி நிறைந்த விழிகளில் ஏக்கமொன்று தெரிகிறது. தான் அன்புடன் வளர்க்கும் அப்புறாக்களுக்கு தானியம் அள்ளிவீச முயல்கிறான். ஆனால் அவன் கையை நோக்கியவன் பெருமூச்சொன்று விடுகிறான். அதனால் அவன் உணர்வுகளின் ஆழத்தை அளக்கமுடிகிறது. பெருவிரலுடன் சேர்த்து மற்ற மூன்று விரல்களும் சுமாராகத்தான் அசைகின்றன. மற்ற இரண்டும் அதற்கு மறுக்கின்றன. "எண்டாலும் இரண்டு வருசத்திற்கு முந்தினதிலும் பார்க்க, இப்ப நல்ல முன்னேற்றம்" தனக்குள் சமாதானம் கூறிக் கொள்கிறான். இவன் பின்னால் திரும்பி தலையசைக்க அருகில் நிற்கும் சக போராளியின் உதவியால் இவனிருக்கும் சக்கர நாற்காலி நகரத் தொடங்குகின்றது. அப்புறாக்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பறக்கின்றன. அவன் மனமும் கடந்த காலத்தை நோக்கிச் சிறகடிக்கின்றது.

அப்பொழுது அவனிற்கு பதினாறாவது வயது நடக்கின்றது. க.பொ.த

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

(சா/த) பரீட்சை எடுப்பதற்கான காலம். எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக உயர்தரத்தைப் பற்றிச் சிந்திக்கும் காலம். ஆனால் காலம் அவனைக் களத்திற்கு அழைக்கின்றது. வன்னிக் காட்டினுள் அவன் வரிப்புலியாகின்றான். பல களங்களில் தொடராய் கால் பதித்ததால் வீரத்தழும்புகளால் உடலை நிறைக்கிறான். நேரடி கள அனுபவங்கள், சண்டைக்கான திட்டங்கள் தீட்டும் திறனால் தன் போர் அறிவைப் பெருக்குகின்றான். இப்பொழுது இவனின் குடலில் கணிசமான பகுதி இவனிடம் இல்லை. கீழ் காலில் ஏற்பட்ட பலமானகாயம் இன்னும் ஆறவில்லை. ஆயினும் அவன் பணி தொடர்கிறது.

சுமாராக மூன்று மாதம், தான் நேரடியாக வேவு பார்த்து, திட்டம் தயாரித்து, ஒரு குழுவைத் தலைமை தாங்கி, மற்றக் குழுக்களுடன் சேர்ந்து இலக்கு நோக்கி நகர்த்துகிறான். அவன் நினைக்கும் வேகத்திற்கு ஏற்றாற்போல் காலடி எடுத்துவைக்க அவனால் முடியவில்லை. முட்புதர்களையும், மரவேர்களையும், செடிகொடிகளையும் விலத்தி விரைவதற்கு அவன் கால் ஒன்று உதவி செய்ய மறுக்கின்றது. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் உயிர் போகும் வலியின் பிரதிபலிப்பு, நெற்றியில் உருவாகும் நெருக்கக் கோடுகளில் தெரிகிறது. இவனின் துப்பாக்கியைத் தாங்கியிருக்கும் வலக்கரத்தில் ரவையொன்று எப்பவோ ஊடுருவிச் சென்றதற்கான அடையாளம் எதையோ விபரிக்க முற்படுகின்றது.

நடுநிசி, எல்லோரும் நிலையெடுத்து இருக்கிறார்கள். நீண்ட நாட்களாக பல சிரமங்களின் மத்தியில் தீட்டிய தாக்குதல் திட்டத்தின் அறுவடை ஆரம்பம் ஆகப்போகின்றது. கணங்கள் எல்லாம் யுகங்களாகக் கழிந்தவண்ணம் உள்ளது. சிறு அரவம் கூட எதிரியை உசாராக்கிவிடும். அந்த மினிமுகாம் தாக்குதலில் இவனுக்கு சில காவலரண்களைக் கைப்பற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கால்கள் தரையைத் தழுவும்போது நெரிபடும் சருகுகளின் சத்தம்கூட அவர்களின் காதுகளுக்கு எட்டாவண்ணம்தான் அம்முகாமிற்கு அண்மையில் நகர்ந்துவந்தார்கள். ஆயினும் ஏனோ போலும். ஆபத்தின் ஊடே ஓர்மத்துடன் முன்னேறுவதற்கும், அமைதியாக, நிதானமாக முன்னேறுவதற்கும் இடையே நீண்ட இடைவெளி காணப்படுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வொருவரும் தங்கள் இலக்குகளை வெற்றி கொள்வதில் குறியாக இருக்கின்றார்கள். அப்பொழுது ஆர்.பி.ஜி கணையொன்று தீ கக்கியவண்ணம் விரைந்துசென்று காவலரண் ஒன்றைத் தகர்க்கிறது. அக்கணத்துடன் துப்பாக்கிகளினதும் ஏனைய கனரக ஆயுதங்களினதும் கோரப்பசிக்குத் தீனி கொடுப்பதில் போராளிகள் தீவிரமாகிறார்கள். எதிரியிடமிருந்து கிடையாகப் பொழியும் ரவை மழை இடையே, வெற்றித் தேவதையை நோக்கி புலி வீரர்கள் விரைகின்றனர்.

அப்பொழுது, எங்கிருந்தோ வந்த ரவையொன்று இவன் கழுத்தை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஊடுருவிச் செல்கின்றது. கட்டளைகளைப் பிறப்பித்தவன்ணம் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தவன் பின்நோக்கித் தள்ளப்படுகின்றான்.

சில நாட்களின் பின் கண்விழித்தவன் தன்னிலை உணர்ந்துகொள்ள முடியாமல் தவிக்கிறான். தான் இப்பூமியில் இல்லாத மாதிரி உணர்கிறான். தனது உடலில் தலை தவிர்ந்த ஏனைய பகுதிகள் இருப்பதையே அவனால் உணர முடியவில்லை. அவனுக்கு தன்னிலை மெல்லமெல்ல..... தெரியவருகின்றது. கண்வழியோடும் கண்ணீர் கன்னம் வழியே பாய்ந்து படுக்கையை நனைக்கிறது.

ஆம்! உறுமித்திரிந்த புலிவீரன், சுதந்திர மண்ணில் பறக்கவிரும்பியவன், பங்குபற்றிய ஓட்டப் பந்தயங்களில் எல்லாம் முதலாவதாக வந்தவன் முதன்முறையாகத் தன் இயலாமையை உணர்கின்றான். எத்தனையோ எதிரிகளுக்கு எமலோகத்திற்கு வழிகாட்டுவதற்காகத் துப்பாக்கி விசைவில்லுக்குக்கு விசை வழங்கிய அவன் விரலும், தற்பொழுது உணர்வில்லாத பகுதியாகிவிட்டது. உடலின் பெரும்பகுதி உணர்விழந்தாலும், செயலிழந்தாலும் மனம் உரமிழக்காமல் இருப்பதற்காக, அதற்குப் படிப்படியாக பயிற்சி கொடுக்க ஆரம்பிக்கிறான்.

"நான் எழும்பித் திரிய எவ்வளவு நாள் எடுக்கும்?" இக் கேள்வியை அவன் வெளிப்படையாகக் கேட்பதில்லை: தன்னைத்தானே கேட்பது வழக்கம். இப்பொழுதே இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. இன்னும்— ஓ எவ்வளவு பெரிய தாக்கம், அதனால் ஏற்படும் தவிப்பு சொற்களால் சிறையிட முடியாதவை. சகல விடயங்களுக்கும் இன்னொருவரில் தங்கியிருக்கவேண்டிய நிலை. ஆயினும், தாயாக மாறும் போராளிகளால் அவன் வாழ விரும்புகிறான்.

தமிழீழம்.... தமிழீழம்.... இதற்காய் இவன் எவ்வளவு வேதனைகளையும், சோதனைகளையும் எத்தனை காலம் வேண்டுமானாலும் தாங்கத் தயார். இந்நாட்டு மக்கள் சுதந்திர மண்ணில் மகிழ்ச்சியாக வாழ்வதைக்காண தன்கண்கள் இரண்டும் இருந்தால் போதும் என நினைப்பவன். "தட்டித்தவறி நான் செத்திட்டா என்ர கண்ணை யாராவது ஒரு தமிழ் மகனுக்கு தானம் செய்யுங்கோ. அதனால நான் தமிழீழத்தை பார்ப்பேன்." இவனது வாயில் இருந்து வரும் இவ்வார்த்தைகள் உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டும் வீடியோ படங்களாகவே தெரிகின்றன.

தலை வேர்க்கிறது. உணர்வு தெரியும் பகுதியெல்லாம் உயிர்போகும் வேதனையால் துடிக்கின்றது. அவனுக்கும் தெரிகிறது. சிறுநீர் வெளியேறப் போகுதென்று. அவனது சிறுநீர் வழியினூடாக சிறுநீர்ப்பைவரை பொருத்தப்பட்டிருக்கும் ரப்பர் குழாயூடே சிறுநீரும் இரத்தமும் கலந்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெளிவருகின்றது. அதனை அவதானித்தவன் மனத்தில் எதுவித சலனமும் இல்லை. ஏனெனில் சிலகாலமாக இது பழகிய ஒன்றுதான். ஆயினும் ஒரு நாளில் எத்தனை தடவை இவ்வேதனையைத் தாங்குவது. எனினும் இது தவிர்க்க முடியாததாகவே காணப்படுகின்றது. இந்நாட்டில் நரம்பியல் நிபுணர்களின் பற்றாக்குறையும், இத்துறைசார் நிபுணத்துவ பற்றாக்குறையும், இயற்கையாகவே நரம்புக்கலங்களின் பிரிந்து பெருகும் ஆற்றலற்ற நிலையும், அவனின் பாதிக்கப்பட்ட நரம்பு மண்டலம் சீராகும் காலத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் செய்கின்றன.

துழாயில் இருந்து நீர் பாயும் ஓசையையும் தாண்டி, அவர்களின் சிரிப்போலியும், கும்மாளமடிக்கும் சத்தமும் வருகின்றது. இப்பொழுது அவன் 'ஸ்ரெச்சரில' இருந்தபடியே குளித்துக் கொண்டிருக்கிறான். அருகில் நிற்கும் சக போராளிகளுடன் அவன் 'பம்பலாய்' சிரித்துக் கதைத்தவண்ணம் குளிக்கிறான். "டேய் எனக்கு இப்ப கை ஏலும்" எனக் கூறியவண்ணம் தனது இயலாத கையால் தண்ணியை அள்ளி மற்றவனின் தலையில் வார்க்கின்றான். இப்படியே இவர்கள் மாறி மாறி தண்ணி ஊற்றுவதும் பலத்து சிரிப்பதும் பார்ப்பதற்கு இதமாக இருக்கிறது. ஆயினும் "எப்படி இவனால் இந்நிலையிலும் மனம்விட்டுச் சிரிக்க முடிகிறது" எனும் கேள்வி மனதில் எழத்தான் செய்கிறது. இதற்கான பதில் உலகமே அறிந்த ஒன்றுதான். உறுதியும் பரிவும் மிக்க தலைவரினால் அவர்கள் வளர்க்கப்படுபவர்கள்.

குளித்து உடைகள் மாற்றிய பின்பு, அவன் முச்சக்கர நாற்காலியில் இருந்தவண்ணம் சக போராளிகளின் உதவியால் புறாக்கூட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றான். தனது வலது கரத்தால் மிகவும் கஸ்ரப்பட்டு அப்புறாக்கூட்டின் தாளை நீக்கி கதவுகளை திறக்கிறான். உள்ளிருந்த புறாக்கள் சடசடவென தங்கள் இறக்கைகளை அடித்தவண்ணம் வெளிவந்து முச்சக்கர நாற்காலிக்கு அருகாமையில் தரையில் அமர்கின்றன. தனது மடியில் மற்றப் போராளி வைத்த பாத்திரத்தில் இருந்த தானியங்களை மெல்ல மெல்ல அள்ளி அப்புறாக்களுக்கு சிந்துகிறான். அவை அதனைக் கொத்தி உண்ணும் அழகையும், தெத்திப் பாயும் ரம்மியத்தையும் ரசித்த வண்ணம் கண்களை கசக்கியபடி சிரிக்கின்றான்.

Tamil Eelam Archive

# ஒரு நாள்



அது 19.07.1997.

பெரியமடு எனும் அக்கிராமம் தன் குடிமக்களைப் பிரிந்து, போராளிகளை அரவணைத்தவண்ணம் விடிகிறது. கண்டி வீதிக்கு கிழக்கேயும், நெடுங்கேணி வீதிக்கு வடக்கேயும் அமைந்திருக்கிறது அது. சுமார் நூறு குடும்பங்களையே தன்னில் கொண்டிருந்திருக்கும். அதிலிருந்து இரண்டு மைல் தொலைவில் நைநாமடு என்னுமிடத்தில் போராளிகளும் ஜயசிக்குறு இராணுவமும் அடிக்கடி கைகலந்து கொண்டிருக்கின்றனர். இரணைமடு அணையில் அலைகள் வந்து மோதுவதைப் போல் இராணுவத்தின் முன்னேற்ற முயற்சியும் அதனைத் தடுக்கும் புலிகள் ஏற்பாடும் அமைந்துள்ளது. அக் கிராமத்தில் தான் அப் போர்க்கள பிரதேசத்திற்குரிய பிரதான மருத்துவ முகாம் அமைந்திருக்கிறது. பதுங்கு குழிகள், நிலக்கீழ் அறைகள் எனப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பாரிய குண்டுத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. காயங்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பது, நோயாளிகளைப் பராமரிப்பது, களஞ்சியம் என தனித்தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

அன்று காலை மாறாக அங்கிருக்கும் போராளிகள் செயலில் உற்சாகம் தென்படுகின்றது. முகங்களில் மகிழ்ச்சிப் பிரவாகம் எடுக்கின்றது. நேற்றுமாலை இவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் கிபிர் குண்டு போட்டது. அதில் எவரும் வீரச்சாவு அடையவோ, காயப்படவோ இல்லை. ஆனால் சில வீடுகளைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காணவில்லை. பல மரங்கள் அகால மரணம் அடைந்திருந்தன. முறிந்திருந்த தென்னை மரங்களில் இருந்து சிதறிய தேங்காய்களை இவர்களில் சிலர் சேகரிக்கின்றார்கள். தோதல் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்றார்கள். இந் நிகழ்வு தைப்பொங்கல் போன்ற நாட்களில் அதிக சிறார்கள் இருக்கும் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை ஞாபகமூட்டுகிறது. துன்பங்களும், துயரங்களும் சூழ்ந்த நிலையில் இன்பமாய் இருக்க இவர்களிடம் கற்றுக்கொள்ளலாம். தோதல் தாய்ச்சி அடுப்பில் ஏற்றப்பட்டுவிட்டது. நெருப்பு சுவாலைவிட்டு எரிகின்றது. பச்சை பனைமட்டை மூலம் தோதலைக் கிண்டிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ராஜன் பலமாகக் கேட்கிறான். "டொக்டர் காய்ச்சல்காரருக்கு தோதல் கொடுக்கலாமோ?"

அப்பொழுது செல் குத்தும் சத்தம் கேட்கிறது. சில வினாடிகளில் எறிகணை மழை பொழிவதற்கான முழக்கமே இது எல்லாரும் உடனேயே பதுங்கு குழிக்குள் செல்கின்றார்கள். வழமை போல் நெடுக்காகவும், கிடையாகவும் எறிகணைகள் அப்பிரதேசத்தில் வீழ்ந்து வெடிக்கின்றன. "சரி இன்று முழுக்க பங்கருக்குள்ள கழியப்போகுது" ஒருவன் சிரித்தபடியே கூறுகின்றான். சிறிது நேரத்தில் எல்லாம் ஓய்ந்துவிட்டது. பொந்துகளை விட்டு வெளிவரும் நண்டுகள் போல் ஒவ்வொருவராக வெளிவருகின்றார்கள்.

"அடிப்பிடிக்கப் போகுது. அடிப்பிடிக்கப்போகுது" என்று கூறியபடியே ஓடிப்போன ராஜன் ஒரு மட்டையால் தோதலைக் கிண்டிய வண்ணம் மறுகையால் எரியும் விறகுகளை வெளியால் எடுத்து நெருப்பை அணைக்கின்றான். "பதம் சரிவந்திட்டுது." அவன் கூற மீண்டும் "தும்—கும்—" செல் குத்தும் சத்தம் கேட்கிறது. உடனேயே சுடச்சுட தாய்ச்சியையும் தூக்கிக் கொண்டு பதுங்கு குழிக்குள் செல்கிறார்கள். "அடாது செல் அடித்தாலும் விடாது தோதல் கிண்டுவோம்" இவன் பலமாகச் சொல்வது கேட்கிறது மீண்டும் அமைதி.

வோக்கியில் அறிவித்தல் வருகிறது. "உங்களுக்குரியது வருகிறது" உடனேயே எல்லோரும் காயக்காரரை ஏற்றுக்கொள்வதற்காக தயாராகின்றார்கள். வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாய் விரைந்து வந்து கிறீச் என பிறேக் பிடித்து நின்ற சிறு வாகனத்தில் இருந்து ஐந்து விழுப்புண்ணடைந்தோர் இறக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கான சிகிச்சைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுகின்றன. அந் நிகழ்வானது முடுக்கிவிடப்பட்ட சில றோபோக்களின் செயற்பாட்டை ஒத்திருந்தது. அதில் ஒரு இயந்திரத் தன்மை காணப்படுகின்றது. எனினும் அது அவர்களின் சிறப்புத் தேர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. போலும், பூரண பரிசோதனைக்காக ஆடைகள் மளமளவென வெட்டி அகற்றப்படும்போது அவன் அதனை அவதானிக்கின்றான். ஐவரில் மூவரின் அடிவயிறு முழுவதும் வட்டக்கடி ஆக்கிரமித்திருந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"சே இவ்வளவு கஸ்டப்பட்டாலும் இதை ஒளிக்க ஏலாமல் இருக்கு. என்ன செய்கிறது குளிசையோ அல்லது பூச்சு மருந்தோ குறைந்தது ஆறு கிழமைக்கு தொடர்ந்து பாவிக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரே நேரத்தில் மருந்து கொடுக்க வேண்டும். போதியளவு இல்லை ஒவ்வொரு நாளும் குளித்து, உடுப்பு தோச்சு, காயப்போட்டு சுத்தமாக இருக்க வேணும். களமுனையில் இது சாத்தியமில்லை. லேசான ஆடைகளை அணியிறதுக்கு இராணுவ உடையின் யதார்த்தம் இடங் கொடுக்காது. காயப்போடுகின்ற உடுப்பும் செல்லடியில் காயப்பட்டு போகுது. ஒருசில கிழமைக்கு மாற்று உடுப்பு வாறதற்கே கடினமாக இருக்குது" என பலவகை எண்ணங்கள் மனதில் ஓட அதனை வெளிக்காட்டாமல் அவன் உயிர்காக்கும் சிகிச்சையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றான். தேவையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதும் மேலதிக சிகிச்சைக்காக பின் தளங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

சிறிது நேரத்தில் மீண்டும் அறிவித்தல் வருகிறது. உங்களுக்குரியது இன்னும் இரண்டு வருகிறது. வாகனம் வந்தவுடன் இருவரும் வேகமாக இறக்கப்படுகின்றார்கள். ஒருவரின் கால் முழங்காலின் கீழ் சிதைந்து தொங்குகின்றது. முகம் வெளிறிக் காணப்படுகின்றது. இரத்தம் பாரிய அளவில் வெளியேறி இருக்கவேண்டும். மற்றவருக்கு மேல் தொடையில் காயம் காலில் காலுக்குரிய பிரதான நாடி சேதம் அடைந்திருக்க சந்தர்ப்பம் உண்டு. எனவே நாடியினைச் சத்திர சிகிச்சை மூலம் திருத்தி அமைக்கவேண்டும்.

குறைந்தது ஆறு மணித்தியாலங்களுக்குள் இவரை அனுப்பிவைக்க வேண்டும். இல்லையேல் கீழ் அவயம் முற்றாக அகற்ற வேண்டி ஏற்படலாம். ஆனால் முதலாமவருக்கு சரியான முறையில் குருதிப்பெருக்கை நிறுத்தி கட்டுப்போடவேண்டும் என்றால், என்பை வெட்டவேண்டும். பூரண மயக்கத்தில்தான் அதனைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அவர் குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் பயணிக்க முடியாது. எனவே சாதாரண நோநிவாரணியுடன் என்பை வெட்ட வேண்டியதுதான். மேற்படி விடயங்களைக் கொண்டு உடனே செயலில் இறங்குகின்றான். நோநிவாரணி கொடுக்கப்பட்டு இன்னுமொருவரின் உதவியுடன் என்பு வெட்டும் கம்பி வாளினால் சற சறவென என்பை அறுக்கின்றான். மற்றவர்களுக்கு வேதனையை கொடுக்கும் செயல்களை ஒட்டுமொத்த நன்மை கருதி மேற்கொண்டாலும், செய்பவனுக்கு அது மனவேதனையை ஏற்படுத்துவது தெரிகிறது. காயமடைந்தவன் வலியை உணர்ந்து முகம் சுழிக்கும்போது இவனின் வேகத்தில் தடை ஏற்படுகின்றது.

குருதி ஏற்றுதல், மட்டை வைத்து கட்டுதல் போன்ற ஏனைய இன்னோரன்ன சிகிச்சைகளைச் செய்துமுடித்த பின்னர் "வாகனத்தில் ஏற்றுங்கோ" அவன் கூறுகின்றான். அப்பொழுது வாகனத்திற்கு பொறுப்பாக நிற்பவர் "டொக்டர் கொஞ்சம் பொறுக்க ஏலாதோ? இன்னும் இரண்டு கேஸ் வருகுதாம் சேர்த்து ஒரு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வாகனத்தில் அனுப்பலாம் தானே? " தயக்கத்துடன் வெளிவரும் இக்கேள்வி அவனுக்கு சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. இதனூடு வாகனங்களின் தட்டுப்பாடு, எரிபொருள் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை ஞாபகமூட்டுகின்றான் போலும். "இல்லை இதை உடனே அனுப்பவும் மிச்சத்தை வந்தவுடன் பார்ப்போம" அவன் பதில் கூற உடனே வாகனத்தில் காயமடைந்தவர்கள் அனுப்பப்படுகின்றனர். இவன் நேரத்தைக் கணக்குப் பார்க்கின்றான். "காயமடைந்து மூன்று மணித்தியாலங்கள் கடந்து விட்டன. இந்த ரோட்டில் பயணிக்க நாலு மணித்தியாலங்கள் வேணும். வாகனமோ முற்றிய தொழுநோயாளிக்கு பிரியமில்லாமல் பணிவிடை செய்பவன் விரல்கள் போலவே வீதியில் பயணிக்க முடியும் என்ன செய்வது" மேற்படி எண்ணியவாறே மீண்டும் வரும் காயங்களை ஏற்க பொருட்களை தயார்படுத்தச் செல்கிறான். பின் அடுத்த வளவினுள் காய்ச்சல்காரர் இருக்கும் வீட்டிற்கு செல்கின்றான். அங்கு பதினைந்து பேர்வரை சிகிச்சை பெறுகின்றார்கள். பத்துப் பேரிற்கு மலேரியா, இருவரிற்கு வயிற்றோட்டம், மூவரிற்கு சாதாரண காயத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டு ஒவ்வொரு காலும் யானைக்கால் மாதிரி வீங்கி இருக்கிறது. மலேரியாவால் பாதிக்கப்பட்டவரில் இருவருக்கு அன்றுடன் மருந்து முடிகின்றது. ஆனால் அவர்கள் பலவீனமாக இருப்பதால் சில நாட்களாவது கட்டாய ஓய்வு எடுக்க வேண்டும். இப்படி எண்ணியபடியே அவன் அவர்களுக்குரிய சிகிச்சைகளை சரி பார்க்கையில் அப்பகுதிப் பொறுப்பாளர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு இவனருகில் வருகிறார். "டொக்டர் காய்ச்சல் மாறினவை இருக்கினமோ? ரீம் டமேச்சாகப் போயிற்றுது பொய்சன் கவர்பண்ண ஆட்கள் காணாது" எனக் கேட்கின்றார்.

அவனுக்கு சங்கடமான நிலை உடல்நிலையைப் பொறுத்தவரையிலும் எவரையும் அனுப்பமுடியாது. ஆனால் கள நிலையைப் பொறுத்தவரையில் மருந்து முடித்த இருவரையும் அனுப்பலாம் என்ன செய்வது? அவன் யோசித்துக்கொண்டிருக்க அந்த இருவரும் "டொக்டர் நாங்கள் போறம் எங்களுக்கு மருந்து முடிஞ்சுது தானே?" கேட்கின்றார்கள். "சரி போங்கோ" என அரைமனதாய் சம்மதிக்கின்றான். ஏனையோரைப் பார்த்து "கவனமாக இருங்கோ, உங்கட பாதுகாப்பிற்கு நீங்கள் தான் பொறுப்பு. பின் தளங்களில் எவரும் காயப்படக்கூடாது என கட்டாய ஓடர் வந்திருக்குது". என இவன் கூறி அவ்விடத்தை விட்டு வெளியே வரவும், மீண்டும் செல் குத்தும் சத்தங்கள் கேட்க நிலவறை ஒன்றினுள் செல்கின்றான். செல்கள் இவர்கள் இருந்த பகுதியிலேயே சரமாரியாக விழுந்து வெடிக்கின்றன. நிலக்கீழ் அறை அதிர்கின்றது. குண்டுச் சிதறல்கள் மரங்களில் சடசடவென படும் சத்தம் கேட்கிறது. வெளியில் தலைகாட்ட முடியாத நிலை. சுமார் இருபது நிமிடங்களின் பின்னர் அமைதி ஏற்படுகின்றது. ஓட்டினுள் இருந்து தலை நீட்டும் ஆமைபோல் மெல்ல வெளியே வந்து பார்க்கிறான்.

சற்றுத் தொலைவில் இருந்த இன்னுமொரு நிலவறையில் வாசலில் இன்னும் புகை விலகவில்லை. அருகில் நின்ற தென்னைமரம் ஒன்று வட்டுடன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முறிந்திருந்தது. ஏனைய மரங்கள் தலைவிரி கோலமாக நின்றன. ஏதோ விபரீதம் அதில் நடந்திட்டுது என அவனுக்கு விளங்கியிருக்க வேணும் அவ்விடம் நோக்கி அவன் ஓட, "டொக்டர் ஓடி வாங்கோ... டொக்டர் ஓடி வாங்கோ" எவனோ ஒருவன் சத்தமிடவும் சரியாக இருந்தது. விரைவாய் ஓடி அந்த நிலவறையை அடைகின்றான். உள்ளே ஒரு போராளி கழுத்தின் வலது பக்கதில் காயத்துடன் கீழே படுத்திருக்கின்றான். இன்னுமொருவன் இதிலிருந்து இரத்தம் பீறிடாமல் பீல் கொம்பரசினால் அழுத்திப் பிடித்திருக்கின்றான். அவனைக் கண்டதும் அவன், "டொக்டர் நான் காயப்பட்டிட்டேன். எனக்கு வயித்துக்கு கீழே ஒன்றும் தெரியவில்லை. கால் கை ஒன்றையும் ஆட்ட இயலாமல் இருக்கு. உடம்பெல்லாம் எரியிறமாதிரி இருக்கு" அவன் ஈனக்குரலில் கூறுகின்றான். இவனோ உடனடியாக காயத்தைப் பரிசோதிக்கின்றான். பின் நீண்ட பலகை ஒன்றில் அவனைப் படுக்கவைத்து தலை ஆடாமல் இருக்க இரண்டு பக்கமும் மண்மூட்டை வைத்து ஆளையும் பலகையையும் சேர்த்துக் கட்டுகிறான். நெஞ்சைப் பரிசோதித்து மூச்சு விடுவதில் பிரச்சினை இல்லை என்பதனை உறுதிப்படுத்திய பின் "வாகனத்தைக் கொண்டுவந்து கொண்டு போங்கோ" கூறியபடியே காயப்பட்டவனின் முகத்தைப் பார்க்கிறான். இவனின் மூளையத்தினுள் அணுகுண்டு ஒன்று வெடிக்கின்றது. காயமடைந்தது ராஜன். அவனது தலைமயிரை கோதி விட்டவன் அதனூடு எதைக்கூற முனைந்தானோ தெரியவில்லை. மௌனமாக வெளியே வருகின்றான்.

தொதல் கட்டியைக் கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அன்றைய ஞாபகங்கள் மீண்டும் மீண்டும் அலைமோதிக் கொண்டிருந்தன. ஒரு மணித்தியாலத்தின் முன் கேள்விப்பட்டான், ராஜன் வீரச்சா எனும் செய்தியை. மெல்ல தொதலைக் சாப்பிடுகின்றான். அதன் ஒரு சுவையையும் நாக்கு மூளைக்கு அறிவிக்கவில்லை. போலும், ஆனாலும் அதிலிருந்து அகத்துறிஞ்சப்படும் சத்து தொடர்ந்தும் இவன் செய்யப்போகும் வேலைகளுக்கு சக்தி வழங்கும். அப்பொழுது விரைந்துவந்து ஒரு பிக்கப் நின்றது. அதிலிருந்து சில போராளிகள் இறங்கிக் குதூகலமாகச் சிரித்தபடியே இவர்களின் முகாமிற்குள் வருகின்றார்கள். வந்தவர்களில் ஒருவர் இவனிடம் வந்து, "என்ன டொக்டர் சுகமாக இருக்கிறீர்களா? என்ன உங்கட தோட்டத்துக்குள்ளையும் யானை புகுந்துட்டுதுபோல" எனக் கூறுகின்றான். அவன் மரத்தின் கீழ் வீழ்ந்து கிடக்கும் மாம்பழங்களைப் பார்த்தவாறு "டொக்டர் மாம்பழ ஜாம் சாப்பிட்டிருக்கின்றீர்களா? ஐம்பது மாம்பழம் வரும்போல கிடக்கு நாளைக்கு ஜாம் செய்வோம்." கூறியபடியே மாம்பழங்களை ஒரு இடத்தில் குவித்தான். இவனும் எதுவும் நடைபெறாததுபோல அவனுடன் சிரித்துக் கதைத்தபடியே மாம்பழங்களைச் சேகரிக்கத் தொடங்குகிறான். சூரியனும் நாளை உதிப்பதற்காக இன்று மறைகின்றது. இன்றைய சோகங்களும் இன்றைய மகிழ்ச்சிகளும் நாளையும் வரும்—

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# இலக்கினை அடைவதற்கன்றோ!



காலைப் பத்திரிகையில் அச்செய்தியைக் கண்ணுற்றபோது விபரிக்கமுடியாத எண்ணங்களால் நான் சூழப்பட்டபோது, என் மனக்கண் கடந்தகால எண்ணப்பதிவுகளின் பக்கங்களை விரைவாகப் புரட்டியது. ஓராண்டின் முன்னர் பூநகரி வெற்றிச்சமரின் பின்னர் அந்தப் போராளியின் அருகில் நின்று பணிவிடை புரிகிறேன். அப்பொழுது வெற்றியின் உணர்வுகளை மீறி அதற்காக விதையானவர்களின் எண்ணங்களும் அச்சமரில் தங்கள் அங்கங்கள் இழந்தவர்கள் எங்கள் கண்முன் வேதனையில் துடிப்பதும் என் எண்ணங்களை ஆட்கொண்டிருக்கின்றது. ஆயினும் எனது பணியைச் சலனமில்லாமல் செய்வதற்கு முயற்சிக்கின்றேன்.

அவன் தலையை அருகிலிருந்து வருடி விடுகின்றேன். 'இந்த நேரத்தில் இவனின் பெற்றோரோ அல்லது உடன் பிறப்புகளோ இவனிற்கு அருகில் இருந்தால் எவ்வளவு ஆறுதலாக இருக்கும்.' என எண்ணமிட்ட என்மனம், அப்படியான ஒரு எண்ணம் அவனுக்கு வராத அளவுக்கு நான் கவனமாக இருக்க வேண்டுமென என்னை எச்சரிக்கின்றது. மௌனமாக இருக்கும் அவனின் நிலையை அவதானிக்கின்றேன். பெருமளவு குருதி இழந்ததால் ஏற்பட்டிருக்கும் உடலின் சோர்விற்கும், ஒரு கால் இழந்த நிலையில் இருக்கும் அவனின் மன நிலைக்கும் உடல் அசையும் ஒவ்வொரு கணமும் அதில் ஏற்படும் வேதனைக்கும் இடையிலான ஒற்றுமைக்கும், அவனின் அனுபவம் நிறைந்த கண்களின் ஒளிர்விற்கும் இடையில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மாபெரும் வித்தியாசம் ஒன்று இருப்பதை என்னால் அவதானிக்க முடிகிறது. இதனால் அவனைப்பற்றி அறிய ஆவலுறுகின்றேன்.

கெரில்லாத் தாக்குதலிற்கான இராணுவ வரலாற்றில் சாதனை படைத்த இத் தாக்குதலின் வெற்றிக்குக் காரணமாக இருந்த வேவுப்புலிகளிற்குத் துணைப் பொறுப்பாளர் இவன் என அறிந்தவுடன் ஏனோ என் மனதில் திருப்தி ஒன்று ஏற்படுகின்றது.

"தம்பி அவனுக்குக் கனநேரமாக தண்ணி கொடுக்கயில்ல கொஞ்சம் "சூப்" எடுத்துக் கொடுங்கள்"

இவ்வாறு அருகிலிருந்த இன்னுமொரு போராளியை இவன் சுட்டிக்காட்டிக் கூறியபோது, நான் ஏதோ தவறிழைத்ததுபோல் என் மனசாட்சி என்னைச் சுடுகிறது. ஆயினும் இது சாத்தியமா? எனும் வினாவும் சேர்ந்தெழுகிறது. காடு மேடு என்று பாராது, பனி குளிர் என்று சோராது, கடும் இருளிலும் எதிரியின் குகைக்குள் வாசம் செய்து அவனின் சுவாச வீதத்தைக்கூட அளந்துவரும் இவ் வேவுப்புலி தன்காலை இழந்துவிட்டான். இனி இவனால் தொடர்ந்து இவ்வாறு இயங்கமுடியாது. ஓவியன் விழியிழந்தது போல், பாடகன் நாவிழந்தது போல், தன்பணிக்கு அவசியமான அங்கமிழந்திருக்கும் இப்புலி இந்நிலையிலும் எவ்வாறு ஏனைய போராளிகளின் நலனில் கவனம் செலுத்த முடிகிறது? இது சாத்தியமா? இந்த வேளையிலும் இவன் தன்னைப்பற்றிச் சிந்தியாது மற்றவர் நலனில் அக்கறை கொண்டு, அனைத்தையும் அவதானித்தவண்ணம் இருக்கிறானே! ஒருவேளை வேவுப்புலிகளிற்கு இது சாதாரண விடயமாகவும் இருக்கலாம்.

இவனின் திறனும் அனுபவமும் தொடர்ந்து இனிமேல் கிடைக்காது. என்ற இவனின் வீரமரணச் செய்தியை அறிந்தவுடன் எனது மனம் அவனின் தொடர்காலச் செயல்களின் சிந்தனையில் இருந்து விடுபடமறுக்கிறது.

முச்சக்கர நாற்காலியில் அவனை இருத்தி, மாடிப்படிகளின் வழியே மெல்ல இறக்குகின்றார்கள். ஒவ்வொரு படியிலும் இறங்கும்போது குலுங்குவதால் ஏற்படும் வலியுணர்வை, அவன் இமைகள் கண்களை மூடுவதில் இருந்தும், நெற்றி சுருங்குவதிலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகிறது. இப்பொழுது என்ன அவசரம்? ஏன் இவனை இவ்வாறு சிரமப்படுத்துகினம் என என்மனம் ஆதங்கம் அடைகிறது.

அவனிருக்கும் நாற்காலி இப்பொழுது விழுப்புண்ணேற்ற பெண் போராளிகளின் விடுதியினுள் நுழைகிறது. ஆம்! போராட்ட நகர்வில் கடினமான,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆனால் தவிர்க்க முடியாத சோகமான பல பக்கங்களில் இதுவுமொன்றுதான். எதிர்கால வாழ்வு பற்றி இனிமையான நிகழ்வுகளை நினைக்க வேண்டிய வயதில், இவர்கள் தங்கள் அங்கங்களை இழப்பதற்கான தேவையென்ன? பொதுவாக தங்கள் நகங்களைக் கூட அழகாகச் சீவி, வர்ணம் பூசி ரசிக்கவேண்டிய வயதில், இதற்கான அங்கங்களையே முழுமையாக இழந்திருக்கும் நிலை ஏன? உண்மையில் இவர்களைப் பார்ப்பவர்களின் உள்ளங்களை ஒரு முறையாவது இக்காட்சி உலுக்கி எடுக்கும் என்பதில் ஐயமில்லை. இவர்களை ஒவ்வொருவராகக் கடந்துசென்ற இவனின் நாற்காலி ஒரு கட்டிலின் அருகில் நிற்கிறது.

அங்கு நோக்குகையில் இதயத்தை ஏதோவொன்று பலமாகப் பிடித்து அழுத்துகின்றது. எப்படி— எப்படி— இவள் தாங்கப் போகிறாள்? இரண்டு கண்களும் வெண்துணிக் கட்டினுள், சூரியனையும், வெண்மேகங்கள் மறைப்பதுண்டு. ஆனால் அங்கு சிறிதளவாவது ஒளிக்கசிவிருக்குமே! ஆனால் இவளின் கண்கள் முழுமை யாகவல்லவோ மூடப்பட்டுள்ளது. அப்பொழுது அருகில் எவரோ கிசுகிசுப்பது, "ஒருகண் போட்டுது. மற்றதைப்பற்றி இப்ப சொல்ல இயலாதாம்" காதுக்குள் ஈயம் காய்ச்சி வார்ப்பதுபோன்று, அவர் வார்த்தைகள் கேட்போர் மனங்களை வதைக்கிறது. எனினும் என் பார்வை சற்று நகர்கிறது. மீண்டுமொரு இடி உறுதியென்னும் எண்ணச் சுவர்களைப் பிளக்கிறது. அவளின் வலது கரத்தில் ஒரு பகுதியைக் காணவில்லை.

"கடவுளே! என்ன இருந்தாலும் இப்படி நீ செய்யக்கூடாது".

சிதறியோடும் என் எண்ணங்கள் கூட்டினுள் கொண்டுவர அரும்பாடுபடுகையில், "அம்மா.. உன்ர அண்ணன் வந்திருக்கிறன்"

இவனின் உதடுகள் உதிர்த்த இச்சொற்கள் இதயத்தில் எரிமலையொன்றை வெடிக்க வைக்கிறது.

அப்படி இருக்கவே கூடாது.

என் மனம் இதை ஏற்க மறுக்கிறது. "எப்படி இவனால் இதைத் தாங்க முடியும்? ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள் ஒரே சமரில் தம் இதழ்களை இழப்பதா? தன் தங்கையின் நல்வாழ்வைக் கண்குளிரக் காணவேணுமென சராசரிச் சகோதரர்கள்போல இவனும் எண்ணியிருப்பானே, இவள் இன்று கண்ணிழந்து காணப்படுகிறாளே! இவள் தன் பிஞ்சுக்கரங்களால் செல்லமாய் இவன் கன்னத்தில் எத்தனை தடவை அடித்திருப்பாள்? இன்று அக்கைகளில் ஒன்றைக் காணவில்லையே! அவளுக்கு சிறு தலையிடி என்றாலேயே இவன் தன்கால்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நிலத்தில் நிற்க முடியாமல் பதைபதைத்திருப்பானே! இன்று அவனால் அதைக்கூடச் செய்ய முடியாதே! என்ன! எமனுடனேயே சளைக்காமல் போர் புரியும் இச்சத்திர சிகிச்சை நிபுணரின் கண்களும் பனிக்கின்றனவே! எங்களாலேயே தாங்க முடியவில்லை. இச்சோக நிகழ்வை இவன் எப்படித் தாங்கப் போகிறான்? வார்த்தைகளால் வரைக்க முடியாத இச்சோக நிகழ்வினூடு அண்ணனையும் தங்கையையும் மாறிமாறி அவதானிக்கிறேன். சிலவேளை அண்ணனின் இந் நிலையைக் கண்டு தங்கை அழுதிருக்கலாம்: அல்லது இவனுக்கும் அவள் ஆறுதல்கூற முற்பட்டிருக்கலாம். ஆனால் அதற்குத் தானே இப்பொழுது அவனால் முடியாது. ஆனால் அவளின் குப்பி கடிக்கத் துணிந்த உதடுகள், ஏதோ சொல்லத் துடிப்பதை உணரமுடிகிறது. தங்கையின் மறுகரத்தைப் பற்றும் இவன், அவளிற்கு அதனூடு எதையோ சொல்ல முற்படுகிறான் போலும். இருவருமே எதுவும் கதைக்காத ஒரு மௌன நிலையில், சிறிது நேர இடைவெளியின் பின்,

"தங்கச்சி! இப்ப எங்களைத் தலைவன் வளர்க்கிறான். நாங்கள் புலிகளல்லவா"

எதுவித சலனமும் இல்லாமல் இவன் உதடுகளின் மூலம் வெளிப்படும் உணர்வுகள், எங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது.

ஆம்! எவ்வளவு உறுதியானவர்கள் இவர்கள். இவ்வாறான எத்தனையோ நிகழ்வுகள் பலருக்குத் தெரியாமலே தமிழீழ மண்ணில் அரங்கேறுகின்றன. இவை எல்லாம் எம் இலக்கினை அடைவதற்கன்றோ!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கண்ணீர் துடைப்பது எது ?



உரமேறிப் பின் சோர்ந்த கையின் நாளத்தினூடு உட்செலுத்தப்பட்டுள்ள 'வென்புளோன' ஊடாக 'ஸ்ரிஞ்சில்'எடுக்கப்பட்ட மருந்தானது ஏற்றப்படுகின்றது ஒரு கையில் 'லறிஞ்சியல்ஸ்கோப்பை' பிடித்தப்படி கண்வெட்டாமல் சத்திரசிகிச்சைக்கான மேசையில் கிடத்தப்பட்டுள்ளவனின் நெஞ்சறையைப் பார்க்கின்றாள், அவனின் தசைநார்கள் தோலின் கீழாக மண்புழுக்கள் நெளிவது போல் அசைந்து தளர்ந்து ஓய்விற்கு வருகின்றன . உடனடியாக இவள் அவனது நாடியை உயர்த்தி வாயைத் திறந்துசிறு ஒளியை வெளிப்படுத்தும் லறிஞ்சியல்ஸ்கோப்பை' உட்செலுத்துகின்றாள். மூச்சுக் குழல்வாய் மூடியை - மேல் நோக்கி உயர்த்தி குரல் நாண் இடைவெளியை அடையாளம் காண்கின்றாள். உதவியாளரிடமிருந்து ஈ. ரி. ரி. ஐ. மறுகையால் வேண்டுகிறாள் அதனை ஊசியில் நூல் காக்கும் அவதானத்துடன் எனினும் சற்றுப் பரபரப்போடு வாதனாளியினூடு செலுத்துகின்றாள். வேகமாக அதனுள் இருக்கும் கம்பியை வெளியேடுக்கின்றாள். வேகமாக 'அம்பு பாக்கை' அந்த ஈ.ரி.ரியின் வெளிமுனையின் பொருத்தி இருபக்கமும் அமத்துவதனூடாக கனிசமான காற்றை நோயாளியின் நுரையீரலினுள் செலுத்துகின்றாள். காற்றானது உரிய முறையில் சுவாசத் தொகுதியைச் சென்றடைவதை மார்பின் அசைவை அவதானித்து உறுதிப்படுத்துகின்றாள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

'ஸ்ரெதஸ்கோப்'பின் உதவியால் சுவாசத்தின் சமச்சீரையும் உறுதி செய்கின்றாள். இவ்வளவு நேரமும் பரபரப்பு நிறைந்த மன அழுத்தத்துடன் தனது மூச்சையும் கட்டுப்படுத்திச் செய்கின்றாள். பெருமூச்சொன்றின் மூலம் திருப்தியை வெளிப்படுத்துகின்றாள். ஒவ்வொரு முறையும் இவ்வாறு செய்யும்போது சிறுபதட்டம் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் இருக்கின்றது 'டொக்டர் அன்ரி படிப்பிக்கேக்க, இதில சிறு தவறு நடந்தாலும் நோயாளியின் உயிர்க்கு ஆபத்து வருமென்பதும் அதற்கு நாங்கள் தான் முழுப் பொறுப்பு என்றதும் ஞாபகம் வந்து அச்சுறுத்துகின்றது.

இனி நீங்கள் ஆரம்பிக்கலாம் என்பதுவாக சத்திரசிகிச்சைக்கான மருத்துவரை நிமிர்ந்து பார்க்கின்றாள். இதனை எதிர்பார்த்திருந்தவர் போல் மருத்துவர் நோயாளியின் வயிற்றறையை வெட்டித் திறக்கின்றார். பெருகும் இரத்தத்தை ஒத்தி எடுத்து அவர்க்கு உதவி செய்து கொண்டிருக்கின்றான் வாணன். கண்கள் தவிர்ந்த ஏனைய உடற்பகுதிகள் அனைத்தும் மூடப்பட்ட அவர்களின் தோற்றமும், பல்வகைப்பட்ட மருத்துவ இலத்திரனியல் உபகரணங்களின் மென்னிரைச்சலும், பச்சை இரத்தத்தின் மணமும், சற்றுத் தொலைவில் கேட்கும் துப்பாக்கி வெடிகுண்டுச் சத்தங்களும், அவர்களின் உரையாடல் என்பனவும் சேர்ந்த இனம் பிரிக்க முடியாத இயல்பு நிலை மாற்றமொன்றைப் பிரசவிக்கின்றன.

வயிற்றறையில் இருந்து வெளியெடுக்கப்பட்ட குடலானது கையுறையிடப்பட்ட கரங்களினூடு சாரைப் பாம்பொன்றைப் புகவிடுவது போல் நகர்த்தப்படுகின்றது. அப்பொழுது அது சில இடங்களில் சேதமடைந்திருப்பது அவதானிக்கப்படுகின்றது. "டொக்டர் சிக்கலா?" மயக்க மருந்தைத் தொடர்ந்து கொடுத்தவண்ணம் கேட்கின்றாள். "இல்லை இதை றிப்பெயர் பண்ணுறதோட கொலஸ்ரமி செய்தால் சரி" என்றவர் சிகிச்சையின் நுணுக்கமான பகுதியினுள் அமிழ்ந்து போகின்றார். சேதமடைந்திருக்கும் குடலின் பகுதியானது வெட்டியகற்றப்பட்டு மிகுதி மீளவும் பொருத்தப்படுகின்றது. இப்பொருத்துதலில் சிறு இடைவெளி ஏற்பட்டு குடற் பதார்த்தங்களில் சிறிதளவேனும் வெளியில் வருமெனில் சகலதும் தோல்வியில் முடிந்துவிடும் சிகிச்சையின் பிரதான பகுதி மிகுந்த கவனத்துடன் செய்து முடிக்கப்படுகின்றது.

"நாங்கள் ஓயாத அலைக்கு - 01க்கு கஸ்ரப்பட்ட மாதிரி பிறகு கஸ்ரப்பட இல்லைத்தானே" "ஓமோம்" அவர்களின் குரலில் ஒருவித பெருமிதம் தெரிகின்றது. "இந்தச் சண்டையும் 'சக்சஸ்' என்றால் அவன்ர திட்டமெல்லாம் தூள்தூளாய்ப் போயிடும். பிறகென்ன யாழ்ப்பாணத்திற்குள்ள புகவேண்டியதுதானே." என அவள் கூற "அதனை அவர் அல்லவோ தீர்மானிக்க வேண்டும்" எனக் கூறியபடியே அவன் தலையை மேலே உயர்த்துகின்றான். "என்ன! இவனுக்கு திடீரென கடவுளில் நம்பிக்கை வந்திட்டு[illegible] அவனின் பார்வையின் திசையை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நோக்குகின்றாள். அங்கு சுவரில் தலைவரின் படம் ஒன்று காணப்படுகின்றது. இவ்வாறு காயக்காரர்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டியவுடன் இவர்களிடையே ஏதாவது உரையாடல்கள் தொடங்குவது வழமையானதே ஒவ்வொரு காயக்காராக சிகிச்சை முடித்து வெளியேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். "அக்கா இப்ப தங்கச்சி எங்க நிக்கிறா?" "ஏன் இப்ப கேட்கிறாய்?" "இல்லை நீங்கள் அழுதழுது 'கேஸ்' செய்தது ஞாபகம் வந்திட்டுது." "ஏன் உனக்கு நக்கலாக இருக்கா?" "இல்லையக்கா தங்கச்சி சீரியஸ் என்று கேள்விப்பட்ட பிறகும் நீ அழுதாலும் உன்ர கடமையைச் செய்தனியல்லோ. அதவச்சு நான் ஒரு கதை எழுதலாம் என்று இருக்கிறன்." "நீ இந்தியப் படங்களுக்கும் கதைவசனம் எழுதலாம்" எனச் செல்லமாகக் கோவித்த வண்ணம் காயக்காரனின் குருதியமுக்கத்தை அளக்கின்றாள். பின்னர் ஏறிக்கொண்டிருக்கும் திரவ ஊடகத்தின் வேகத்தை சற்று அதிகரிக்கின்றாள். திடீரென்று ஏதோ யோசித்தவள். "வாணன் ஸ்பிளீனக்ரமி செய்தவையளுக்கு மூன்றுமாதம் ரெஸ்ற் கொடுக்கிறனாங்கள் தானே" எனக் கேட்கின்றாள். "அதில என்னக்கா திடீரென்று சந்தேகம் வந்திட்டுது?" "இல்ல இவள் காயப்பட்டு இப்பத்தான் இரண்டு மாதம். அதுதான் கேட்கிறன்." "என்னக்கா சுயநலம் எட்டிப் பாக்குது போலக் கிடக்குது?" "உனக்கு சகோதரங்கள் இருந்தால் தானே பாசம் புரியும்....." "ஓமோம் அதென்றால் நியாயம் தான்" அவனின் குரலிலும் ஏதோவொரு ஏக்கம் வெளிப்படுகின்றது. அவர்களும் வேலை செய்யத்தொடங்கி இரண்டு நாட்கள் கடந்து விட்டதால் களைப்பை பார்வையும் குரலும் வெளிப்படுத்தவே செய்கின்றது.

'என்ன?... என்ன?.... உண்மையாகவா? மொத்தம் எத்தனை பேர? என்ன முழுப்பேருமோ? குறித்த அறைக்கு வெளியில் ஏற்பட்ட பரபரப்புடன் கூடிய குரல்கள் சூழலின் இயல்பைத் தாண்டி இவர்களின் செவிப்பறைகளில் மோதுகின்றன. இரத்தச் சிவப்பேறிய கண்களில் 'என்னவாம்' எனும் வினாக்குறி தொக்கியது. "நான் கேட்டிட்டு வாறன்" எனக் கூறியபடியே ஒரு போராளி வெளியேறுகின்றான். மீண்டவன் கூறிய செய்தியால் அனைவரும் ஒருகணம் பனியில் உறைந்த பிணங்களாயினர். "எங்கட மெயின் மெடிசினுக்கு கிபிரால சாத்திப்போட்டானாம். முழுப்பெரும் மாட்டிட்டினம் போலக்கிடக்கு" "ஏன் கிபிர் வரேக்க ஓடத் தெரியாதாம?" "நீங்கள் இப்ப கிபிர சுத்துறான் என்றால் ஓடுவீங்களா?" தனது கேள்வியின் நியாயமின்மையைப் புரிந்து கொள்கின்றாள். இதன் தாக்கத்தினால் அவர்களின் இரத்தத்தில் சோர்வு கலப்பது தவிர்க்க முடியாமல் இருக்கின்றது. "சரி சண்டை என்ன மாதிரிப் போகுதாம்?" "ஆனையிறவிற்குள்ள போன கரும்புலிகளின்ர தொடர்பும் இல்லையாம். கிளிநொச்சி நோக்கி சக்கை கொண்டுபோன பவளும் பண்டில் ஏறேக்க பிரண்டிட்டுதாம்" அடுத்தடுத்து வந்த செய்திகள் இடிகளாக இறங்கின. இழப்புகள் பிரச்சினை இல்லை பழகியவை தான். ஆனால் தோல்விகள் சோர்வையல்லவா பரிசளிக்கப் போகின்றன. எது எப்படியோ வெற்றி தோல்விகள் இவர்களின் பணியைப் பாதிக்க முடியாது. அவர்கள் வலிந்து தங்களிற்குள் உற்சாகத்தை ஏற்படுத்திக் கொள்ளமுயற்சிக்கின்றார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"லைற்றைச் சரியாகப் பிடியுங்கள்." மருத்துவரின் குரலில் வெறுமை தெரிகிறது. அப்பொழுது தான் அப்போராளி தனது பிழையை உணர்கின்றான். வயிற்றறையின் ஆழமான பகுதியினுள் பெருகிக் கொண்டிருக்கும் குருதியைக் கட்டுப்படுத்துவதற்காக அவர் முயன்று கொண்டிருக்கின்றார். குறித்த இடத்திற்கு 'மக்ரோச்' வெளிச்சம் பாய்ச்சினால் தான் அது சாத்தியம். ஆனால் அவன் அதில் தவறி விட்டிருந்தான். மருத்துவப்பிரிவு மிகப் பெரிய இழப்பைச் சந்தித்துவிட்டது. பல வருடங்களாகப் பழகியவர்கள் ஒரு நொடியில் மறைந்துவிட்டனர். எப்படியும் இவர்கள் தங்கள் கடமை முடித்து தளம் திரும்புகையில் அவர்களின் வீரச்சா நிகழ்வுகள் முடிவடைந்திருக்கும். இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பிள்ளையின் வீரச்சாவிற்கு அழ முடியாத பெற்றோர்கள் போலவே இவர்கள் காணப்படுகின்றார்கள். எனினும் நாளும் காயங்களையும் இறப்புகளையும் சந்தித்தால், தங்களின் மனங்கள் இறுகிவிட்டன. எனும் எண்ணத்தை சிலரில் கட்டுப்பாடின்றி வரும் கண்ணீர் அடித்துச் செல்கின்றது. இதயபாரம் அதிகரிக்க மேலுமொரு நாள் விடைபெறுகின்றது.

இடையில் கிடைக்கும் சிறு சிறு நேர இடைவெளிகளில் கதைக்கக்கூடிய காயக்காரர்களிடமிருந்து களநிலவரங்களை அறிந்து கொள்கின்றார்கள். வெளியில் சென்றவள் உள்ளே வரும் போது விக்கி விக்கி அழுதவண்ணம் வருகின்றாள். இதனைக் கண்ணுற்றவர்கள் திடுக்கிடுகின்றார்கள். "என்ன...என்ன...நடந்தது?" இவனின் கேள்விக்கு எவ்வித பதிலும் சொல்லாமல் அழுகின்றாள். வாய், மூக்கை மூடிக் கட்டியிருக்கும் 'மாஸ்க்கை' பொல பொலவென வழியும் கண்ணீர் நனைக்கின்றது. "டொக்டர்! ஸ்பிளீனக்ரமி செய்தவர்கள் உடன சண்டைக்குப் போகமாட்டினம் தானே." தெளிவாக விடை தெரிந்த கேள்வியையே அவள் கேட்கின்றாள். இவனுக்கும் ஏதோ விளங்கின மாதிரி இருந்தது. "எப்படி நடந்தது?" இவனின் கேள்விக்கு வெறித்துப் பார்த்தவண்ணம் பதிலளிக்கின்றாள். "இவள் ரெஸ்ரில இருக்கேக்க பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுத்திருக்கிறாள். அந்த ரீம் இறங்கேக்க தானும் போகப்போறன்'என்று கேட்டு சண்டைக்குப் போயிருக்கிறாள்" "ஏன் பொறுப்பாளருக்கு தெரியாதாமா?" "இல்லை இவள் மறைச்சுப் போட்டாள்." இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது இன்னொருவன் கேட்கிறான். "டொக்டர் அடுத்த கேசை ஏத்தட்டுமா?" தனது தலையசைப்பின் மூலம் அனுமதி கொடுத்தவர் தொடர்கின்றார். "அவ சண்டைக்குப் போனவாவெண்டு வடிவாத் தெரியுமா?" "அவளோட ரீமில இறங்கின பிள்ளை காயப்பட்டு வந்திருக்கு. ஆள் சொன்னது அவள் தனக்குப் பக்கத்தில தான் காயப்பட்டவ என்றும் ஸ்பொட்டிலேயே வீரச்சாவென்றும்" தொடர்ந்து அவளால் கதைக்க முடியாமல் போகின்றது.

இப்பொழுது அடுத்த காயக்காரனையும் மேசையில் ஏற்றி விட்டார்கள். "நான் இயக்கத்திற்கு வந்திட்டன் எண்டுதான் அவளும் வந்தவள். 'கம்பஸ்'

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிடைச்சவுடன் நான் போய்ப் படியன் என்று சொன்னான் அதற்கும் மாட்டன் எண்டு போட்டாள்." எல்லாரும் மௌனமாக நிற்க கதைத்தபடியே அடுத்த சிகிச்சைக்குரியவனுக்கு மயக்கமருந்து கொடுப்பதற்கான ஆயத்தத்தில் ஈடுபடுகின்றாள்.

"நீங்க போய் ரெஸ்ற் எடுங்க. நான் ஈ. ரி. ரிஐப் போட்டுட்டு மற்றவர்களை வச்சுச் சமாளிக்கிறன" என மருத்துவர் கூறுகின்றார். "இல்லை டொக்டர் நீங்கள் ரெண்டையும் கவனிக்கிறது கஸ்ரம். பிரச்சினை இல்ல. நான் அனஸ்த்தீசியாவைக் கொடுக்கிறன்" கண்ணீரைத் துடைத்தபடி ஸ்ரிஞ்சில் மருந்தை எடுக்கின்றாள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

குறிப்பு:-

ஈ. ரி. ரி. – செயற்கைச் சுவாசம் கொடுப்பதற்காக சுவாசப்பாதையினுள் செலுத்தப்படும் குழாய்.

வென்புளோன்– குருதி திரவ ஊடகம் மருந்து என்பனவற்றை நாளத்தினூடு இலகுவாக ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் உபகரணம்.

ஸ்பிளீனக்ரமி– சத்திரசிகிச்சை மூலம் மண்ணீரல் வெட்டி அகற்றுதல்.

அனஸ்தீசியா – மயக்க மருந்து.

# களமருத்துவ அதிர்வுகள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஜெயசிக்குறு பெருஞ்சமர் ஆரம்பித்து அரையாண்டு கழிந்துவிட்டிருந்தது. அந்தப் பிரதான மருத்துவமுகாம் முன்னரணில் இருந்து 1.5km பின்னாலும் கண்டிவீதிக்கு மேற்காக 1km விலத்தியும் அமைந்துள்ளது பாரிய நிலக்கீழ் அறையும் அதனுள் சத்திர சிகிச்சைக்கான மேசை, குளிர்சாதனப்பெட்டி, 15 காயக்காரர்களை வைத்துப் பார்ப்பதற்கான இடவசதி, அவசியமான மருத்துவப் பொருட்கள் என்பன உரிய முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன. வெளிப்புறமாக சிலமீற்றர் இடைவெளிகளில், திறந்த பதுங்கு குழிகள் பாரிய மரங்களின் கீழ் வெட்டப்பட்டிருந்தன. காட்டுத்தடிகள் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் இருக்கைகள் சூழலை இசைவாக்கும் மனப்பாங்கை வெளிப்படுத்தின. முகாமைச் சுற்றிவர இரகசியப் பதுங்கு குழிகளும், காவலரண்களும் அமைக்கப்பட்டிருந்தன. இவை அம்முகாம் முற்றுகைக்கு உள்ளாகலாம் எனும் அபாயத்தையும், அதனை முறியடிப்பதற்கான முன்னேற்பாட்டினையும் புலப்படுத்தின.

அதிகாலை அமைதியாகத்தான் விடிந்திருந்தது. எனினும் இது வெப்பமேற்றும் வெடிமருந்துக் குவியல்மேல் அமர்ந்திருப்பது போன்ற மனநிலையையே ஏற்படுத்துகின்றது. "நீயா", "நாணா" எனும் இச்சமர் ஒவ்வொரு முறையும் பெருமெடுப்பில் வெடிப்பதும், பாரிய உயிரிழப்புக்கள், காயங்கள், தகர்ப்புகள் எனத் தொடர்வதும், பின்வாங்கல்கள், முன்னேற்றங்கள், சுற்றிவளைப்புக்கள் ஆகிய போரியல் அம்சங்களை உள்ளடக்கி ஓய்வதும் வழக்கமாகிவிட்டது.

இயற்கைக்கடன் கழிப்பதற்காக ஒரு கையில் மண்வெட்டியும் தண்ணீர்க்கலனும், மறுகையில் துப்பாக்கியும் கொண்டு சிலநூறு மீற்றர்கள் காட்டினை

ஊடுருவி அப்போராளி பற்றை மறைவை நாடுகின்றான். சிலமீற்றர் தொலைவில் கரந்துறைந்திருக்கும் பகை இராணுவவீரர் மூவர், தங்கள் துப்பாக்கிகளினால் இவனைக் குறிபார்த்தவண்ணம் கண்காணிக்கின்றனர். ஏதேட்சையாக இவன் பார்வையில் அவர்கள் பட்டுவிட்டனர். இவன் மண்வெட்டியைப் போட்டுவிட்டு துப்பாக்கியை நீட்ட முதல் அவர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் சடசடத்து விட்டன. இவன் கையிலும் மார்பிலும் குண்டடிபட்டு விழுகின்றான். விழுந்த வண்ணம் பகைவரை நோக்கி படபடவென தொடர் சூட்டினை மேற்கொள்கின்றான். அவர்கள் இவனை நோக்கி கைக்குண்டொன்றை வீசிவிட்டு மறைந்து விடுகிறார்கள்.

அன்றைய நாளிற்கான சண்டை தொடங்கிவிட்டது. இவர்களின் மருத்துவ முகாமினுள்ளும் அதனைச் சுற்றிவரவும் எறிகணை மழை பொழிந்தவண்ணம் உள்ளது. சில நூறு மீற்றர் இடைவெளியில் துப்பாக்கிகள் சடசடக்கின்றன. இவர்களை நோக்கிவந்த மருத்துவ வாகனத்தின் பின்பகுதியில் எறிகணை விழுந்து வெடிக்க, அது சிதைய, சாரதி மயிரிழையில் உயிர் தப்புகின்றான். போர்ப்புயலால் மரக்கொப்புகளும், கிளைகளும் முறிந்து விழுகின்றன. இவர்களுக்கு நிலமை விளங்கிவிட்டது. இரவோடு இரவாக இரகசிய நகர்வை மேற்கொண்ட பகைவன், இம்மருத்துவ முகாமை பக்கங்களால் மேவிவிட்டான். அதேநேரம் எறிகணைகளை செறிவாக வீசியவாறும், மிகையொலி விமானக் குண்டுவீச்சுக்களை மேற்கொண்ட வண்ணமும், ராங்கிகளைக்கொண்டு மூர்க்கமாக மோதியும் முன்னரண்களை உடைத்து, முன்னரே வந்திருந்த சக படைவீரர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி விட்டான். இப்போது கணிசமான போராளிகள் முற்றுகையினுள் அகப்பட்டு விட்டனர்.

நிலைமையைச் சரியாகக் கணித்த பீரங்கிப் பிரிவினர், இவர்களை எதிரி அண்மிக்க விடாமலும், மேலும் முன்னேற்றத்தைத் தடுக்கும் விதமாகவும் எறிகணை வீச்சைத் துல்லியமாக வழங்கிய வண்ணம் இருந்தனர். இம்மருத்துவ முகாம் காயமடைந்தவர்களால் நிரம்பத் தொடங்கிவிட்டது. அவசர முதலுதவிகளைச் செய்து பின்னால் அனுப்பமுடியாத நிலை. பின்தளத்திற்கும் இவர்களிற்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. இருக்கும் வசதிகளைக் கொண்டு விழுப்புண் அடைந்தவர்களைப் பாதுகாக்க வேண்டியதுதான். ஒழுங்குபடுத்தப்படும் சேம இருப்புப் படையணிகள் வந்து முற்றுகையை உடைத்து தொடர்பெடுத்தால்த்தான் இவர்கள் தப்பலாம்.

பிரதான பதுங்கு குழியினுள் வைத்து அவசர சிகிச்சைகளைச் செய்து, பின்னர் காயக்காரர்கள் வெளியில் கொண்டுவரப்பட்டு திறந்த பதுங்கு குழியினுள் கிடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு மேலாக முறியும் கொப்புகளும், கொட்டுண்டும் இலைகளும் வீழ்ந்தவண்ணம் உள்ளது. சில பதுங்கு குழியினுள் நேரடியாக வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளால் சிலர் மீண்டும் மீண்டும் காயமடைகின்றார்கள். இன்னும் சிலர் வீரச்சாவு அடைகின்றனர். சமர் தன் போக்கில் அகோரத் தாண்டவம் ஆடுகின்றது.

மருத்துவப் போராளிகள் ஓடி ஓடி பம்பரமாய்ச் சுழன்றவண்ணம் பணியாற்றுகின்றார்கள். சீறிவரும் எறிகணைகளுக்கு இடைப்பட்ட நேரங்களில் காயமடைந்தவர்களின் இரத்தப் பெருக்கை நிறுத்துவது, திரவ ஊடகம் ஏற்றுவது, பதுங்கு குழியினுள் அவர்களை இழுத்துச் செல்வது. எனச் செயற்பாடு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொடங்குகின்றது. உயிர்காத்தலுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதால் மருத்துவத்தின் மென்மையான பகுதிகள் கைவிடப்பட்டு கடினப்போக்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஒருவருக்கு வயிற்றில் பாரியகாயம். அவசரமாக முதலுதவியும் ஆரம்பசிகிச்சைகளும் செய்யப்பட்டுவிட்டது. இரத்தம் ஏற்றினால் சில மணிநேரம் உயிர்தக்க வைக்கலாம். முற்றுகை உடைபட்ட பின்னர் பின்தளத்திற்கு அனுப்பி மேலதிக சிகிச்சையை மேற்கொள்ளலாம். அவனைக் கவனிப்பது, ஏனைய பாரிய காயமுடையவர்களுக்கு சிகிச்சை செய்வது, சந்தர்ப்பம் வந்தால் உடன் முதலில் அனுப்பப்பட வேண்டியவர்களைத் தரம் பிரிப்பது என பிரதான மருத்துவப் போராளி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றான்.

எதிரி வாசலை அண்மித்துவிட்டான். குண்டுகள் வெடிக்கையில் காற்றை விரிப்பதால் ஏற்படும் அழுத்தம் நெஞ்சறையைத் தாக்குகின்றது. சமர் ஆடுகின்றவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டும், விழுப்புண் ஏற்பவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டும் இருக்கின்றது. ஆனால், நடைபெறும் யுத்தத்திற்கும் தங்களிற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்ற மாதிரி மருத்துவப்போராளிகள் செயற்படுகிறார்கள். "டொக்ரர் இரத்தம் ஏற்றத்தான் வேண்டும்" ஒரு களமருத்துவன் மீண்டும் வலியுறுத்துகிறான். "என்னில எடுங்கோ" இன்னொரு போராளி கட்டிலில் ஏறிப் படுக்கின்றான். அவனிலிருந்து இரத்தம் எடுக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு வயிற்றுக் காயக்காரருக்கு ஏற்றப்படுகிறது. எப்படியும் முற்றுகை உடையும், சில மணித்தியாலங்கள் தாக்குப்பிடித்தால் போதும். இவனைத்தப்ப வைத்துவிடலாம். போர்க்களத்தில் பங்குபற்றிக் கொண்டிருப்பவர்களில் இருந்து இரத்ததானம் பெறுதல் என்பது போர்மருத்துவக் கோட்பாடுகளுக்கு முரணானது. ஆயினும் அதனைச் செய்கிறார்கள்.

"டொக்டர், ஆளுக்கு நெஞ்சுக்காயம் I.C.D ரியூப் போடவேண்டும்" ஒருவன் அழைக்க பிரதான மருத்துவப் போராளி தான் செய்துகொண்டிருந்த சிகிச்சையை இன்னொருவரைச் செய்யுமாறு பணித்துவிட்டு அவனிடம் செல்கிறான். நோயாளியின் விலா என்புகளுக்கிடையேயான தோலை வெட்டி, தசையில் ஓட்டை போட்டு, இறப்பர் குழாயை உள்ளே செலுத்த, நெஞ்சறைக் குழியினுள் வெளியேறித் தேங்கியிருந்த இரத்தம் எ.ஃறிப் பாய்கின்றது. "இதனை இப்படியே கட்டு" இன்னொரு போராளியிடம் ஒப்படைக்கின்றான். "டொக்ரர், (F)பெமறல் ஆட்றி அறுத்து இரத்தம் பாயுது" இன்னொருவன் கத்த, இவன் அவ்விடம் நோக்கி, கிடத்தப்பட்டுள்ள காயக்காரர்களைக் கடந்து பாய்ந்து ஓடிச் செல்கின்றான். எவ்வித வலி நிவாரணியும் கொடுக்காமல், அறுந்த பிரதான தொடைநாடியை அழுத்திப்பிடித்த வண்ணம் "போசப்ஸைத் தா" கையை நீட்ட ஒருவன் அதனை எடுத்துக் கொடுக்க, அதனால் அந்நாடியை அமத்திப்பிடித்து நசித்து 'கற்கட்' நூலினால் கட்டுகின்றான். "நல்லா பிலீற் பண்ணிட்டுது. இரண்டு காற்மன்ஸ்ஸைப் பிழிந்து ஏத்திப்போட்டு பங்கரில கொண்டுபோய்க் கிடத்துங்கோ பிறகு பார்ப்பம்" கட்டளைகளைப் பிறப்பித்தவண்ணம் ஏனைய காயக்காரர்களைப் பார்க்கப்போகிறான். வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் ஒரு பக்கமாகக் கிடத்தப்படுகின்றன. மருத்துவவளம் முடிவடைகின்றது. மணித்தியாளங்கள் நகர நகர இவர்களின் செயற்பாட்டு வீதம் குறைவடைகின்றது.

'அடுத்தடுத்த நிமிடங்களில் என்ன நடக்கும்?' சொல்லமுடியாத நிலை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திடீரென ஒரு எறிகணை வீழ்ந்து வெடிக்க மின்பிறப்பாக்கி மூச்சடங்கிவிட்டது. அவ்வளவுதான். பிரதான பதுங்கு குழியினுள் மின்னொளி அணைந்துவிட்டது. 'ரோச்' வெளிச்சத்தில் மருத்துவப்பணிகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன.

முற்றுகை உடைக்கப்படுவதும், மீண்டும் எதிரியால் மூடப்படுவதும் என கள நிலவரம் அடிக்கடி கைமாறிக் கொண்டிருக்கின்றது. சமரின் போக்கு நம்பிக்கைதர மறுக்கின்றது. கந்தகப் புகையினால் அச்சூழல் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. கிராபிக்ஸ் தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட ஆங்கிலத் திரைப்படச் சண்டைக்காட்சிகளை தோற்கடிப்பதாக நிகழ்வுகள் அரங்கேறுகின்றது. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, விரைந்துகொண்டிருந்த களமருத்துவரை இன்னொரு போராளி கூப்பிட்டுச் சொல்கிறான், "அந்தப் போராளிக்கு மீண்டும் இரத்தம் ஏற்ற வேண்டும், B.P குறைகிறது" இப்போது என்ன செய்யமுடியும்? ஒன்றும் செய்யமுடியாது. அருகில் கிடந்த போராளியின் மூச்சும் நின்றுவிட்டது. அவனுக்கு இரு போராளிகள் செயற்கைச் சுவாசம் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். இவன் அவனருகில் சென்று பார்க்கின்றான். அப்போது இவனது காலைத்தட்டி, "டொக்ரர் டொக்ரர்" என வயிற்றுக் காயக்காரப் போராளி கூப்பிடுகின்றான். இவன் சங்கடத்துடன் அவனைத் திரும்பிப் பார்க்கின்றான். அவன் இவனைப் பார்த்து மிகவும் கஷ்டப்பட்டுக் கூறுகின்றான், "டொக்ரர், எனக்காக நீங்கள் சரியாக் கஸ்டப்படுறீங்கள், உங்களுக்கு நன்றி டொக்ரர். நான் தப்பமாட்டன், என்னோட மினக்கிடாம தப்பக்கூடிய போராளிகளைக் கவனியுங்கோ" இவனை இடி தாக்கியதுபோல் உணர்கிறான். இவன் காலை மடித்து முழங்காலில் இருந்து அவன் தலையைச் சற்று ஆறுதலாக தடவி விடுகின்றான். "நாங்கள் எப்படியும் உன்னைக் காப்பாற்றுவம். இன்னும் கொஞ்ச நேரத்தில சப்ளை கிடைச்சுடும். உன்னைத்தான் முதலில பின்னுக்கு அனுப்புவம்" கூறியவன் அடுத்த காயக்காரனைப் பார்க்க எழுந்து நடக்கிறான்.

அப்போது முற்றுகையின் சிறுபகுதி உடைக்கப்பட்டு மருத்துவ முகாமிற்கான விநியோகப் பாதை எடுக்கப்படுகின்றது. அதனூடாக ஒரு மொட்டை ஜீப்பொன்று, விழுந்து · வெடிக்கும் எறிகணைகளை அலட்சியம் செய்தபடியே புகைமூட்டத்தினூடாக குன்றும் குழியுமான வீதியில் பாய்ந்து பாய்ந்து வருகின்றது. வந்த ஜீப் 'கிறீச்' என பிறேக் பிடித்து நிற்கின்றது. பார்த்தவர்களுக்கு தலைசுற்றுகிறது. காரணம், சாரதிக்கு அருகில் உதவிக்கு இருந்தவன் வீரச்சாவடைந்துவிட்டான். சாரதியின் ஒரு கை காயமடைந்து துண்டிக்கப்பட்டிருக்கின்றது. அதிலிருந்து இரத்தம் பாய்கின்றது. அதனைப் பொருட்படுத்தாதவன், ஜீப்பிலிருந்து இறங்கி மறுப்பக்கம் வந்து கதவைத் திறந்தவாறு கத்துகிறான்."முதலில் ஏத்தவேண்டிய காயக்காரரை ஏத்துங்கோ.... கெதியா.... கெதியா....." இங்கு முதலில் நின்ற போராளி ஓட்டுனர் ஓடிச்சென்று அவனைப் பதுங்கு குழியினுள் இழுத்து வருகின்றான். "நீ காயத்தைப்பார் நான் கொண்டுபோறன" கத்திச் சொல்கிறான். அப்போது களமருத்துவன் ஓடிப்போய் வயிற்றுக் காயக்காரனைப் பார்க்கின்றான். ஜீரணிக்க முடியாத அதிர்ச்சி. அவன் வீரச்சாவடைந்து விட்டான். உடன் மற்றவனைத் தூக்கிப்போய் வாகனத்தில் ஏற்றுகிறான். வேறு சிலரும் ஏற்றப்படவும் ஜீப் சீறிப் புறப்படவும் சரியாக இருந்தது. வீதியில் விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் எறிகணையினூடு அது பறக்கவும் இன்னொரு ஜீப் இவர்களை நோக்கி வருகிறது. இவர்கள் ஏனைய காயக்காரரை தூக்கிவர ஓடிப்போகின்றார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மருத்துவ மனம்



இடையிடையே கேட்கும் துப்பாக்கிச் சத்தங்களும், எறிகணை வெடிப்பதிர்வுகளும் அவன் எண்ணவோட்டத்தைக் கலைக்க முயன்று தோல்வியைத் தழுவுகின்றன. பகல் முழுவதும் பதுங்கு அகழிகள் வெட்டியதாலும், நடுநிசிவரை எதிரிப் பிரதேசத்தினுள் மிதிவெடிகளை விதைத்ததாலும் ஏற்பட்ட களைப்புடன் படுத்திருக்கிறான். எனினும் உறக்கம் அவனைத் தழுவ மறுக்கின்றது.காரணம் வலது மேற்கையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட சிறு காயம் இப்போது வலியை ஏற்படுத்துகின்றது. "தம்பி பின்னால மெயினுக்குப் போயிற்றுவாங்கோ, வேணுமெண்டால் நான் கடிதம் எழுதித்தாறன். அங்கே வாணன் அண்ணாதான் டொக்ரராக நிற்கிறார். ரீட்மெண்ட் முடிய மீண்டும் இங்க வரலாம்" சின்னக் காயத்துக்கு பின்னால போகேலாது எனத் தான் அடம்பிடித்தது, மேற்படி அங்கு இராணுவ மருத்துவராக பணியாற்றும் மதி அக்கா சொன்னது என்பன ஞாபகத்திற்கு வருகிறன. ஆனால் இப்போது கை வீங்கிச் சுள்சுள்ளென வலிக்கத்தொடங்கிவிட்டது.

இருபத்தியாறாம் திகதி குடாரப்பில் தரையிறங்கியதிலிருந்து, விவரணத்திற்கு அப்பாற்பட்ட சமர்களை எதிர்கொண்டதால் இவனுள் ஏற்பட்ட உறுதியும், சிலநூறு வீரர்கள் பல ஆயிரம் இராணுவத்தினரை ஊடறுத்து நிற்பதால், ஒவ்வொரு புலி வீரனும் தனது பணியினது முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தாலும்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனது முடிவு சரியானதுதான் என எண்ணுகின்றான். எனினும் கிளிநொச்சிச் சண்டையில் ஏற்பட்ட காயத்தினால், உருமாறி பலமிழந்த மறுகையைப் பார்க்கையில் அவனுள் சிறுபயம் எட்டிப்பார்க்கிறது. இந்தக் கையுக்கும் ஏதாவது நடந்தால்......' என எண்ணுகையில் தனது உறுதி குலைந்து விடுமோ! எனும் பயமும் ஏற்படுகின்றது. "சீ. என்ன இருந்தாலும் கண்டிவீதியால போய்த்தான் எங்கட ஆட்களைச் சந்திக்கிறது" எனத் தன்னை உறுதிப்படுத்திக்கொள்கிறான். A9 வீதியை ஊடறுத்தும், பகைவனை அச்சுறுத்தியவாறும் இருக்கும் 800m இடைவெளியே கொண்டதும், எந்த நேரமும் பகைவனால் பூரண முற்றுகைக்குள்ளாக்கப்படக் கூடியதுமான ஆபத்துள்ள பிரதேசத்தினுள், பதுங்குகுழி ஒன்றின் அருகில்தான் அவன் படுத்திருக்கின்றான். இடையிடையே வானத்து நட்சத்திரங்களை மறைத்துச்செல்லும் மேகக்கூட்டங்களை ஊகித்துப் பார்த்தவன் களத்தாய் மடியில் கண்வளர்கின்றான்.

அவ்வேளை 'ஹும்...ஸ்ஸ்......டீடீர்' எனச் சத்தமிட்டு வந்த எதிரியின் எறிகணை ஒன்று அருகிலுள்ள மரத்தில் மோதி வெடிக்கின்றது. கந்தகக் கரும்புகையும், மணமும், காரிருளும் கலந்து பேயாடுகளமொன்றைப் பிரசவிக்கின்றது. எறிகணைச் சிதறல்களால் இவனது இரண்டு கால்களும் தொடையுடன் துண்டிக்கப்படுகின்றன. அவன் சுயநினைவை இழக்கிறான்.

ரக்ரர் ஒன்று இரைந்துவரும் சத்தங்கேட்டு அவள் கண்விழிக்கின்றாள். 'அக்கா..... அக்கா..... காயம்' என அருகில் நின்ற போராளி சற்று உரமாகக் கூறவும், ரக்ரர் அருகில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. இச்சையின்றிய செயல் போல் உடனே எழுந்த அவள் ரோச் வெளிச்சத்தில் ரக்ரர் பெட்டியில் இருக்கும் காயக்காரரைப் பார்க்கிறாள். இரண்டு தொடை நாடிகளும் அறுந்துவிட்டது. சரியாகக் கட்டுப்போடப்படவில்லை இரத்தம் அதிகமாக வெளியேறுகிறது. சில நிமிடத்துள் செயற்படாவிட்டால், அவன் உயிர் தங்குவது அரிது! மேற்கண்டவாறு தன் மனதினுள் எண்ணியவள், 'கெதியா..... கெதியா..... இறக்குங்கோ.' எனக்கூறும் அவள் குரலில் நிலமையின் விபரீதத்தை பிரதிபலிக்கும் தொனி தென்படுகிறது. கீழே அவனை இறக்கியவுடன். இரத்தப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் முகமாக, இரண்டு தொடைகளினதும் மேற்பகுதியில் தனது இரு கைப்பெருவிரல்களாலும் குறித்த நாடிகளின் அமுக்கப் புள்ளியில் அழுத்தியவண்ணம் தொடர்ந்து செய்யவேண்டியவற்றைச் சொல்லுகிறாள். "கெதியா இரண்டு கையிலயும் 'வென்புளோன்' போடுங்கோ", 'காட்மன்ஸ' லோட் பண்ணுங்கோ, 'டீரிக்கு பிளட் எடுங்கோ!" எனக் காயத்தையும், நோயாளியையும் அவதானித்தவண்ணம் கூறுகின்றாள்."அக்கா 'வெயின்' பிடிபடுதில்லை....." என்ற குரலுக்கு "இஞ்சவா இதைப்பிடி" என அவளைக் கூப்பிட்டு, நாடிகளை அழுத்தச் சொல்லிவிட்டு,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

'கட்டவுன் செற'றைத் தாங்கோ! எனக் கேட்கவும், உரிய ஆயுதங்கள் அவள் கையில் கொடுக்கப்படுகின்றது. "ரோச்சை இஞ்சை பிடியுங்கோ", எனக் கூறியவாறு நோயாளியின் முன்கையில் குறுக்காகத் தோலை வெட்டி, நாளத்தைக் கண்டுபிடித்து, அதில் சிறு துவாரம் இட்டு, 'வென்புளோனை' அதனூடாக உட்செலுத்தி, அது வெளியே நழுவாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் முகமாக உரியமுறையில் கட்டுகள் போட்டு, 'சிறிஞ்ச்' ஒன்றினுள் குருதியை எடுத்து "டீரீ செய்யுங்கள்". என அருகில் நின்ற போராளியிடம் கொடுக்கின்றாள். தயார் நிலையில் இருந்த 'காட்மன்ஸ்' திரவ ஊடகத்தை உரிய குழாயை 'வென்புளோனி'ல் பொருத்தியதன் மூலம் பிழிந்து வேகமாக உட்செலுத்துகின்றாள்.

அதனைத் தொடர்ந்து செய்யுமாறு இன்னொருவரிடம் ஒப்படைத்துவிட்டு "ஆட்ரி பொசப்ஸ் இரண்டு தாங்கோ?" எனக்கேட்டு, அவ்வுபகரணங்களை வேண்டியவள், "0.6மி.கி அற்றோபினும், 50மி.கி கெற்றமினும் கொடுங்கள" எனக் கூறியபடி, நோயாளியின் கால்பகுதியில் வந்து அமர்கின்றாள். "ஒவ்வொன்றாக சற்று விட்டுத்தா" என இவள் கூறவும் தொடை நாடிகளை அழுத்தியவாறு இருந்தவள் தனது ஒவ்வொரு விரலாக மெதுவாக எடுக்க, சீறிபாயும் குருதியை அடையாளமாக கொண்டு, உபகரணங்களால் அவற்றைப் பிடிக்கின்றாள். குருதிப்பெருக்கு கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ்வளவும் சில நிமிடங்களில் நடந்து முடிகின்றது.

"அக்கா, 'கான்ட்சென்றிபியூச்சி'லை இரண்டு ரியூப் உடைந்துவிட்டது". அவள் கூறவும் நேற்றைய எறிகணைவீச்சில் சிதைந்த மருத்துவப் பொருட்கள் இவளின் ஞாபகத்திற்கு வருகின்றது. "பரவாயில்லை மிச்ச இரண்டிலையும் போட்டுச்சுத்து". என இவள் கூற, அவ்வாறு செயல்பட்டு நோயாளியின் குருதித்திரவவிளையமானது பிரித்தெடுக்கப்படுகின்றது. அது குளிர் பதனப் பெட்டியில் பாதுகாக்கப்பட்டிருக்கும் குருதியுடன் ஒருங்கொட்டல் நடைபெறவில்லையென்பதை, ரோச் வெளிச்சத்தின் உதவியுடன் ஒளி நுணுக்குக்காட்டியின் மூலம் உறுதிசெய்யப்படுகின்றது. "B.P எவ்வளவு?" என இவள் கேட்க "எயிற்றி பை சிக்ஸ்ரி" என மற்றப்போராளி பதிலளிக்கின்றாள். "3 பைந்த் பிளட் போடுங்கள". என இவள் கூறவும், 'தும்...... கும்...... கும்...... என எதிரி செல் குத்தும் சத்தம் கேட்கவும், காயமடைந்த போராளியைத் தூக்கியவண்ணம், கடற்கரைப் பொந்துகளினுள் புகும் நண்டுகள்போல் விறுவிறு என நிலவறையினுள் அவர்கள் புகுந்து கொள்ளவும், 'படீர் படீர' என எறிகணைகள் அருகில் விழுந்து வெடிக்கவும் சரியாக இருந்தது. மேற்படி நேரக்கணிப்புடன் கூடிய வேகமான செயற்பாடானது அவர்களின் போர்க்கள வாழ்வனுபவத்தை வெளிப்படுத்துகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நிலவறையினுள் சிகிச்சையானது தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. தொடர்ந்து குருதி, திரவ ஊடகங்கள் ஏற்றப்படுகின்றது. கால்களின் சிதைந்த என்பு, தசைநார்கள் வெட்டி அகற்றப்பட்டு சிறுசிறு குருதிக்கலன்களும் கட்டப்பட்டு உரியமுறையில் கட்டுப் போடப்படுகின்றது. "கதிர்ரர்போட்டு யூரின் அவுட்புட்ஐ நோட்பண்ணுங்கள்." அருகில் நின்ற போராளியிடம் கூறியபடியே, ரோச்லைட் வெளிச்சத்தில் காயமடைந்தவனின் முகத்தைப் பார்க்கின்றாள். அவனது முகத்தைப் பார்த்துத் தனது புருவங்களை உயர்த்தியவள், "நேற்று இவன் தன்ர சொல்லைக் கேட்டிருந்தால் இந்தநிலை வந்திருக்காது." எனத்தன்னுள் மெல்ல முணுமுணுக்கின்றாள்.

எனினும் அதன் நியாயமின்மையை உணர்ந்தவள், தனது எண்ண அலைகளை அலட்சியம் செய்தவாறு, பையினுள் சேகரிக்கப்பட்ட சிறுநீரின் அளவைக் கவனிக்கின்றாள், 50மி.லீ. தன்னால் செய்யப்பட்ட சத்திரசிகிச்சையின் விபரம் கொடுக்கப்பட்ட குருதி, திரவ ஊடகங்கள், மயக்கமருந்து போன்றவற்றின் அளவுகள், குருதியமுக்கம், நாடித்துடிப்பு விகிதம், நேரம் போன்ற இன்னோரன்ன குறிப்புகளைச் சிறு அட்டை ஒன்றில் எழுதி அவன் கையில் கட்டிவிடுகின்றாள். மேற்படி குறிப்புகள் அடுத்த நிலையில் நிற்கும் மருத்துவருக்கு உதவியாக இருக்கும் என்பதால்.

கட்டைக்காட்டில் அமைந்திருக்கும் அந்த மருத்துவத் தளமானது காலையில் இருந்து சுறுசுறுப்பாக இயங்கிய வண்ணம் உள்ளது. இராணுவம் கைவிட்டு வெளியேறிய மினிமுகாம் ஒன்றிலேயே அது அமைக்கப்பட்டிருந்தது. நிலவறைகள் அமைக்கப்பட்டுருந்த பகுதியில் இருந்த கொட்டகை ஒன்றின் நடுவில் போராளி ஒருவன் கிடத்தப்பட்டுள்ளான். அவனைச் சுற்றிவர சத்திர சிகிச்சைக்கான மருத்துவர், அவருக்கான உதவியாளர், மயக்கமருந்து கொடுக்கும் மருத்துவர், உதவியாளர், சத்திர சிகிச்சைக்கான தாதியர் போன்றோர் வரிப்புலிச் சீருடையிலேயே காணப்படுகின்றனர். சாதாரண மின்குமிழ்களின் ஒளிர்வானது காணாது என்பதால் 'மக்ரோச்' இன்மூலம் சத்திர சிகிச்சைக்கான பகுதி ஒளிர்வூட்டப்படுகிறது. தசைநார்கள் விலக்கப்பட்டு தொடர் குருதிப்பெருக்கிற்கு காரணமாக இருக்கும் தொடை நாடியானது கையுறை இடப்பட்டிருக்கும் அவன் விரல்களால் பிடிக்கப்பட்டிருக்கிறது. எனினும் குருதிப்பெருக்கானது முழுமையாக நிற்கவில்லை. தொடைநாளமும் முற்றாக சிதைந்திருந்த காரணத்தால் ஊற்றுநீர் வெளிவருவதுபோல் அப்பகுதி குருதியால் நிறைகின்றது. விரைவாகக் குருதியை உறிஞ்சி வெளியேற்றும் 'சக்கா' இன்மையால் குருதியானது 'கோசினால்' ஒற்றி அகற்றப்படுகின்றது. குருதிக் குழாய்களை சேதப்படுத்தாமல் குருதிப் பெருக்கை நிறுத்தும் தன்மையுள்ள 'வஸ்குலர்கிளாம்ப' என்ற உபகரணத்தால் குருதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஓட்டமானது தடுக்கப்படுகிறது. தொடை நாடியில் சிறிய சேதமும், தொடை நாளத்தில் பாரிய சேதமும் உள்ளது அவதானிக்கப்படுகிறது. அப்பொழுது "வஸ்குளஸ்ர் சேர்ஜரி செய்யப்போகிறீங்களா?" என மயக்க மருந்து கொடுப்பவர் கேட்கிறார். அதற்கு இவன், "(f)பெமறல் ஆட்ரியில் சின்ன ரியர்தான், திருத்திவிடுவம். எத்தனை பைந் பிளட் போட்டிட்டீங்கள்?" எனக் கேட்கிறான். அதற்கு அவன் "05 பைந் போட்டாச்சு, இன்னும் B.P பிக்கப் பண்ணவில்லை." எனக்கூறுகிறான்.

இதுவரை வேமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தவனில் சிறு தயக்கம் ஏற்படுகின்றது. 'வஸ்குலர் சேஜறி' தொடர்ந்து செய்வதானால் இன்னும் 04 அல்லது 05 பைந் குருதி போடவேண்டிவரும். விகிதாசார அடிப்படையில் 8 பைந்திற்கு மேல் குருதி கொடுத்துச் செய்யப்படும் சத்திரசிகிச்சைகள் வெற்றியளிப்பது குறைவாகவே உள்ளது. அந்த அடிப்படையில் பார்த்தால் இவனது கால் தொடையுடன் வெட்டியகற்றப்பட வேண்டும். எனினும் இவனது முந்தைய அனுபவப்படி 13 பைந் குருதி ஏற்றிச் செய்யப்பட்டிருந்த சத்திரசிகிச்சையும் வெற்றியளித்திருந்தது. மேற்படி புத்தக அறிவிற்கும், அனுபவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மனப்போராட்டத்தின் விளைவாகச் சிகிச்சையினை தொடர்வது என முடிவிற்கு வருகின்றான்.

போர்முழக்கத்தை வெளிப்படுத்தும், வந்து விழுந்து வெடிக்கும் எதிரியின் எறிகணைகளும், சில நூறு மீற்றர் தூரத்தில் போராளிகளால் ஏவப்படும் எறிகணைகள் புறப்படும் சத்தமும், வானில் சுற்றிக்கொண்டிருக்கும் ஆளில்லா வேவு விமானமும், சற்று தொலைவில் கேட்கும் கனரக துப்பாக்கிகளின் ஓசையும் போர்நிலைப்பிரகடனத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. 50மீற்றர் தூரமளவில் விழுந்துவெடித்த ஆட்டிலறி எறிகணையொன்றின் சிதறல்கள் இவர்களின் கொட்டகையைச் சுற்றி அடுக்கப்பட்டிருந்த பனைமரத் துண்டங்களில் சடசடவெனப்பட்டுப் பதம்பார்கின்றன. அவ்வேளை தூரத்தில் இருந்து இவர்களின் பகுதியை நோக்கி 'லாண்ட்றோவர்' வாகனம் ஒன்று வேகமாக வருகின்றது. "வண்டு சுத்துவதையும் கவனிக்காமல் இவங்கள் வாறாங்கள்." எனக் கோபமுடன் கத்தியபடி அவ்வாகனத்தின் திசையை திருப்பிவிடும் முகமாக அவ்வாகனத்தை நோக்கி ஓடுகிறான் ஒரு போராளி. இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றின்போது, 01.02.1998 எமது மருத்துவத்தளம் ஒன்று வான் தாக்குதலுக்கு உள்ளானதால் இரண்டு இராணுவ மருத்துவர் உட்பட 43 பேரை நாம் இழந்திருக்கிறோம். அந்நிகழ்வு ஞாபகத்திற்கு வர அனைவர் மனதிலும் பயம் எட்டிப்பார்க்கவே செய்கின்றது. எனினும் அரைகுறையாகச் சத்திரசிகிச்சையை நிறுத்திவிட்டுப் போகமுடியாததாலும், அவர்கள் அதனை வெளிக்காட்டாமல் தமது பணியை தொடர்ந்தனர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சத்திரசிகிச்சை முடிவடைகின்றது. தொடைநாடியானது திருத்தப்பட்டு, நாளமானது கட்டப்பட்டுவிட்டது. 9 பைந்த் குருதியானது ஏற்றியாகிவிட்டது. எனினும் குருதியமுக்கமானது உரிய அளவிற்கு உயரவில்லை. தான் எடுத்த முடிவு சரியா? பிழையா? எனும் மனப்போராட்டத்தை அவனது முகம் பிரதிபலிக்கிறது. 'இன்னுமொரு பைந்த் (B)பிளட் போடுவோமா? என மற்ற இராணுவ மருத்துவரிடம் ஆலோசனை கேட்கிறான். "போடலாம்தான் ஆனால் எங்கபோறது". அவளின் கேள்வியின் நியாயத்தை உணர்கின்றான். ஏனெனில், இவர்களிடம் குளிர்சாதனப்பெட்டியில் இருப்பது 05 நாட்களுக்கு முன் எடுக்கப்பட்ட குருதியே. உடனடியாக இரத்தம் மக்களிடம் இருந்து பெறுவதாயின் நீரேரி கடந்து கண்டாவளை வந்தால்தான் சாத்தியம். மேற்படி கருத்துக்களை எண்ணியவன், அப்பகுதியில் நிற்கும் போராளிகளை நோட்டம் விடுகின்றான். அவர்கள் எல்லோரிடமும் அண்ணளவாக ஒன்றிரண்டு கிழமைக்குள் இரத்தம் பெறப்பட்டுவிட்டது. அப்பொழுது புதுமுகமான பெண்போராளி ஒருவரைக் காண்கின்றான். அவளை நோக்கி, "தங்கச்சி நீங்க என்ன பிளட் குருப்?" எனக் கேட்கின்றான். அவள், "ஓ பொசிடிவ்" எனப் பதிலளிக்கும் தொனியில் இரத்ததானம் செய்வதற்கு ஆவலாயிருப்பதை வெளிபடுத்துகின்றாள். அப்பொழுது அருகில் நிற்கும் பெண் இராணுவ மருத்துவர் "இவ ரீம் கொண்டு சண்டைக்குப் போறா". எனக்கூறுகின்றார். அது சொல்லப்பட்ட முறையில், அங்கு காயப்படலாம் என்பதும், தொடர் கடின வேலைகளால் களைப்படையலாம் என்பதும் தொக்கி நிற்கின்றது. மேற்படி விடயத்தையும் கருத்தில் எடுத்தவன், "பிரச்சினையில்லை, பிளட்டைத் தந்திட்டு குறைந்தது ஒருகிழமையாவது சண்டைக்குப் போகாமல் நில்லுங்கள்." எனச் சற்றுச் சிரிப்புடனே கூறுகின்றான். மேற்படி போராளியின் குருதியும் எடுத்து உரியவனுக்கு ஏற்றப்படுகிறது.

இப்பொழுது வேவு விமானத்திற்கு இடத்தைக்காட்டிக்கொடுக்கக்கூடாது எனும் காரணத்தால் வேறு இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனமானது இங்கு வருகின்றது. அதிலிருந்து இரண்டு காலும் துண்டிக்கப்பட்ட அப்போராளியானவன் இறக்கப்படுகின்றான். அவன் இன்னும் மயக்க நிலையிலேயே இருக்கின்றான். அவனது குருதியமுக்கம் குறைவாகவே காணப்பட்டது. சிறுநீரும் 50மி.லீற்றருக்குமேல் வெளியேறியிருக்கவில்லை. காயமடைந்து 10 மணித்தியாலத்திற்கு மேலிருக்கும். இந்நிலை தொடருமானால் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு இரண்டு, மூன்று நாட்களில் அவன் உயிரிழக்கலாம். மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு மேலதிக சிகிச்சையானது அளிக்கப்படுகிறது. தங்களால் இயன்றளவு செய்த போதிலும் மேற்படி இரு போராளிகளும் உயிர் தப்புவார்களா! என்பது சந்தேகமாகவே உள்ளது. இருவரில் ஒருவரின் உயிர்தானும் தப்பாதா? எனும் ஏக்கம் அவனைப் பற்றிக்கொள்கின்றது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் இருந்தால் இரண்டு காலும் உள்ளவன் தப்பினால் நல்லது. என அவனது உள்மனம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எண்ணுகின்றது. அவனுக்கு அவனிலேயே வெறுப்பு ஏற்படுகின்றது. காரணம், மனித உயிர்களிலும் இலாபநட்டக் கணக்கு பார்ப்பதை உணர்கின்றான். இரு போராளிகளையும் வன்னி மருத்துவத்தளத்துக்கு அனுப்பிவைக்கிறான்.

தொடர்ந்து பலபத்துக் காயக்காரர்கள் தொடராக வந்ததால் ஏற்பட்ட வேலைப்பளுவினால் 3 நாட்கள் கடந்துவிட்டிருந்தது. இன்று சற்று ஓய்வு கிடைத்தபோது, முதலில் அனுப்பிய இரண்டு போராளிகள் பற்றிய நினைவு வருகின்றது. உடனேயே அம் முகாமிலிருக்கும் 'வோக்கி' மூலம் பின்தள மருத்துவமனைக்கு அருகிலிருக்கும் நிலையம் ஒன்றுடன் தொடர்பு எடுக்கின்றான். மேற்படி இரு போராளிகளின் நிலைமைபற்றி அறிந்து சொல்லும்படி கேட்கின்றான். சிறிது நேரத்தில் பின்தள பிரதான மருத்துவர் நேரடியாக அவனுடன் கதைக்கிறார். "பிரச்சினையில்லை. நீங்கள் ரெண்டு கேசும் நல்லாச் செய்து அனுப்பியிருந்தீர்கள். வாழ்த்துக்கள்." என்று கூறியவர் சற்றுத்தாமதிக்கின்றார். தொடர்ந்து அவர், "இரண்டு காலும் அம்புரேசன் செய்த பேசன்ற் ஆபத்தான கட்டத்தை தாண்டியிற்றார். இது உண்மையில் மருத்துவ சாதனையே". என்றவர் தொடர்ந்து சொல்கின்றார், "மற்றவருக்கு றீனல் பெயிலியர் வந்துவிட்டது. நீங்கள் அங்கு இதைவிடச் சிறந்த ஒரு முடிவு எடுத்திருக்க முடியாதுதானே". எனக்கூறி முடிக்கின்றார். இவன் தன்னுள் எண்ணுகின்றான், மேற்படி கருத்துக்கள் தான் சோராமல் இருப்பதற்குச் சொல்லப்பட்டவைகளாக இருக்கலாம். இதனைப்போல் மருத்துவத்தில் பல சந்தர்ப்பங்களில், சில நிமிடங்களில், சில செக்கன்களில் எடுக்கப்படும் முடிவே உயிரை தக்கவைக்குமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கின்றன. மேற்படி நிகழ்வுகளில் ஒரு போராளி காப்பாற்றப்பட்டதையிட்டு சந்தோசப்படுவதா! அல்லது இன்னொருவனைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதற்காகக் கவலைப்படுவதா! என இருதலைக்கொள்ளி எறும்பாகத் தன்னுள் தத்தளிக்கின்றான். "இரண்டு காலும் முழங்காலுக்குமேல் இல்லாமல் போனவன் என்ன செய்யப்போகின்றான்?" அச்சூழ்நிலைக்கு பொருத்தமற்றதான அக்கேள்வி அவனுள் எழுகின்றது. அவனுக்கு 'உண்மை மனிதன் கதை' நாவலை வாசிக்கச் சொல்லவேண்டுமெனத் தன்னுள் எண்ணிக்கொள்கின்றான்.

தனது தவறான முடிவினால் ஒருவன் உயிரிழந்துவிட்டானே! என ஏற்படும் குற்ற உணர்வை தவிர்க்கும் முகமாக தப்பியவனை வல்லமையுடையவனாக்கும் முயற்சியை தனது மனம் ஆராய்கின்றதோ, என எண்ணியவன் ஒரு வரட்டுப் புன்முறுவலை வெளிவிடுகின்றான். அப்பொழுது விரைவாகவரும் வாகனச் சத்தமொன்று அடுத்துவரும் காயக்காரர்களை ஏற்றி சிகிச்சையளிப்பதற்காக இவனை தயார்படுத்துகின்றது.

❖

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மாறும் காட்சிகள்.



சுமார் பத்தடி உயரத்திற்கு டோசர்கள் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றது மண் அரண். அதற்கு மேலே செங்குத்தாக நாட்டப்பட்டுள்ள வடலி ஓலைகளால் இடைவெளியின்றி வேலியானது அடைக்கப்பட்டுள்ளது. மண் அணைக்கு உட்புறம் ஆறடி உயரமுள்ள பனம் குத்திகள் பதினைந்தடி இடைவெளியில் நாட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஒருசாண் இடைவெளியில் முட்கம்பி நிரைகள் பொருத்தப்பட்டுள்ளன. மண் அரணுக்கும் இம்முட்கம்பி வேலிக்குமிடையில் மேலதிகமாக முட்கம்பிச் சுருள்கள் இடப்பட்டுள்ளது. அரணுக்கு வெளியில் இருந்து இருபதடி முன்தள்ளி ஒரு முட்கம்பி வேலியும், அதற்கு அப்பால் இன்னுமொரு முட்கம்பிச்சுருளும், மீண்டும் முட்கம்பிவேலி, முட்கம்பிச் சுருள் என முன்னரங்கப்பகுதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் ஐம்பது மீற்றருக்கு ஒன்றென மண் அரண்களை ஊடறுத்தவாறு மண் மூட்டைகளாலும் பனைமரக்குற்றிகளாலும் பலப்படுத்தப்பட்ட காவலரண்கள் காணப்படுகின்றன. மேற்படி தொடர்காவலரண்களானது வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பிற்கு தொண்ணூறு பாகையில், மைல்கணக்கில் நிலப்பரப்பை ஊடுருவிச் செல்கின்றது. இந்த மண்ணரணில் முளைத்திருக்கும் பற்றைகளும், சிறு மரங்களும் பலவருட வயதைப் பிரதிபலிக்கின்றன.

காலை பத்துமணியிருக்கும், சூரியனின் கதிர்கள் வெம்மையை வெளியிடத் தொடங்கிவிட்டது. காற்று கடல் தழுவி வருவதால் உடலுக்கு இதமளிக்கும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தளிர்மையை கொண்டிருக்கின்றது. ஏறி நின்று கண்ணுக்கெட்டிய தூரம்வரை தன் தாயகமண்ணைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றான். சுமார் ஒன்பது ஆண்டுகளாக எதிரியின் பிடியிலிருந்த இப்பகுதி மீட்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்திருக்கும். அவன் முகம் வீரத்தின் பூரிப்பையும், இழப்புக்களால் ஏற்பட்ட இறுக்கத்தையும் கலந்து பிரதிபலிக்க முனைகின்றது. அருகில் கலகலவென பெண்போராளிகள் சிரித்துக் கதைத்தபடியே கையில் சற்று நீளமான முட்கரண்டிகளை ஏந்தியபடியே, அம்மண்ணரணில் ஏறி மறுபக்கம் இறங்குகின்றனர். இவன் அவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். "அக்கா! இஞ்சபார் மயில்முட்டை கிடக்கு..." எல்லோரும் அதனை ஆவலுடன் சென்று பார்க்கின்றனர். அவன் அவர்களைப் பார்ப்பதைக் கவனிக்காதவர்கள் போல் தங்களுக்குள் உரையாடுகின்றனர். "இந்தக் கவிஞர்கள் எல்லோரும் முரண்பட்டவர்கள்." "ஏன் அப்படிச்சொல்கிறாய்...?" "பிறகென்ன, தோகையுள்ளது ஆண்மயில் ஆனால் பெண்களுக்கு உவமிப்பார்கள். கூவுகின்றது ஆண்குயில். ஆனால் பெண்களிற்கு ஒப்பிடுவார்கள்." அவள் ஏன் இப்படிக் கூறுகின்றாள். என மற்றவர்களிற்கு விளங்கவில்லை. ஆனால் இவனோ அது தன்னை நோக்கி சொல்லப்படுகின்றது என்பதை விளங்கியிருந்தான். எங்கேயோ இயக்க நிகழ்ச்சியில் கவியரங்கொன்றில் தான் கவிதை வாசித்ததையும் ஞாபகப்படுத்திக் கொண்டான். இப்பொழுது அவர்கள் அவ்வரணைக் கடந்து இறங்கிக் கொள்கின்றார்கள். என்ன செய்யப்போகிறார்கள்.

அப்பொழுது அவன் சிறுவனாக இருந்தான். ஏதோ ஒரு சினிமாப்பாட்டை தன்னுள் முணுமுணுத்தபடியே அம்மா கொடுத்துவிட்ட தேனீர்கேத்திலையும், தவழையையும் ஏந்தியபடி வயலிற்கு செல்கின்றான். அங்கு அப்பாவும் சில கூலியாட்களும் வயலில் களைபிடுங்கிக் கொண்டிருப்பார்கள். மாலையில் பள்ளிவிட்டு வந்தவனை விளையாடவிடாமல் தேனீர் கொண்டு போகச் சொன்னது சற்று வருத்தமாகத்தான் இருக்கின்றது. ஆயினும் புசுபுசுவென நெற்பயிர் காற்றில் அசைந்து உருவாக்கும் ஓசையும், அவற்றின் கரும்பச்சை நிறமும், கணுக்கால் வரை நீரில் இறங்கி நிற்கும்போது ஏற்படும் சில்லிடும் உணர்வும் அவனின் விருப்பத்திற்குரியவை. வயல் வரம்பில் நின்றபடியே நீரினுள் நிறைந்திருக்கும் வால்பேத்தைகளை அவதானித்து ஆச்சரியப்படுவான். இதுதான் தவளைகளாக வருமாமே. அம்மாடியோ! இவ்வளவும் தவளைகளாக வந்தால் வசிக்க இடம் காணுமோ! எனத் தன்னுள் வியந்துகொண்டிருக்கையில், "தண்ணீக்க கனநேரம் நிக்காம மேல ஏறு. நீர்ச்சிரங்கு வந்திடும்." அம்மாவின் எச்சரிப்பில் அன்பு தொனிக்கும். அப்போதெல்லாம் இவையெல்லாம் மணித்தியாலக் கணக்காக தண்ணிக்குள்ள நிக்கினம்தானே! அவயளுக்கு சிரங்கு வராதா? எனத் தன்னுள் எண்ணுவான். பள்ளியில் ரீச்சர் சொன்னது ஞாபகம் வரும். 'உழவர் சேத்தில கைவைக்காட்டி நாங்கள் சோத்தில கைவைக்க ஏலாது!.' மேற்கண்டவாறு பலதையும் பத்தையும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எண்ணியவாறும், வயலைப் பார்த்தவாறும் நின்றவனுக்கு ஏதோ பொறிதட்ட வேலையாட்களை கூர்ந்து கவனிக்கின்றான். ஆண்களும், பெண்களுமென சேர்ந்தே களை பிடுங்குகின்றார்கள். அவர்களின் வேலைசெய்யும் வேகத்திலும் பெரியவ வித்தியாசம் தெரியவில்லை. பிறகேன்? என தன்னுள் எழுந்த ஐயத்தை அடக்கிக் கொள்கின்றான். இப்பொழுது கூலியாட்கள் வீடு திரும்ப ஆயத்தமாகின்றார்கள். அவனது தந்தையார் ஆண்களுக்கு ஐம்பது ரூபா வீதமும் பெண்களுக்கு முப்பது ரூபா வீதமும் பணம் கொடுக்கின்றார். அவர்களும் "நன்றி ஐயா" எனக் கூறியபடியே அதனை வேண்டிக்கொண்டு புற்கட்டுக்களைத் தலையில் சுமந்தபடி வரம்பில் நடக்கத் தொடங்கினார்கள். அவர்கள் சற்று எட்டப் போகும்வரை காத்திருந்தவன், "அப்பா ஏன் ஐயாக்களுக்கு கூடவும் அம்மாக்களுக்கு குறையவும் காசு கொடுக்கின்றீர்கள்?" எனக் கேட்கின்றான். இவனைச் சற்று அர்த்த புஸ்டியோடு பார்த்தவர், "அவையள் ஆம்பிளையள் இவையள் பொம்பிளையள்" என்கிறார். "என்ன இருந்தாலும் இரண்டு பேரும் ஒரேயளவு வேலைதானே செய்தவையள்?" என இவன் கேட்க, என்ன பதில் சொல்வதென சற்று நிதானித்தவர் "மகன்...!" எனச் செல்லமா அழைத்தவர் "நீ சொல்லிறதிலையும் நியாயம் இருக்கு" எனப்பதிலளிக்கிறார். இப்பதிலினால் மகன் திருப்தி அடையவில்லையென்பதை உணர்ந்தவர், "போகப்போக உனக்கு விளங்கும்... இப்ப வா! வீட்டை போவம்" என வீடு நோக்கி செல்லத் திரும்புகின்றார்.

அந்த வீட்டின் முன்விறாந்தையானது நான்கைந்து நடுத்தரக் குடும்பங்களினால் நிறைந்துள்ளது. பலவகைப்பட்ட வயதுடையவர்களாலும் அவ்விடத்தில் கலகலப்பு நிறைந்து காணப்படுகின்றது. அவர்கள் ஆவலுடன் அதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். "சுப்பர் ஸ்ராரின் படமாம், புதுக்கவிதை படத்திற்கான பெயர். நல்ல படம் அவர்தான் இப்ப கூடக்காசு வேண்டுற நடிகர்..." எனப் பல்வேறுபட்ட சம்பாசனைகளினால் அவ்விடம் இரைச்சல் அடைகின்றது. ஏதோ ஒருவர் படத்தின் கதையைச் சொல்லத் தொடங்க, "ச்சே... சொல்ல வேண்டாம், சொன்னால் இன்ரேஸ்ற் இருக்காது." என இன்னொருவர் மறுக்க எல்லோரும் வீடியோவையும் டெக்கையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு இளைஞன் படத்தை போடப்போகின்றான். அப்பொழுது அந்த வீட்டம்மா "கொஞ்சம் பொறு! தங்கச்சி வரட்டும்... பிறகு அவளிட்டை திட்டு வாங்குவாய்..." எனச் சொல்கின்றார். "எங்க போயிட்டாள்...?" கேட்கும் அவனின் குரலில், நேரம் போகுது எனும் அவசரம் தெரிகின்றது. "கிணத்தடிக்கு தண்ணியள்ளப் போனவள் இப்ப வந்திடுவாள்." என்ற தாயின் பதிலில் அவசரத்தை தணிப்பதற்கான ஆறுதல் அடங்கியிருக்கின்றது. கெதியா படம் தொடங்காதா! எனும் ஆவலுடன் கதிரையில் அமர்ந்திருக்கின்றான். திறந்திருந்த கதவினூடு வெளியே தண்ணி அள்ளிவரப்போன அக்கா வருகின்றாளா எனப்பார்க்கின்றான். சூரியன் முற்றாக மறைந்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விட்டிருந்தாலும் நிலம் தெரியும் மம்மல் பொழுதாகவே இருக்கின்றது. "ஏன் வெள்ளனையே தண்ணியள்ளி வைக்கிறதுதானே?" தன்னுள் எழுந்த கேள்வியை

யாரிடமும் சொல்லமுடியாது என்பதை விளங்கியதால், விழுங்கிக் கொள்கின்றான். அந்த அக்கா தண்ணீர் குடத்தை இடுப்பில் சுமந்தபடி வருகின்றாள். அவளின் நடையிலும் படம் பார்ப்பதற்கான அவசரம் தெரிகின்றது. 'எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்தாலும் நடுத்தர வர்க்கத்தினர், உயர் மட்டத்திற்குப் போகமுடியாததால் என்னவோ! அதற்கான வடிகாலாக இப்படியான சினிமாப் படங்களையும், கதைப் புத்தகங்களையும் பயன்படுத்துகின்றனர். பொழுதுபோக்கு என்பது மட்டும் காரணமல்ல, இல்லையென்றால் இவற்றிற்கு ஏன் இவ்வளவு மௌசு?' யாரோ எங்கோ விவாதித்ததும் ஞாபகத்திற்கு வருகின்றது.

தண்ணிக்குடத்தை சுமந்து வந்தவள் முற்றத்தில நின்ற நித்தியகல்யாணி பூமரத்தைச் சுற்றி, குசினிப்பக்கம் திரும்புகின்றாள். திடீரென... "ஐயோ...... அம்மா....!" எனக் கத்தியபடியே துள்ளிக்குதித்தவள் கையிலிருந்த குடம் சரிந்துவிழ நீர் கொட்டுகிறது. எல்லோரும் என்ன நடந்தது எனப் பயந்தபடி வர, சற்று வெட்கப்பட்டவளாகத் தலைகுனிந்தபடியே நிற்கின்றாள். "என்ன நடந்தது?" எனக்கேட்ட தாயின் குரலில் பரிவும், அவசரமும் தெரிந்தது... "ஒன்றுமில்லையம்மா..." எனத் தாமதிக்கின்றாள். "அப்ப ஏன் கத்தினனி...! நல்லவேளை அலுமினியக்குடம் என்றதால உடையவில்லை". என்று சொல்லியபடி அவள் காலடியில் பார்க்கின்றாள். அங்கு எதுவும் தென்படாததால் மீண்டும் கேட்கின்றாள், "என்ன பிள்ளை நடந்தது...?" "அம்மா... தவளை ஒன்றை மிதிச்சுப்போட்டடன், அது நளுக்கென்றிருந்தது பயந்து போட்டடன்." என்று கூறவும் உள்ளிருந்த ஆச்சியொன்று "பெட்டைப் பிள்ளையென்றதை நிருபிச்சுப் போட்டுது..... தவளைக்கு இப்படியே பயப்படுறது?" முணுமுணுப்பது அனைவருக்கும் கேட்கிறது. "சரி சரி நடந்தது நடந்துபோச்சு வா.... படத்தைப் பார்ப்பம்... பிறகு நான் தண்ணியள்ளி வைக்கிறன்." என்ற அவன் குரலில் சிறிது நளினமும், அவசரமும் தொனிக்கிறது. உள்ள வந்து இருக்கையில் அமர்ந்த தங்கச்சியைப் பார்த்தவன் "இதுதான் சொல்லுறது சும்மா சும்மா... வீரம் கதைக்கக் கூடாது என்று". என அவளைச் சீண்ட "அம்மா! இங்க பாரண்ணாவ, வீணாக் கொழுவுது....." எனச் சிணுங்கத் தொடங்கவும் "ரெண்டு பேரும் சத்தம் போடாமல் படத்தப் பாருங்கோ!" தாயின் குரலில் சமரசத்திற்கான ஆணை தொனிக்க அக்கூட்டம் படத்தில் மூழ்கிப்போகின்றது.

தொடர்புகள் இருப்பது புரிந்தோ புரியாமலோ சுமார் பத்து பன்னிரண்டு வருடங்களுக்கு முற்பட்ட நினைவுகளால் சூழப்பட்டவன், மீண்டும் நிகழ்காலத்திற்கு வருகின்றான். களமுனையில் தளபதியை வேறுவிடயமாக சந்திக்க வந்தவன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தவிர்க்க முடியாமல் அப்பிரதான களமருத்துவ நிலையத்தில் இரண்டு நாள் தங்கவேண்டி வந்தது. அவர்களுடன் இப்பொழுது முன்னால் மிதிவெடிகள், கிளைமோர் போன்றவற்றை அகற்றும் பெண்போராளிகளும் தங்கியுள்ளனர். சூரியன் உச்சத்தை அண்மித்ததால் வெப்பம் அதிகமாய் இருந்தது. நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளை சுண்டு விலரால் வழித்து எறிந்தபடியே அவர்கள் முள்ளுக்கரண்டியால் நிலத்தைக் கிண்டி, எதிரி வைத்திருந்த மிதிவெடிகளை, அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருமுறை இவனை எச்சரித்தும் இவன் அவ்விடத்தைவிட்டு நகராது அவர்கள் தொழிற்படும் வேகத்தையும் லாவகத்தையும் பார்த்தவண்ணம் உள்ளான். "தவறு செய்தால் வெடிபொருட்கள் மன்னிப்பதில்லை." அடிப்படை இராணுவப்பயிற்சி எடுக்கும்போது, குண்டுகள் பற்றி பயிற்சிப்பொறுப்பாளர் கூறியது ஏனோ இவனிற்கு ஞாபகம் வருகின்றது. அத்துடன் இன்று காலை நடந்த சம்பவமும் எண்ணத்தில் எட்டிப்பார்க்கின்றது.

திடீரென அம்மருத்துவ நிலையத்தில் வந்து நின்ற லாண்ட்றோவர், வாகனத்திலிருந்து ஸ்ரெச்சரின் உதவியுடன் காயமடைந்த ஆண்போராளி ஒருவன் இறக்கப்படுகின்றான். அந்நிலையத்தில் இராணுவ மருத்துவராக ஒரு பெண்போராளியே கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இறக்கப்பட்டவுடனேயே அவளால் காயமடைந்தவனின் உடல்நிலை பரிசோதிக்கப்படுகிறது. காயம் நெஞ்சின் உள்ளே_ ஊடுருவியிருக்குமா? எனச் சந்தேகித்த அம்மருத்துவர் கேட்கிறார், "தம்பி மூச்சு விடுறதில ஏதாவது கஸ்டம் இருக்கா?" அதற்கு இல்லையென அவன் பதிலளிக்கின்றான். அதில் திருப்தி காணாதவள் தனது 'ஸ்ரெதஸ் கோப்பின்' மூலம் அவனது சுவாசப்பைகளது வழிகளை பரிசோதித்தவள், ஏதோ கேட்க உதவிக்கு நின்ற இன்னுமொரு போராளி ஸ்ரிஞ்சும், நீடிலும் கொடுக்கின்றாள். சாய்வுப் பலகையில் படுக்கவைத்துவிட்டு அவனின் விலா என்பினிடையே குத்தி இழுத்துப் பார்க்க அதில் மளமளவென இரத்தம் நிறைய, "ஐ.சீ.டி. ரியூப் போட வேண்டும்" என்கிறாள். அதேவேளை நெஞ்சின் அதே பகுதியில் இருந்த பழைய தழும்பைப் பார்த்து ஆச்சரியப்பட்டவள் "கடைசியாக எப்ப காயப்பட்டனீங்கள்? எனக் கேட்கின்றாள்.

"ஒரு மாதத்திற்கு முதல்தான்". எனப்பதிலளிக்கிறான். "நெஞ்சில்.... ரியூப்போட்டதா?" "ஓம் ஓம்" "உங்களை 2மாதம் ரெஸ்ற் எடுக்கச் சொல்லவில்லையா?" என்ற இவளின் கேள்வியை அவன் எப்படிப் புரிந்தானோ தெரியவில்லை. ஆனால் காயத்தின் வேதனை முகம் சுழிக்க வைக்கிறது. கதைத்தபடியே விறைப்பூசி மருந்தை குறித்த விலா என்புகளிடையே செலுத்தியவள், கையுறையைப்போட்டு, "சத்திரசிகிச்சைகான பிளேற்றால் தொடுவது தெரியும் ஆனால் வெட்டிறது நோகாது....." எனக் கூறியபடியே தோலில் சிறு கீறு போடுகின்றாள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பின்னர் நீளமான கூரான கம்பியுடன் செருக்கப்பட்டிருக்கும் ரியூப்பை நெஞ்சினுள் குத்தி மிகவும் அவதானமாகத் தள்ளுகின்றாள். முதலில் சற்று கடினமாக இருந்தது. திடீரென உள்ளே சுலபமாகச் சென்றவுடன் நிறுத்தி, 'ரியூப்பை' உள்ளே தள்ளியபடியே, கம்பியை வெளியில் எடுக்கின்றாள். இரத்தம் ரியூப்போடு சீறிப்பாய வெளிக்கிட அதனுடன் ஒரு ரியூப்புடன் கூடிய பையை இணைக்கின்றாள். இப்பொழுது காயத்தினால் நெஞ்சறையினுள் நிறைந்து சுவாசத்திற்கு தடை ஏற்படுத்திக் கொண்டிருந்த குருதி பையினுள் நிறைகின்றது. உடனே முதலில் போட்ட ரியூப்பை நெஞ்சறை தோலினூடாக சேர்த்துத் தைத்தவள், பையினுள் நிறைந்த குருதியைப் பார்க்கிறாள். 500மில்லிலீற்றர்..... 1000மில்லிலீற்றர், 1500மில்லிலீற்றர் என பை நிறைகின்றது. உடனேயே அவள் கண்ணசைவினைப் புரிந்த மற்றப் போராளி குருதி சேகரிக்கும் பையொன்றை எடுத்து இவளிடம் கொடுக்கிறாள். "ஓட்டோ றான்ஸ்பியூசன் செய்ய வேண்டும்" என்றவாறு நெஞ்சறையிலிருந்த பையில் சேர்ந்த குருதியை, குருதி சேகரிக்கும் பையினுள் குறித்த ஊசியை குத்தியதன் மூலம் சேகரிக்கின்றாள். அது நிறைந்தவுடன் மீண்டும் அக்குருதியை காயப்பட்டவனுக்கு, ஏற்கனவே நாளத்தினூடு செலுத்தப்பட்டிருந்த 'வென்புளோன்' ஊடாக உட்செலுத்துகின்றாள். இவ்வாறு 3பைந் குருதி ஏற்றப்படுகிறது. இப்பொழுது அப்போராளி ஓரளவு சாவகமாக கதைக்கத்தொடங்க, இவள் கேட்கிறாள், "அப்ப ஏன் தம்பி பொய் சொன்னீங்கள்....? மூச்சுவிட கஸ்ரமா இருக்க வில்லை என்று....! தனது வேதனையையும் மறந்தவன் கடினப்பட்டு மெல்ல சிரிக்க முயன்றவாறு "முதலும் இதில காயப்பட்டு மூச்சுவிட கஸ்ரமா இருக்குது என்று சொல்லத்தான் இப்பிடி ரியூப் போட்டு கஸ்ரப்படுத்தினவையள்." எனச் சொல்கிறான். "நாங்கள் உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்றுதான் இப்பிடிச் செய்யிறனாங்கள். இன்னுமொரு அரை மணித்தியாலம் போயிருந்தா உங்கட உயிரும் போயிருக்கும்". என செல்லமாகக் கடிந்தவள், "சரி அனுப்புவம்...." எனச் சொல்ல அப்போராளி பின் களமருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றான். தன்னால் இயன்றது என இவனும் சேர்ந்து அப்போராளியை ஸ்ரெச்சர்மூலம் வாகனத்தில் ஏற்றிவிட உதவிசெய்கின்றான்.

கொஞ்ச நேரத்துக்குள்ளேயே தனது மனக் குதிரையானது கட்டுப்பாடில்லாமல் சில வருடங்களின் முன்னும், சில மணித்தியாலங்களின் முன்னும் நடந்த சம்பவத்தை நோக்கி விரைவதை எண்ணியவன் சரி போவம், எனத் தன்னுள் சொல்லியவாறு திரும்புகின்றான். அப்பொழுதுதான் படீர்... என அந்தச் சத்தம் கேட்கவும்.... "ஐயோ! என்ரெயம்மா...." எனக் கத்தும் குரல் கேட்கவும்.... திடுக்கிட்டவன் திரும்பிப் பார்க்கின்றான். இருபத்தைந்து மீற்றருக்கு முன்னால் வெடிமருந்து மணம் கலந்திருந்த புகை அடங்கவும், தெரிந்த காட்சி இவன் முள்ளந்தண்டினை சிலிர்க்க வைத்தது. 'மைன்ஸ்' கிளியர் பண்ணிக்கொண்டிருக்கையில் ஒருவர் தவறுதலாக ஒரு மிதிவெடியை மிதிக்க

அது அவன் கணுக்காலை அபகரித்துக் கொண்டது. உடனேயே அவனை நோக்கி விரைந்த மற்றப் போராளிகள் குருதியமுக்கப் பஞ்சுகளைக் கொண்டு குருதிப்பெருக்கை நிறுத்துகின்றனர். இவனோ என்ன செய்வதென தெரியாமல் நிற்கிறான். முன்னால் எங்க, எப்பிடி மிதிவெடியிருக்கும் என்று தெரியாதலால் தடுமாறுகின்றான். ஏனைய போராளிகள் அவனைத் தூக்கியவண்ணம் 'மைன்ஸ்' கிளியபண்ணிய பாதையூடாக பின்னால் கொண்டு வருகின்றார்கள்.

குறித்த மருத்துவ நிலைக்கு கொண்டுவந்தவுடன், மேற்படி போராளி மருத்துவர் பூரண மயக்கமருந்து கொடுத்து, உதவியாளருடன் சேர்ந்து சிதைந்த காலை வெட்டி அகற்றுகின்றாள். பின்னர் உரிய முறையில் கட்டுப் போட்டவள், குருதியமுக்கத்தை மீண்டுமொருமுறை அளக்கின்றாள். திரவ ஊடகத்தை ஏற்றுகின்றனர். நோயாளி மயக்க நிலையிலிருந்து ஆபத்து எல்லையைக் கடந்ததை நாக்கை நீட்டச் சொல்லி உறுதிப்படுத்துகின்றார். பின்னர் ஐந்தாறு மணித்தியாலத்தில் பின்னுக்கு அனுப்பலாம் எனச் சொல்லியபடியே அந்த தற்காலிக சத்திரசிகிச்சைக் கூடத்தைவிட்டு வெளியில் வருகின்றாள். மேற்படி சம்பவங்களை அதிர்ச்சியிலிருந்து மீளாமல் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அந்நிகழ்வு மேலும் வியப்பைக் கொடுத்தது. காலை அறுவர் கொண்ட குழுவாக கண்ணிவெடி அகற்றப் போனவர்கள் இப்போது ஐவராக மீண்டும் அப்பணியைத் தொடர்வதற்காக அப்பிரதேசம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். காலை இருந்த கலகலப்பு அவர்களிடையே இப்போது இல்லை. எனினும் முகங்களில் ஓர் இறுக்கம் தெரிகிறது. தான் மறைந்தால்தான் இவர்களுக்கு ஓய்வோ! என்றெண்ணியவன்போல் சூரியன் மேற்றிசை நோக்கி விரைகின்றான். அதிர்ச்சியும், வியப்பும் கலந்து கலக்கமடைந்திருந்த அவனது முகம் மேற்படி நிகழ்வுகளின் போர்வையூடு எதனையோ கண்டுபிடித்துவிட்டது போல் சற்றுத் தெளிவடைகின்றது.

❖

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தெரியும் மருத்துவத் தடங்கள்



இருபதாம் நூற்றாண்டின் இறுதி மார்கழி பருவமழை சற்று இடைவெளி விட்டுக்கொண்டிருக்கின்றது. மேகத்திரை விலத்தியிருப்பதால் விண்மீன்கள் பூமியை நோக்கி கண் சிமிட்டுகின்றன. நிலமகள் ஈரலிப்பினால் குளிர்ந்து காணப்படுகின்றாள். அனல் சுமந்த புலிகள் இலக்குகளை நோக்கி நகர்ந்துவிட்டனர். எந்நேரமும் வெற்றிப் பிரசவத்திற்கான யுத்தவலி ஆரம்பிக்கலாம். மேற்படி எதிர்ப்பினால் உந்தப்பட்டவர்கள் அங்கு தமக்கெனப் பகுக்கப்பட்ட வேலைகளை முடிப்பதற்காக மும்முரமாக இயங்கிக் கொண்டு இருக்கின்றனர். சுமார் ஆறு மணித்தியாலங்களுள் அவ்விடம் நவீன வசதிகளை உள்ளடக்கிய சத்திரசிகிச்சைக் கூடத்துடன் கூடிய, பல பத்து படுக்கைகள் கொண்டுள்ள மருத்துவமனையாக மாறப்போகின்றது. பாரிய படைநகர்வு ஒன்றிற்கான பின் தள மருத்துவநிலைகளில் இதுவும் ஒன்றாகும். வாகனங்கள், கொமாண்டோப் படுக்கைகள், மின்பிறப்பாக்கிகள் என பல்வேறுபட்ட வசதிகளில் ஒருமாத காலத்திற்குள் தேவைக்கு அதிகமாகவே கிடைத்துள்ளன. எப்படி? எல்லாம் 'ஓயாத அலை- 03' ஆரம்ப வெற்றியின் விளைவுகளே. இப்பொழுது 'ஓயாத அலைகள் மூன்றின' கட்டம் மூன்றிற்கான ஆயத்தங்கள் மௌனமாகவே வேகம் எடுக்கின்றது. பலநூறு காயக்காரரை சமாளிக்கும் வகையில் சில மணித்தியாலங்களினுள் மருத்துவ நிலையம் ஒன்றை களத்திற்கு அருகாமையில் உருவாக்கும் வல்லமையை பெற்றிருப்பது பெருமிதம் அளிக்கின்றது. எனினும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்நிலை யதார்த்தமான பல படிக்கட்டுகளை தாண்டியே உருவானது. மருத்துவ வளர்ச்சிக்கு போர்களும் காரணமாக இருக்கின்றன எனும் கடினமான உண்மையை ஏற்கக்கூடியதாக இருக்கின்றது. இன்றைய நிலைக்கு முன் மருத்துவப்பிரிவினர் சந்தித்த இடர்களையும், திருப்பங்களையும் எண்ணி மனப்பறவையானது காலக்குகையினூடுசிறகடிக்கின்றது.

விடுதலைப்போர் மழலை தவழத்தொடங்கிய காலம். சமர்களை தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றான மருத்துவம் களம் நோக்கி துளிர் விடும் நேரம். உலக மருத்துவ ஓட்டத்திற்கு அண்ணளவாக யாழ்மருத்துவமனை அண்மித்துக் கொண்டிருந்தது. இதனதும் ஏனைய மருத்துவ வளங்களினதும் நேரடி, மறைமுக ஒத்துழைப்பினால் விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவினரும் நடைபயிலத் தொடங்கியிருந்தனர். யாழ்மாவட்டம் மெல்ல மெல்ல எம்கட்டுப்பாட்டினுள் கனிந்து கொண்டிருக்கின்றது. சமராடும் திறன் ஆர்முடுகத் தொடங்குகின்றது.

இயக்க உறுப்பினர்களின் உளவியல் பலம் மருத்துவ அழுத்தங்களை குறைவாகவே சந்திக்கின்றது. எனினும் தூரப்பிரதேசங்களில் மருத்துவ வசதியின்மை தாக்குதல் வேகத்தை கட்டுப்படுத்தாமல் இருக்க அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. போர்புயல் யாழிலேயே மையங்கொண்டிருக்கின்றது. ஆதலால் யாழ் கோட்டை, ஆனையிறவு, நாவற்குழி, பலாலி போன்ற இராணுவத்தளங்கள் புலிவீரர்களால் வேலியிடப்பட்டுள்ளன. எதிரியின் எறிகணை வீச்சில் யாழ் மருத்துவமனை சேதமடைய, சிலர் இறக்க, பலர் காயமடைகின்றனர். சாதாரண நோயாளிகளைக் காவிச்சென்ற 'அம்புலன்ஸ்' வாகனமொன்று உலங்குவானூர்தியின் தாக்குதலில் எரிகின்றது. இது போன்ற பல நிகழ்வுகளால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. கள மருத்துவப் போராளிகளின் கடமைகளென குருதிப்பெருக்கை நிறுத்தல், நோநிவாரணி கொடுத்தல், திரவஊடகம் ஏற்றுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலதிக சிகிச்சைக்காக விழுப்புண்ணடைந்தவர்கள் ஏனைய இடங்களிற்கு அனுப்பி வைக்கப்படுவர்.

பின் நாட்களில் சமர்களின் தொடர் கடுகதிவேகம் பெறுகின்றது. விடுதலைப்போர் முழுமைபெற முனைகின்றது. அவ்வேளை வேண்டா விருந்தாளியாக மூக்கை நுழைக்கின்றது இந்தியா. இவ்விடையூறால் தமிழீழ விடுதலைப்போரின் இயல்புவேகம் தடைப்படுகின்றது. விடுதலை வேகம் தடம்மாறி விடலாகாது என்பதற்காக அளப்பெரும் விலை செலுத்தப்படுகின்றது. யாழ் மருத்துவமனையினுள் புகுந்த இந்திய இராணுவத்தினரால் நோயாளிகள், மருத்துவர்கள், ஏனைய பணியாளர்கள் எனப் பலர் கொல்லப்படுகின்றனர். வெடிமருந்துச் சிதறல்களால் காயமடைந்த மக்கள் பலர் புழுத்தே செத்தனர். செத்தே புழுத்தனர். மேம்பட்ட மருத்துவ வசதிகளினால் காப்பாற்றப்படக்கூடிய போராளிகள் பலர் உயிரைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொடுத்தனர். வேதனைகளைச் சுமந்து, பெரும் சோதனைக்கு முகம்கொடுத்து வரலாற்றுத் தடை தகர்க்க இயக்கம் முனைப்பாக செயற்படுகின்றது. ஏனையவற்றைப் போலவே மருத்துவக் கட்டுமானமும் தளர்வுற்றது.

இதற்கு நேர்மாறாய் சுதந்திர தாகம் அதிகரித்தது. வேகம் குறைந்திருந்த போர் விருட்ச வளர்ச்சியானது நகர்ப்புறங்களில் ஐரிஸ் பாணியிலும், காடுகளில் வியற்கொங் பாணியிலுமென கிளை பரப்பத் தொடங்கியது. இந்திய, இலங்கை இராணுவங்கள் தேசவிரோதக் கும்பல்கள் என பல்திசைப் புயல்களிற்கு முகங்கொடுத்து வைரம் பெறுகின்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் பற்றைக்காடு, விழுப்புண் அடைந்த பன்னிருவருடன், வைத்திய கலாநிதி எழுமதி அவர்கள் உட்பட பதினேழு போராளிகளை உள்வாங்கியிருக்கின்றது. சுமார் ஒருமாதமாக அவர்கள் அதனுள் அடைபட்டுக்கிடக்கின்றனர். பரந்து பரவியிருக்கும் பாரதப்படையின் கண்களில் மண்ணைத்தூவி, தமக்குத் தேவையானவற்றை அங்கு கொண்டு சேர்ப்பதென்பது, பகீரதப்பிரயத்தனமாகவே இருக்கின்றது. பச்சைத் தண்ணீரில் அவித்த கோழியையும், வெறும் சோறையுமே நாளுக்கு ஒரு தடவையென உண்ணுகின்றனர். பலவீனம் அவர்கள் உடல்களைப் பற்றிக்கொள்கின்றது. சிறு குழுவாகப் பிரிந்து நிற்கும் இவர்கள் ஏனையவர்களுடன் தொடர்பெடுத்து, பாதுகாப்பான இடம் சென்றடைய காத்து நிற்கின்றனர். இரு துப்பாக்கிகளும், மருத்துவரிடம் இருக்கும் சயனைற் குப்பியுமே அவர்களின் ஆயுதங்களாக இருக்கின்றன. இவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமை வரை இந்திய இராணுவம் வந்து போவது வழக்கமாகி விட்டது. அப்பொழுதெல்லாம் தலையையும், அவயவங்களையும் ஓட்டினுள் இழுத்துக் கொள்ளும் ஆமைகள் போல் தம் நடமாட்டங்களை கட்டுப்படுத்தி விடுவார்கள். ஒரு நாள் எப்படியோ இவர்களின் உள்ளிருப்பை எதிரி மோப்பம் பிடித்து விட்டான். இவர்களைச் சுற்றிவளைத்து வளசமாதியாக்கும் நோக்குடன் முன்னேறவும் தொடங்கி விட்டான். அண்மித்த ஆபத்தை உணர்ந்தவர்களிற்கு தப்பியோடுவதைத் தவிர வேறுவழி தென்படவில்லை. நடக்க முடியாதவர்களை ஒவ்வொருவராக தூக்கி வந்து சில நூறு மீற்றர் பின்னால் இருக்கும் பற்றைகளினுள் புகுத்தி விடுகின்றார்கள். இவ்வாறு இவர்கள் மெல்ல பின்வாங்குகையில் எதிரியின் முன்னேற்றமோ வேகமாக இருக்கின்றது. இவர்கள் இருந்த பகுதியில் கேட்ட துப்பாக்கிச் சத்தங்கள் விரைவாகவே அண்மிக்கின்றது. முடிவெடுக்க முடியாமல் தவித்தார்கள் ஓடக்கூடியவர்களையும் மருத்துவரையும் அவ்விடம் விட்டு நகர்த்துவது எனும் முடிவிற்கு வருகின்றனர்.

இயலாதவர்களை உருமறைத்தவர்கள் ஏனைய காயக்காரர்களை கைத்தாங்கலாகப் பிடித்தும், இழுத்தும் ஓடத் தொடங்குகின்றனர். போதிய உணவின்மையாலும், காயங்களினாலும் நொந்திருந்தவர்கள் மீதமாக இருந்த சக்தி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அனைத்தையும் ஒன்று குவித்து ஓடுகின்றனர். இப்பொழுது அவ் வனத்தை ஒட்டியிருக்கும் வயல்வெளியைக் கடக்கின்றார்கள். எதிரி உலங்குவானூர்தி ஒன்றின் கண்ணில் பட்டு விடுகின்றார்கள். உயிர் பெற்ற அதன் இயந்திரத் துப்பாக்கியின் ரவைகளினால் வயல்வெளிகளில் புழுதி கிளம்புகின்றது. வரம்புகள், சிறுவேலிகள், தாண்டி ஓடியவர்கள் இன்னுமொரு பற்றைக்காட்டினுள் புகுந்து கொள்கின்றனர். அதன் விளிம்பிலிருந்து தமது முன்னைய இருப்பிடத்தை நோக்கியவர்கள் திகைக்கின்றனர். அங்கு எழும் புகைமண்டலம் வான் நோக்கி பயணிக்கின்றது. இவர்களில் எண்மர் விடப்பட்டு விட்டார்கள். அவர்களின் நிலை, இப்பொழுது அவ்விடம் செல்வதென்பது முதலைவாயினுள் தலையை கொடுப்பதற்குச் சமன். அங்கு தங்கி நிற்பதும் சாத்தியமற்றது. பலவாறு எண்ணியவர்கள் ஆதரவாளர்களின் வீடுகள் நோக்கி பயணிக்கின்றனர்.

இதே காலப்பகுதியில் எமது தாக்குதல் அணியொன்று நெடுங்கேணிக் காட்டுப்பகுதியில் முகாமிட்டிருக்கின்றது. தாக்குதல் ஒன்றிற்காக சென்றவர்களில் ஒருவன் மிதிவெடி ஒன்றினால் காலின் ஒருபகுதியை இழந்திருந்தான். ஒருவாறு அவனை தமது இருப்பிடம் கொண்டுவந்து சேர்த்து விட்டனர். சூழ்நிலை இவர்கள் வெளியில் தலைகாட்ட விடவில்லை. அங்கு களமருத்துவம் பயின்றவர்களென்று எவருமில்லை. இயக்கத்திற்குரிய மருத்துவரும் இதயப்பூமிப் பகுதியிலேயே தங்கியுள்ளார். தொடர்பெடுப்பதென்பது முயற் கொம்பானது. என்ன செய்யலாம் என எல்லோரும் கை பிசைந்து நிற்கின்றார்கள். மயக்கமுற்று பின் தெளிந்தவன் கண்களினூடு மரணப்பயம் எட்டிப் பார்க்கின்றது. இப்படியே விட்டால் இறந்த கால் அழுகி இவனின் உயிர்க்கு உலைவைப்பது நிச்சயம். இறந்த இழையங்களையும், சிதைந்த என்பையும் வெட்டி அகற்றினால் ஓரளவு ஆபத்தைக் குறைக்கலாம். பின்னர் 'அன்ரிப்யோற்றிக்ஸ்' எடுத்துக் கொடுத்து சமாளிக்கலாம். தாய் மருத்துவத்தாதியாய் இருக்கும் போராளி ஒருவரின் கேள்வி ஞானம் பேசியது. ஏனையவர்களையும் அது யோசிக்க வைத்தது. மேற்கூறியவாறு செய்வதென்றால் உரிய உபகரணங்கள், மயக்கமருந்து, நோநிவாரணி போன்றன தேவைப்படும். ஆனால் இப்போது அவர்களிடம் இருப்பதோ இரும்பறுக்கும் வாள் ஒன்று தான். ஒன்றும் செய்யாமல் இருப்பதிலும் ஏதாவது செய்யலாம் என்ற முடிவுக்கு வருகின்றனர். நிலைமையை அப்போராளிக்கும் விளங்கப்படுத்துகின்றனர். இனியென்ன செய்வது, ஒரு சிறுதடியில் துணியொன்றைச் சுற்றி அவன் வாயில் திணிக்கின்றனர்.வலி தாங்க முடியாமல் நாக்கைக் கடிக்காமலும், கத்தாமலும் இருப்பதற்கான முன்னேற்பாடுதான் இது. நான்கைந்து பேர் அவனது கைகள், கால்கள், தோள்கள் என எல்லாப்பகுதிகளையும் நிலத்தோடு நிலமாக அழுத்திப் பிடிக்கின்றனர். இவன் 'பிளேற்றால்' தோலை வெட்டுகிறான். அவனோ வலியால் புழுவாகத் துடிக்கின்றான். வேர்வையில் தெப்பமாக நனைகின்றான். மற்றவர்களோ இதனை சகிக்க முடியாமல் கண்களை மூடிய வண்ணம் அவனையும் திமிறவிடாமல் அழுத்திப் பிடிக்கின்றனர். தோலை வெட்டியவன் தசைநார்களை மெல்ல மெல்ல வெட்டுகின்றான். இரத்தம்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சீறிப்பாயும் நாடிகளைப் பிடித்து சாதாரண நூலினால் ஒருவாறு இன்னொருவனின் உதவியுடன் கட்டுகின்றான். இப்பொழுது என்னைச் சரசரவென இரும்பறுக்கும் வாளினால் வெட்டுகின்றான். இதுவரையும் திமிறியவன் அனைவரது பலத்தையும் உதறியெள முனைகின்றான். இவர்களும் விட்டபாடில்லை. சொல்லமுடியா வேதனையில் துடித்தவன் மெல்ல மெல்ல அதிர்ச்சி நிலைக்கு சென்று மயக்கம் அடைகின்றான். கால் வெட்டுப்பட்டு விட்டது. கட்டாமல் விடப்பட்ட குருதிக்கலன்களால் பெருகும் குருதி நிற்கவில்லை. உடனேயே சறத்துணியொன்றினால் இறுக்கமான கட்டுப்போடுகின்றான். பின் அக்காலை கயிறொன்றின் ஒரு நுனியில் கட்டி மறுநுனியை கொட்டிலின் முகட்டில் கட்டி காலை உடம்பிற்கு செங்குத்தாக உயர்த்தி விடுகின்றான் இதய மட்டத்திலும் அது நன்றாக உயர்ந்ததால் குருதிப்பெருக்கம் நிற்கின்றது. பணி முடிவடைய ஏனையவர்களும் தங்கள் அங்கங்களே வெட்டப்பட்டது போல் சோர்ந்து விழுந்து விடுகின்றனர். மறுநாள் வெளியில் இருந்து ஒரு மாதிரிக் குறித்த நுண்ணியிர்க்கொல்லி மருந்துகளை எடுத்தவர்கள் அவனைக் காப்பாற்றுகின்றனர்.

பெரும் வல்லரசு ஒன்றிற்கு எதிராய் போர்புரிகையில் ஏற்படும் இயல்பான இராட்சத பயமுறுத்தல்களிற்கும் நெருக்கடிகளிற்கும் நாமும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. பின்னர் இந்திய இராணுவம் இங்கிருந்து வெளியேற்றப்படுகின்றது. இலங்கை அரசுடனான சமாதான காலத்தில் மருத்துவப்பிரிவின் விரிவாக்கம் விரைவாகவே நடைபெறுகின்றது. எதிர்பார்த்தவாறே இவ் அரசுடனான போர் மூண்டது. வியாபகம் பெற்றிருந்த மருத்துவ அணி இராணுவப் பிரிவின் முன்னேற்றகரமான செயற்பாடுகளிற்கு ஈடுகொடுத்து வருகின்றது. எனினும் தங்கு நிலை என்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கின்றது. கெரில்லா இயக்கம் என்னும் நிலையிலிருந்து மரபுவழி இராணுவமாக மாறும் பொழுது தேவைப்படும் கட்டமைப்புக்கள் சீர்செய்யப்படுகின்றன. 1991ம் ஆண்டு ஆனையிறவுத் தளம் மீது ஆகாயக் கடல் வெளித்தாக்குதல் தொடுக்கப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கான போராளிகளை ஒருங்கிணைத்து மேற்கொண்ட அத்தாக்குதல் பூரண வெற்றியை கொடுக்கவில்லை. எனினும் ஏனைய துறைகளைப் போலவே பல பெறுமதியான அனுபவங்களை மருத்துவத்துறைக்கும் விட்டுச் சென்றது. பின்னர் ' தவளைப்பாச்சல்' தாக்குதலின் போது போராளிகளுடன் இராணுவ மருத்துவர்களும் களமிறங்குகின்றனர். அதில் பெறப்பட்ட வெற்றிவிகிதம் எமக்கு உற்சாகத்தை கொடுக்கின்றது. எனினும் எம் மருத்துவ வளம் யாழ்நகரையே தளமாக கொண்டிருப்பதால் போர்ச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் எல்லோரும் பெரும் சிரமத்தின் மத்தியில் இங்கு கொண்டு வரப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதனால் ஆளணி போன்ற சமருக்கான வளங்கள் அடிக்கடி திசை திருப்பப்படுகின்றது. இது நம் தேவையை ஈடுசெய்யக்கூடிய வகையில் வளரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இதனால் ஏனைய மாவட்டங்களில் பல சாதகமான இலக்குகள் இருந்தும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காயமடைந்தவர்கள் நிலை கவனத்தில் எடுக்கப்பட்டதால் தாக்குதல்கள் கைவிடப்படுகின்றன.

இவ்வாறு இருக்கையில் முன்னேறிப்பாய்தல், சூரியக்கதிர் போன்ற எதிரியின் முன் முனைப்புப் பெற்ற தாக்குதல் பரந்துபட்ட போர்முனைகளை திறந்து விடுகின்றது. இதற்கேற்ப எம் மருத்துவ அணிகளும் நகர்த்தப்படுகின்றன. எதிரியின் ஆக்ரோசமான தாக்குதலுடன் கூடிய வேகமான முன்னேற்றத்தினை வெற்றி கொள்ள முனைகையில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாரிய காயங்களுக்குட்படுகின்றனர். இவர்களில் அறுநூற்றுக்கு மேற்பட்டோர் யாழ் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுகின்றனர். இவ்வேளை எதிரியின் தந்திரோபாயம் அறியப்படுகிறது. நாவற்குழிப் பிரதேசத்தில் ஒரு தரையிறக்கம் செய்து, யாழ் மக்களையும், போராளிகளையும் முற்றுகையொன்றில் கையகப்படுத்துவதென்பது. உடனடியாக மக்களுடன் சேர்ந்து நாங்களும் வெளியேறி சாவகச்சேரிப் பகுதிக்கு வருமாறு பணிக்கப்படுகின்றோம். உடனே என்ன செய்வதென அறியாது திகைத்தோம். யாழ் நகருடன் சேர்ந்து மருத்துவமனையும் அல்லோலகல்லோலப்பட்டது.

மருத்துவமனையில் இருந்த போராளிகளை வாகனங்களில் ஏற்றி விரைவாக வெளியேற்ற முற்பட்டோம். கிடைத்த செய்தி அதிர்ச்சியளித்தது. எந்த வாகனங்களும் செம்மணியூடாக நகர முடியவில்லை என்பதே. ஏனெனில் பல லட்ச மக்களால் அவ்வீதி நிரப்பப்பட்டிருந்தது. உடனேயே நிலைமையை எடுத்துக் கூறி நடக்கக் கூடிய போராளிகளை மக்களோடு மக்களாக வெளியேறுமாறு பணித்தோம். நடக்க முடியாதவர்களை 'ஸ்ரெச்சர்களில்' தூக்கிச் சென்றோம். கொட்டும் மழையூடாக சேற்று நிலங்களை தாண்டி நடக்கையில் தவறி விழுந்ததால் பொருந்தும் தறுவாயில் இருந்த பலரின் கால், கை என்புகள் மீண்டும் முறிந்தன. இன்னும் சில நூறு போராளிகளை வெளியேற்ற முடியாமல் இருந்தது. அவர்களை கிழக்கரியாலைக் கடற்கரையில் கொண்டு போய் கிடத்தினோம். நிகழ்வுகளின் போது தவிர்க்க முடியாத காரணத்தால் சிலர் உயிரைக் கொடுத்தனர். வாழ்வா? சாவா? எனும் போராட்டத்தில், சுதந்திரமானது மீண்டும் ஒருமுறை தன்விலையை உயர்த்திக் கொள்கின்றது.

இப்பொழுது சாவகச்சேரி, மந்திகை போன்ற பகுதிகளிற்கான மருத்துவமனைகள் காயமடைந்த, நோய்வாய்ப்பட்ட மக்களுடன் விழுப்புண்ணடைந்த போராளிகளால் நிரம்பி வழிகின்றன. நடைபாதையோரமெங்கும் படுக்கைகள் எதுவுமின்றி, அவர்கள் நித்திராதேவியுடனும் நோய் அரக்கனுடனும், சமரசம் செய்ய முற்படுகின்றனர். சோவெனப் பெய்த மழையின் சாரலும் போர்வையின்றிய அவர்களைப் போருக்கு அழைக்கின்றது. அவர்களை இயன்றளவு கவனித்த வண்ணம் மருத்துவத்தளத்தையும் வன்னிக்கு மாற்றுவதில் ஈடுபடுகின்றோம். பலர் பூரண சுகமடைய முன்னரே களமேகம் முண்டியடித்தது ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. அதே வேளை மருத்துவத்தின் தங்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நிலையைத் தவிர்க்கும் முகமாக தகைமையுள்ள போராளிகள் உள்வாங்கப்பட்டு துணை மருத்துவப் பகுதிகள் சம்பந்தமான படிப்பித்தல்களும் பயிற்சிகள் வழங்குதல்களும் விரைவுபடுத்தப்படுகின்றன.

வெற்றியினை பூரணமாக்கத் துடித்த எதிரியின் இரகசிய ஊடுருவல் எம் கண்காணிப்பையும் மீறி நிகழ்ந்து விட்டது. இதனால் மீண்டுமொரு பாரிய நெருக்கடியைச் சந்தித்தோம். ஏனைய வளங்களை விடுத்து ஏற்கனவே காயமடைந்தவர்களையும் தடுப்புச்சமரில் காயமடைபவர்களையும் வெளியேற்றினோம். கிளாலிக் கடலேரி மக்கள் வெள்ளம் சேர்ந்து சில நூறு மீற்றர்கள் உள்வாங்கப்பட்டதால் மனதில் சுமையேறியது. ஒரு இயந்திரப் படகுடன் பல படகுகளை இணைத்து காயமடைபவர்களை அவற்றில் ஏற்றி மெய்ய மெய்ய கடலைக் கடக்கையில் அலையடிப்பு சூழலை கடினமாக்கும். குளிரின் விறைப்பு என்புகளைத் தாக்கும். வேலைப்பளுவும், தொடரான தோல்விகளும் மனச்சோர்வைக் கொடுத்தன. நம்பிக்கையாய் எமக்கு இருந்ததெல்லாம் தலைவர் அவர்கள் தான். இந்திய இராணுவத்தை வெளியேற்றியது போல் மீண்டும் அவர் வெற்றிகளைப் பெற்றுத் தருவார் எனப் பூரணமாக நம்பினோம்.

வன்னிப் பகுதியில் உள்ள எம் மருத்துவமனையில் சில பத்துப் போராளிகளே சிகிச்சை பெறுகின்றனர். ஏனையோரில் பெரும்பாலானோர்கள் கள முனைகளிற்கோ அன்றி ஓய்விற்கோ சென்று விட்டனர். தீவிர பயிற்சிகளில் ஈடுபடுகையில் காயமடைந்து வருபவர்களுக்கான சிகிச்சைகளை மேற்கொள்வோம். அவற்றை வெற்றிகரமாக செய்கையில் மகிழ்ச்சி மனதில் பூக்கும். நம்பிக்கை நாற்று நன்றாகத் துளிர்விடும். எனினும் அச்சமொன்று எட்டிப் பார்க்கவே செய்யும். பலநூறு போராளிகள் காயமடையும் சமரை எங்களால் செய்ய முடியுமா? அம்மருத்துவப் பழுவை சுமக்க முடியுமா? கேள்விகள் எழுகையில் 'நாங்கள் செய்வோம்' என்னும் நம்பிக்கை இயக்கத்திற்கு இருக்கென பிரதம மருத்துவர் நம்பிக்கையை வெளிப்படுத்துவர்.

திடீரென வந்த அழைப்பின் பேரில் எங்களில் சிலர் இரகசிய முகாம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு சில நூறு போராளிகள் குழுமியிருந்தனர். உரிய வசதிகள் செய்து தரப்பட்டு அவர்களிடமிருந்து இருநூறு 'பைந்' குருதி பெறும்படி பணிக்கப்பட்டோம். ஒரு தடவையில் இவ்வளவு இரத்தமா? ஊகிப்பதில் சிரமமில்லை.... அப்படியானால் எங்கு? எப்பொழுது? மனதில் எழுந்த வினாக்களை அசட்டை செய்தபடி பணியை விரைவுபடுத்த முனைகின்றோம். 'இரவு 9.30ற்கு முன்னர் வந்து சேருங்கள்' வோக்கியில் வந்த செய்திக்கமைய முன்னர் சென்றிராத அம்முகாமை சென்றடைந்தோம். ஆச்சரியம் காத்திருந்தது. புதிதாக இரகசியமாக அமைக்கப்பட்டிருந்த மருத்துவமனை, மின்னொளியில் மிளிர்ந்து கொண்டிருந்தது. சில [illegible]ப் புரிந்தோம். அங்கு இயக்க

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மருத்துவப் பலத்தில் பெரும்பகுதி குவிக்கப்பட்டிருந்தது. 'இரவு 10.50ற்கு சண்டை தொடங்கும். பலநூறு காயம்வரும் விடிய உங்களிற்கு கிடைக்கத் தொடங்கும' அறிந்த செய்தி. இனம்புரியா உணர்வை ஏற்படுத்தியது. எமது வல்லமைக்குட்பட்ட அனைத்து வகைகளிலும் ஒழுங்கமைப்புக்கள் செய்தோம். வலிந்து நித்திரைக்குச் சென்றோம். சில நாட்களிற்கு அது எமக்கு கிடைக்காது என்பதை அனுபவத்தில் உணர்ந்தே இருந்தோம்.

18.07.96 அதிகாலை வேகமான வாகனங்களின் இரைச்சல் செவிப்பறைகளை அதிரச் செய்கின்றது. தொடராக வந்த வாகனங்களில் இருந்து பலவகைப்பட்ட காயக்காரர்கள் இறக்கப்படுகின்றனர். அனுமதிக்கும் விடுதி நிறைந்து வழிகின்றது. நிலத்தினைப் படுக்கையாகவும், மரநிழல்களை கூரையாகவும் எண்ணி எங்கும் காயக்காரர்கள் பரப்பப்படுகின்றனர். வலியின் பிரதிபலிப்புக்களான அழுகுரல்கள், முனகல்கள் போன்றவற்றால் அப்பகுதி ஆக்கிரமிக்கப்படுகின்றது. சற்றுத் தொலைவில் கேட்டுக் கொண்டிருந்த எறிகணை வேட்டுச் சத்தங்களூடு 'வோக்கிகள' தாங்கிவந்த 'ஓயாதஅலைகள் -01' வெற்றிச் செய்தி உற்சாகமளிக்கின்றது.

அவ்விடம் இயங்கத் தொடங்கி மூன்று நாட்கள் நகர்ந்துவிட்டன. அங்கு பணியாற்றுபவர்கள் இரகசியப் பாதுகாப்புக் கருதி போராளிகளாகவே இருந்தனர். பெரும்பாலும் அவர்கள் 72 மணித்தியாலமாக ஓய்வின்றி, நின்றும் ஓடியும் பணியாற்றிக் கொண்டிருந்ததால் மிகவும் களைப்படைந்திருந்தனர். கண்கள் இரத்தச் சிவப்பு ஏறியிருந்தன. கணுக்கால்கள் ஆனைக்கால்கள் போன்று வீங்கியிருந்தன. ஒவ்வொரு அடியெடுத்து வைக்கையிலும் குதிக்காலில் ஏற்படுத்தும் வலி உச்சந்தலை சென்று தாக்குகின்றது. அனைவருக்கும் முதல் சுற்று சத்திரசிகிச்சை செய்து முடிக்கப்பட்டிருந்தது. இதன் போது களஞ்சியம், தொற்று நீக்கும் அறை, மீள் உயிர்ப்பளிக்கும் இடம், பிரதான சத்திரசிகிச்சைக் கூடம் ஆகிய இடங்களில் பணியாற்றியவர்கள் எல்லோரும் ஆங்காங்கே விழுந்தும், மேசைகளில் சாய்ந்தும், நித்திரை செய்யத் தொடங்கிவிட்டனர். அப்பொழுது எதிரி நாங்கள் காயமடைந்தவர்களை 'சயனைட்' கொடுத்துக் கொல்கின்றோம் எனும் பொய்யான செய்தியை விடுத்துக் கொண்டிருக்கின்றான்.

சடசடக்கும் இயந்திரத் துப்பாக்கிகளினதும். விழுந்து வெடிக்கும் எறிகணைகளினதும் சத்தங்களினால், சமர்க்களம் அதிர்கின்றது. பலநூறு மாலை நேரச் சூரியன்களாய் வானில் பரந்திருக்கும் பரா வெளிச்சத்தால் வர்ணஜாலம் ஒன்று அரங்கேறுகின்றது. 10.12.98 ஓமந்தை, ரம்பைக்குளப் பகுதியிலான ஜெயசிக்குறு முறியடிப்புச் சமரில் மூன்றாவது வலிந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு எமது கட்டுப்பாட்டில் வந்தவுடன் சிறிது தூரம் சென்று மேலதிக சிகிச்சை செய்தபின்னர், மீண்டும் நகர்ந்து இன்னொரு அணியுடன் சேரவேண்டும். ஆனால் சமர்க்களம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமக்கு சாதகமாக அமையவில்லை. இதனால் மீண்டும் கிழக்குப் பகுதியினூடாகவே பின்வாங்க வேண்டிய நிலை உருவாகின்றது. அப்பகுதிகளினூடாக நாம் இரசிய நகர்வாய் வந்து சேர இரண்டு நாட்கள் எடுத்திருந்தது. ஆனால் இப்போது விடிவதற்குமுன் திருப்பிச் செல்லாவிடின் எதிரியின் முற்றுகைக்குள்ளாகும் ஆபத்திருகின்றது. இரண்டு ரக்ரர்களும், ஒரு ஜீப்புமே எம்மிடம் உள்ளன. இவற்றின் உதவியுடன் சுமார் நூறு காயக்காரரை ஏனைய வாகனங்கள் வரக்கூடிய இடத்திற்கு அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. பின்வாங்கும் படலம் வேகமாக ஆரம்பித்தது. முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கு கூட எறிகணை விழும் சூழலும் நேரமும் அனுமதிக்கவில்லை. அப்பொழுது ஒரு பெண் போராளி கால் சிதைந்து, குருதியிழந்து, அதிர்ச்சிக்குள்ளாகி உயிர்போகும் நிலையில் கொண்டு வரப்படுகின்றார். ஒரு போராளிக்கு சிகிச்சையளிக்க முயற்சித்து ஏனையவர்களை மீளவும் காயங்களிற்குள்ளாக்கவோ அன்றி இழக்கவோ அங்கு நின்ற தளப்பொறுப்பாளரின் இராணுவ மனநிலை இடங்கொடுக்கவில்லை.

ஆனால் இராணுவ மருத்துவர்களின் மனநிலையோ வேறாக இருக்கின்றது. உரிய சிகிச்சை கொடுத்தால் உயிர் பிழைக்க வைக்கலாம். உடனேயே மற்றவர்களை வாகனத்தில் ஏற்றும் நேர இடைவெளிக்குள் 'ரோச்' வெளிச்சத்திலேயே காலை வெட்டி அகற்றி கட்டுப்போட்டு, இரத்தம் பரிசோதித்து ஏற்றக் தொடங்கிவிட்டார்கள். மிகுதியாக உயிர்காக்கும், நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் ஏற்ற வேண்டியுள்ளது. இவர்கள் மருந்தைக் கையில் எடுக்கவும், அந்நோயாளியை மற்றவர்கள் ரக்ரரில் ஏற்ற, அது சீறிப் புறப்படவும் சரியாக இருந்தது. உடனேயே ஒரு பெண் இராணுவ மருத்துவர் அம்மருந்துகளைக் கையில் எடுத்துக் கொண்டு, சிலநூறு மீற்றர்கள் வேகமாக ஓடி அவ் ரைக்ரரை கலைத்துப் பிடித்து தாவி ஏறி பராலைற்றின் வெளிச்சத்தில் அவற்றை நோயாளிக்கு செலுத்திவிட்டு இறங்கி வருகின்றார். அப்போது வீதியின் இருமருங்கிலும் விழுந்து வெடிக்கும் எறிகணைச் சிதறல்களும், புகை மணமும் அச்சத்தையே ஏற்படுத்துகின்றது.

எனினும் அப்போராளியின் முகத்தில் ஒரு பூரிப்பு ஒளிர்கிறது. மேற்படி காலிழந்த போராளி ஏழு நாட்களின் பின்னர் சுயநினைவு வரப்பெற்றார். சுமார் 56பைந் திரவ ஊடகம் ஏற்றப்பட்டிருந்தது. வெற்றியின் மகிழ்வையோ, தோல்வியின் சோகத்தையோ உணர்ந்து பிரதிபலிக்க முடியாது. வேதனை ஒலிகளே போர் மருத்துவச் சூழலை ஆக்கிரமிப்பது வழமையானது. எனினும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் 'களமுனையில் காயமடையும் ஒவ்வொருவரையும் காப்பாற்றும் போது நீங்கள் நூறு போர்க்களங்களுக்குச் சென்ற மனத்திருப்தியைப் பெறுவீர்கள்' என தலைவர் அவர்கள் சந்திப்பொன்றில் கூறியது நிதர்சனமாவதை உணர்கின்றோம்.

12.12.1999 இல் எண்ண ஓட்டமானது கடந்தகாலம் தவிர்த்து நிகழ்காலம் திரும்புகையில், சத்திரசிகிச்சைக் கூடம் ஆனது பரப்பரப்பாக இயங்கிக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொண்டிருக்கிறது. வெப்பம் வெளிவிடாமல் பாய்ச்சப்படும் ஒளிக்கற்றையில் அந்தச் சிதறல் காயம் தெளிவாகத் தெரிகிறது. மெல்ல மெல்ல அதனை வெட்டியும் பிரித்தும் ஆராய்ந்த வண்ணம் இருக்கின்றார் சத்திரசிகிச்சை மருத்துவர். முழங்கையிற்கும் தோள்பட்டைக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் காயத்தினால் என்பு சிதைவடைந்து விட்டது. ஆனால் அதன் அருகில் செல்லும் மேல் அவயவத்திற்கான பிரதான நாடி சேதமடைந்திருந்தாலும் அந்த நாடி திருத்தப்படல் வேண்டும். குறைந்தது மூன்று நான்கு மணித்தியாலங்கள் தேவைப்படும். இரண்டு நாள் தொடரான வேலையின் களைப்பும் தொடர்ந்து செய்ய வேண்டிய வேலையின் இருப்பும் அந்நாடி சேதமடைந்திருக்கக் கூடாது என்னும் எதிர்பார்ப்பையே எல்லோரிலும் ஏற்படுத்தியிருக்கின்றது. மறுகையில் அவருக்கு குருதி ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. என்பைச் சிதைத்த பின்னர் முனை மழுங்கியவாறு இருக்கும் ரவையானது எடுக்கப்பட்டு விட்டது. 'ஆட்றி டமேஜ்சாகவில்லை, வூன்ரொயிலற் செய்திட்டு பிஓபியை போட்டால் சரி என மருத்துவர் கூறவும்' ஏனையவர்களின் முகங்கள் பிரகாசமாகின்றன. அப்பொழுது இன்னொருவர் கூறுகின்றார்.

மற்றக் காயமும் இதே மாதிரித்தான். ஆனால் பிரச்சினையில்லை என்று நினைக்கிறேன். 'டொக்டர் நடந்தது தெரியுமா? என்றவள், சிகிச்சைக்குட்படும் எதிரியையும், போராளியையும் பற்றி விபரிக்கின்றார். "இருவரும் ஒன்றாகத்தான் காயப்பட்டவர்கள். இவன் கடைசிவரை நின்று சண்டை பிடித்தவன். காயப்பட்ட பிறகு தான் சரணடைந்தான். ஆள் மெயினில் சாப்பிட ஏலாமல் இருக்க எங்கட ஆள்தான் ஊட்டிவிட்டவர் பிறகு ஒன்றாகத் தான் இரண்டு பேரையும் வாகனத்தில் கொண்டு வந்தவையள். இப்ப ஒன்றாக தியேட்டருக்கு எடுக்கின்றோம்" அதனை ஒரு புன்சிரிப்போடு கேட்டவர், தனது சிகிச்சையை முடிக்கையில், 'டொக்டர் ஆளை நாளைக்கு அனுப்பி விட்டாம்' என்கிறான், இன்னொருவன் சரியென்று தலையாட்டியவர், மற்றப் போராளிக்கான சிகிச்சையில் ஈடுபடுகின்றார். இரண்டாம் நாள் பத்திரிகை அச்செய்தியைத் தாங்கி வருகின்றது. 'ஓயாத அலைகள் - 03 இல் சரணடைந்த இரண்டு இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டனர். அதில் மேற்படி எதிரியின் பெயரும் இடம்பெற்றிருக்கிறது.'

❖

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மருத்துவப்பிரிவின் உயிர்வாழ்வு



களங்களில் காயமடைந்தவர்களுக்கும், நோய்வாய்ப்படுவோர்களுக்கும் மருத்துவர்கள் 'கடவுளாக'த் தெரிவதுண்டு. தமிழீழத்தைப் பொறுத்தவரை பல சந்தர்ப்பங்களில் இயக்க மருத்துவர்களுக்கு கடற்புலிகளே கடவுள்களாகத் தென்படுவர். தமிழீழத்தைப் பொறுத்தவரை அதன் நிலப்பரப்பிலும் நீர்ப்பரப்பும் பெரியது. போரிலும் அதன் முக்கியத்துவம் பெரியது. இங்கு மருத்துவத்தின் செயற்பாட்டிற்கும் இதுவே ஊட்ட சக்தியென்பது பலரால் புரியப்படாத ஒன்று.

போராட்டத்தின் ஆரம்ப காலங்களில், சிறுகாயங்களுக்கும் எம் கடற்பரப்பைத் தாண்டவேண்டியிருந்தது. யாழ்நகர் எம் கட்டுப்பாட்டிற்குள் வந்த போதும், பாரிய காயங்களும் மீள் சீராக்கலுக்கு உட்படவேண்டிய காயங்களும் அவ்வாறே கொண்டு செல்லப்பட்டன. இந்திய சுழப்போர்க் காலகட்டத்தில் இரயபூமியில் இருந்த இயக்க உயிர் மையத்திற்கான அனைத்துத் தேவைகளும் கடல் வழியாகவே தீர்க்கப்பட்டன.

பாரிய வளங்களின் ஒருங்கூட்டலுடன் மேற்கொள்ளப்பட்ட பூநகரிச்சமரின் போதான சம்பவங்கள் எமக்கு நேரடி விளக்கத்தைக் கொடுத்தன. யாழ் நிலப்பரப்பிலிருந்தும், வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்தும் சிலவாயிரம் போராளிகள் பூநகரி இராணுவத் தளத்தினைச் சிதைக்கத் தொடங்கினர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை நான்காம் இலக்கத்தைத் தொட்டது. எம் பயன்பாட்டிற்குரிய மருத்துவ வளங்கள் யாழ் மருத்துவமனையிலேயே நிறைந்திருந்தன. ஆதலால் விழுப்புண்ணேற்ற அனைவரையும் அங்கு கொண்டு செல்வது தவிர்க்க முடியாததாக அமைந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பகலில் பூநகரி நீரேரி தாண்டுதல் என்பது முதலைவாயினுள் தலையைக் கொடுப்பதற்குச் சமமானது. வான்பரப்பை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்த சிறிலங்கா வான்படையால், சிறுசிறு வேகப்படகுகளில் அனுப்பப்பட்ட அவசரக் காயக்காரர்களுடன் படகுகள் சிதைந்தும், சிதறியும் கடலில் மிதந்தன. காக்க முனைந்தவர்களும் வீரச்சாவைத் தழுவினர். எனினும் போர்ச்சுவாலை முனாசி எரிந்தவண்ணமேயிருந்தது. விழுப்புண் அடைந்தவர்களின் எண்ணிக்கை மருத்துவர்களைக் கையறுநிலைக்கு கொண்டுவந்தது. இறப்பு வீதம் அபரிதமாக அதிகரிக்கத் தொடங்கியது. இன்றுள்ள சில மூத்த தளபதிகளும், துணைப்பொறுப்பாளர்களும் மரணத்தின் வாசலில் கிடத்தப்பட்டனர். தொலைத்தொடர்புக் கருவிகள் சங்கேத பாசைகளில் அலறுகின்றன. திடீரென கடற்புலிகள் பக்கமிருந்து அதிசய செய்தி வருகின்றது. நாகதேவன்துறையில் கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகுகள் காயக்காரரை ஏற்ற விரைந்து வருவதாக. வார்த்தைகள் தேனாகும் என்பது உண்மையென உணரப்படுகின்றது. நூற்றுக்கணக்கான காயக்காரரை அவர்கள் இக்கரை சேர்த்தனர். இல்லை காலனிடமிருந்தே மீட்டனர். காட்சி விளைவுகள் ஏற்படுத்தும் மனப்பதிவின்படி கடற்புலிகள் மீண்டும் மீண்டும் 'கடவுள்களாயினர்'

இப்பொழுது யாழ்நகர் இடம்பெயர்கிறது. யாழ்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பலநூறு காயக்காரர்களையும் தென்மராட்சிக்கு நகர்த்த முடியாத நிலை, எமக்கிருந்த நம்பிக்கையெல்லாம் கடற்புலிகள் தான் மீண்டும் காயக்காரர்களை அடிப்படை மருத்துவ வசதிகளுடன் மட்டும் கிழக்கரியாலை கடற்கரையில் கொண்டுபோய்க் கிடத்தினோம். கடற்புலிகள் உதவியுடன் வன்னிக்கு கொண்டு செல்வதற்காக. ஆனால் கவலைக்குரியவிடயம் என்னவென்றால் எமது பிரதான மருத்துவர்கள் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலேயே முகாமிட்டிருக்கவேண்டிய தேவை உருவாகியிருந்தது. ஆதலால் வன்னியிலிருந்து மீண்டும் இப்பகுதிக்கு காயக்காரரைக் கொண்டுவர வேண்டும். இருநாள் கழிய சிலரைப் பிரிந்து சாவகச்சேரி வந்தோம்.

இப்போது தேவைக்கேற்ப பகுக்கப்பட்ட மருத்துவவளங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு கொண்டுவரப்பட காயமாற்றும், உயிர்காக்கும் செயற்பாடுகள் தென்மராட்சியில் நடைபெற மணலாறு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் காயமடைபவர்கள் தென்மராட்சி கொண்டுவர என முரண்பட்ட நிலையொன்றில் செயலாற்றினோம். எல்லாவற்றிற்குமான பழுவை கடற்புலிகளே சுமந்தனர். பலவருடங்களாக உருவாக்கப்பட்ட மருத்துவமனைகளை சில நாட்களிலேயே கடலினூடு நகர்த்துவ தென்பது கற்பனைக்கு அப்பாற்பட்டது. எனினும் அதுநிறைவேற்றப்பட்டது. தமது சிறுசிறு மீன்பிடி வள்ளங்களையும் எமக்களித்து, மக்கள் தாமும் ஓட்டிகளாக தொழிற்பட்டு அன்று எமக்கு வரலாற்றில் ஏற்பட்ட பாரிய தடை தாண்ட உதவின.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவை இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்க பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுவாய் சாவகச்சேரியினுள் எதிரி புகுந்துவிட்டான். இலட்சக்கணக்கான மக்கள் கிளாலிக்கரையில் உயிரைக்காக்க கூடிவிட்டார்கள். காயமடைந்த போராளிகளை அகற்ற அவர்கள் உதவியது மனதைக் கசியவைத்தது. மக்களோடு சென்ற படகுகளை விமானத்தாக்குதல் மூலம் எதிரி மூழ்கடித்த மனித அவலங்கள் எம் மனங்களைக் கல்லாக்கின. சோகங்கள் தொடர்கதையாக கடற்புலிகளின் வேகமான செயற்பாடு மட்டுமே எமக்கு சிறு உற்சாகத்தைத் தந்தது.

இக்காலப்பகுதியில் இன்னொரு அதிர்ச்சியான செய்தி எம் இதயங்களை இடித்தது. வலிகாமம் பகுதியில் நின்ற எமது சிறப்பு அணிகளும், இராணுவ மருத்துவர்களுமாய் பலர் முற்றுகையொன்றை உடைக்க முற்படுகையில் நூற்றுக்கு மேற்பட்டவர் வீரச்சாவடைந்து விட்டனர். அவர்களில் தப்பியிருக்கும் சிலரையும் காயக்காரரையும் இங்கு கொண்டுவர வேண்டும். அதற்குக் கடற்புலிகள் பெருங்கடலையே பயன்படுத்தினர். அவ்வேளை அதற்கான எரிபொருள் சேகரிப்பதென்பது மிகவும் சிரமமானதொன்று. அப்பணியில் ஈடுபடும் போதும் ஒரு படகு விபத்திற்குட்பட்டு சிலர் கடலில் மூழ்கினர். மீண்டும் மீண்டும் சோகங்களைச் சகித்துப் பணியாற்ற வேண்டியிருந்தது.

எமது பலத்தில் 90வீதம் அழிந்து விட்டதென எதிரி அறிக்கைவிட்டுக்கொண்டிருக்க, புலிகள் விஸ்வரூபம் எடுப்பதற்காக மூச்சுவிட நேரமின்றி பயிற்சி எடுத்துக் கொண்டிருக்க, கைநழுவிவிட்ட மருத்துவ வளங்களை மீளச்சேர்க்க எறும்பு தீனிசேர்ப்பதாக உரியவற்றை கடற்புலிகள் எம்மிடம் கொண்டுவந்து சேர்க்கவென நிகழ்வுகள் தொடர்ந்தன. 1996ஆம் ஆண்டு யூலை 18 வெற்றிபெறுவோம் எனும் செய்தியுடனும் பலநூறுகாயக்காரர்களுடனும் விடிந்தது.

உயிர்காக்கும் வேகத்தில் எம்மருத்துவ வளங்கள் வற்றிப்போயின. சில நாட்களிற்கான மருத்துவ வசதிகளே எம்மிடம் இருந்தன. எனினும் எதிரி முல்லைத்தீவு தோல்வியை மூடிமறைக்க கிளிநொச்சி நகரைக்கைப்பற்றும் நோக்குடன் சத்ஜெயவைத் தொடங்கிவிட்டான். ஓயாத அலைகள் –01 வெற்றியை ஆறுதலுக்காயினும் இரைமீட்க முடியாத நிலை. மீண்டும் கடற்புலிகள் கைகொடுத்தனர். எங்கிருந்தோ வெல்லாம் மருந்துகள் கொண்டுவந்து தந்தனர். மீண்டும் எம் தொழிற்பாடு வேகமெடுத்தது. சமர் தன்வேகம் தடைப்படாது தொடர்ந்தது.

பின்னொருதரம் திடீரென திருமலைக்காடுகளில் கரந்துறைந்திருந்த புலிவீரர்கள் தொற்று நோயால் பாதிக்கப்பட்டார்கள். சிலபேர் சாவடைந்து விட்டார்கள் பலபேர் மயக்கமடைந்து விட்டார்கள். தொலைத்தொடர்புக்கருவிகளும் ஈனக்குரலிலேயே செய்தியைத் தந்தது. அவசரமருத்துவ உதவிகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வழங்கப்படவேண்டும். மாரிமழையோ வானைப்பிளந்து கொட்டுகிறது. கடலில் அலைகள் சிறுமலைகளென எழுந்து ஆர்ப்பரிக்கின்றது. போர்க்கலங்களை இந்நிலையில் கடலில் இறக்குவதென்பது அவர்களது வரலாற்றில் நடக்காதது. எனினும் கட்டளை பிறந்தது. கடற்புலிகளின் சிறப்புத்தளபதி உட்பட மூத்த தளபதிகள் கடற்கரையில் முகாமிட்டனர். கடற்கலங்கள் மருத்துவர்களைச் சுமந்து கடலில் இறங்கின. எதுவுமே எங்களுக்குச் சாதகமாய் அமையவில்லை. மன ஓர்மத்தைத்தவிர எமது பாதுகாப்புப் படகுகள் எதிரியின் பல 'டோறா' ப் படகுகளுடன் கைகலப்பில் ஈடுபட்டன. எமது மூன்று படகுகள் மூழ்கின மூன்று லெப்கேணல்கள் உட்பட 20ற்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்தனர். தேவையான மருத்துவ வளங்கள் திருமலைக்காட்டை அடைந்தது. சாவை எதிர்கொண்டு சாவில் இருந்து போராளிகளை காத்தோம்.

'ஜெயசிக்குறு' முறியடிப்புச் சமர் தொடர்கின்றது. முதற்காயம் மாறுமுன்னர் மூன்றாம் முறையில் சிதைந்த பொற்தேகங்கள் ஏராளம். எமது ஆளணிவளம் குறைகின்றது. பலர் நிரந்தர ஊனங்களைச் சுமக்கின்றனர். இவர்களைச் சீராக்கினால் தான் நிர்வாகங்களை அவர்கள் பொறுப்பேற்பார்கள் அங்கு பணியாற்றுபவர்கள் போருக்குச் செல்ல முடியும். அதற்கு எதுதேவை? புதிய புத்தகங்கள், நவீன உபகரணங்கள், இப்பொழுது மருத்துவ, வியாபார உலக அறிவுடைய நிலனைச் சுமந்து கடற்புலிக் கலங்கள் பயணம் தொடர்ந்தன.

எவை எவை தேவையென எமது பிரதம மருத்துவர்கள் சுட்டினார்களோ அவற்றையெல்லாம் அள்ளிவந்து குவித்தார்கள். அதற்காக அவர்கள் செலுத்தியவிலையானது என்றோ ஒரு நாள் தனியொருபுத்தகமாகும் வன்னிக்கானகங்கள் நவீன வசதிகளைக் கொண்ட மருத்துவமனைகளை பிரசவித்தன. போராளிகளின் இறப்புவீதம் குறைய, நோய்மாற்றும் வீதம் அதிகரிக்க, எம் போரிடும் ஆற்றல் வாமன அவதாரம் எடுத்தது. ஓயாத அலைகள் 1,2களிலும் அது வெளிப்பட்டது.

திடீரென சில முக்கிய மருந்துகள் பாரிய அளவில் தேவைப்பட்டன. நிலனுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. "இதோ வருகின்றோம்!" என தேவையானவற்றுடன் கடற்புலிகள் புறப்பட்டு வந்தனர். மேகக் கூட்டங்களும், சிறு தீவுமுனைகளும் எம் 'ராடர்' களை ஏமாற்றின. அலையினைக் கிழித்து இருளினூடு விரைந்து வந்த படகுகள் எதிரியின் முற்றுகையினுள் சிக்கின எம்மரபிற்கேற்ப சமராடியவர்கள், இறுதியில் படகுகளை வெடிக்க வைத்தனர். லெப்கேணல் நிலன் கடற்சமர்த் தளபதிகள் உட்பட 10 ற்கு மேற்பட்டவர்களின் வித்துடல்கள், மருத்துவப் பொருட்களுடன் கடலில் மிதந்து அலையில் அடிபட்டு அக்கரை சேர்ந்ததாகசெய்தி வந்தது. எனினும் அவர்களினால் பெற்றுத்தரப்பட்ட வளங்களினால் பல போராளிகளும் மக்களும் மறுபிறப்பு எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிறுரவையொன்று ஊடுருவி முன்னரனை அறுப்பதுவாய் தளபதி கேணல் பால்ராஜ் தலைமையிலான அணி குடாரப்பில் தரையிறங்கியது. ஏனையவற்றைப் போலவே மருத்துவர்கள், உதவியாளர்கள் சிறுசத்திர சிகிச்சைக்கூடங்கள், இரத்த வங்கிகள் என மருத்துவ செயற்பாட்டிற்குத் தேவையான அனைத்தையும் தரையிறக்கி கடமைமுடித்து கடற்புலிகள் தலைநிமிர்த்தினர். அதற்கான ஆரம்பநாள் சமரிலேயே பலரைக்கொடுத்து நூற்றுக்கு மேற்பட்டோர் காயமுற்றனர். போரியல் விஞ்ஞானத்தின் புதிய அத்தியாயத் திருப்பிற்கு கடற்புலிகள் அடிஎடுத்துக் கொடுத்தனர்.

எண்ணிறைந்த கடற்சமரை வழி நடத்தியவரும். எம்மருத்துவ வளத்தில் கணிசமான பங்கு கையிற்குவர காரணமாக அமைந்தவரும், கடற்கரும்புலியும், முன்னணித் தளபதிகளில் ஒருவருமான லெப்.கேணல் அமுதசுரபி பாரிய காயத்திற்கு உட்பட்டிருந்தார். அவரைக்காக்க பல மருத்துவ நிபுணர்கள் ஒரு மாதகாலமாகப் போராடினார்கள் எனினும் எம்நோக்கம் அப்போது கைகூடாமல் போனது. மருத்துவத்திற்கு உயிர்தந்து அதனால் போராளிகளிற்கு உயிர்தந்த ஒரு உயிர் மடிந்து போனது எமக்கெல்லாம் துக்கம் நெஞ்சை அடைத்தது.

நெருக்கடிகளை வென்று தமிழீழம் இன்று அடைந்திருக்கும் அசாத்திய மருத்துவ ஆற்றலின் அத்திவாரங்கள் "கடற்புலிகள்" என்றால் அது மறுப்பிற்கிடமற்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நிலமை



காலத்தின் தேவை அவனை வைத்தியத்துறையில் போர் மருத்துவத்தை தெரிவு செய்ய வைத்திருந்தது. எனினும் அன்று போது மருத்துவமனையின் வைத்தியர் விடுப்பில் சென்றிருந்ததால் அவரிற்குப் பதிலாக கடமை ஏற்றிருக்கிறான். இவன் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கான சிகிச்சையை அளிக்கின்றான். விடுதலைக்கு கொடுக்கப்படும் விலையின் குறியீடாக அந்த மருத்துவமனை காட்சியளிக்கின்றது.

இரணைப்பிள்ளைகளுடன் ஒரு இளம் தாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றாள். அவளோ கட்டிலில் கிடத்தப்பட்டுள்ள தனது இரு சிசுக்களைப் பார்த்தவண்ணம் ஆழமற்ற வேகமான மூச்சை வெளிவிடுகின்றாள். முகம் வெளிறிக் காணப்படுகின்றது. கதைப்பதற்கு கூட இயலாமல் இருக்கின்றது. ஏற்கனவே இருவயதிலும் ஒரு பிள்ளை. காய்ச்சலும் காணப்படுகின்றது. நாடித்துடிப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது. மேற்படி விபரங்களை அவதானித்தும் கேட்டும் அறிந்தவன் சிந்திப்பதற்கு அறிகுறியாகத் தனது தலையை ஆட்டிய வண்ணம் தனது ஓய்வறைக்குச் செல்கின்றான்.

இந்த நோயாளிக்கு தனது முடிவில் மட்டும் சிகிச்சையளிக்காமல் இன்னொரு மருத்துவரின் ஆலோசனையையும் பெறுவது நல்லது என எண்ணுகின்றான். அப்பொழுது முன்னால் மேசையில் கிடக்கும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பேராசிரியர் கனகசுந்தரத்தின் உடற்கூற்றியல் பாடப்புத்தகம் இவனை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வித்தியாசமான உணர்வுலகத்தினுள் இட்டுச் செல்கின்றது. பல தமிழ் மருத்துவர்கள் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருப்பதும் உலகலாவிய ரீதியில் அவர்கள் பணியாற்றுவதும் பெருமை கொள்ள வைக்கின்றது. எனினும் இப்பொழுது என்ன செய்யலாம். இதற்கான ஆலோசனையை யாருடன் கதைக்கலாம். யோசித்தவன் எழுந்து அம்மருத்துவமனையில் பணியாற்றும் எம்.எஸ்.எவ் நிறுவனத்தைச் சேர்ந்த மகப்பேற்று நிபுணரை சந்திக்கச் செல்கின்றான்.

இப்பொழுது இருவரும் அத்தாயைப் பார்வையிடுகின்றனர். M.S.F மருத்துவர்தான் இவவுக்கு மகப்பேறு பார்த்ததாகவும், இரத்தம் அதிகம் வெளியேறியதாகவும் இப்பொழுது இரத்தம் ஏற்ற வேண்டிய நிலையில் உள்ளார் எனவும் கூறுகின்றார். அத்துடன் கருப்பையில் கிருமித் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுவதால் நுண்ணுயிர் கொல்லி மருந்தும் ஏற்றலாம் எனவும் ஆலோசனை வழங்குகின்றார். விரைவில் இரத்தம் ஏற்றாவிட்டால் தாய் இறக்க வேண்டி வரலாம் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். இவள் இறந்தால் நிச்சயம் அந்த இரண்டு சிசுக்களையும் காப்பாற்றுவது என்பது முயற்கொம்பு. இதனைவிட வீட்டில் இன்னொரு பிள்ளை. ஒரு பைந் இரத்தம் இல்லாததால் மூன்று உயிர்கள் தமிழீழத்தை விட்டுப் பிரிய வேண்டுமா? மேற்படி எண்ணங்களால் சூழப்பட்டவன் அவளின் கணவனைத் தன்னை வந்து சந்திக்கச் சொல்லும்படி கூறிவிட்டு இருவரும் விடுதியை விட்டுச் செல்கின்றார்கள்.

அவனைச் சந்தித்த கணவனிடம் விடயத்தை விளங்கப்படுத்துகின்றாள். அவர்களோ இங்கு உறவினர் எவரும் இல்லாதவர்கள். யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் இங்கு வந்து காதலித்து திருமணம் செய்தவர்கள். இருபகுதி வீட்டுக்காரருடன் தொடர்பில்லை. இரத்தம் காசுக்கு வேண்டிக் கொடுக்கவும் வழியில்லை.

அவன் உழைத்தால் தான் அவர்களுக்கு அன்றாடம் சாப்பாடு. எனினும் கணவன் தன்னில் இரத்தம் எடுத்துக் கொடுக்கச் சொல்கின்றான். இதனைத் தவிர வேறு நல்ல வழி இல்லை என்பதால் அவனும் ஏற்றுக் கொள்கின்றான். ஆம் ஒரு பைந் இரத்தத்தினால் மூன்று உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. அவர்களிடையேயான பாசப்பிணைப்புக்கள் பலம் பெறுகின்றன.

அன்று மதியம் மீண்டும் நோயாளிகளை ஒரு சுற்றுப் பார்த்து வரச்செல்கின்றான். அத்தாய் குருதி ஏற்றப்பட்டதால் சற்றுத் தெளிவடைந்திருப்பதை அவதானித்து தன்னுள் மகிழ்கின்றான் 'சாப்பாட்டிலையும் கொஞ்சம் கவனம் செலுத்துங்கோ' என்று கூறியபடி ஏனைய நோயாளிகளைப் பார்வையிடுகின்றான். அவனுக்கு மீண்டும் ஒரு மருத்துவ அதிர்ச்சி கிடைக்கின்றது. இன்னொரு அம்மா

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இரத்தசோகையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். அவவை விசாரித்தவனுக்கு மேலும் தாக்கம் ஏற்படுகின்றது. அவளிற்கு இரு பிள்ளைகள். ஒருவனுக்கு மூன்று வயது, மற்றவனுக்கு ஐந்து வயது. சிறுவர்களுக்கான விடுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களும் இரத்தசோகையினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவருக்கும் இரத்தம் ஏற்றினால் தான் சில நாட்களில் வீடு செல்ல அனுமதிக்கலாம். இவன் பெரிதாக எதுவும் கதைக்காமல் கணவன் வந்தால் தன்னைச் சந்திக்கும்படி அந்நோயாளிக்கு கூறிவிட்டு மற்றவர்களைப் பார்வையிடுகின்றான்.

"ஐயா வரச்சொன்னனீங்களாம்..." குரல் கேட்டு நிமிர்ந்து பார்க்கின்றான். முப்பத்தைந்து வயது மதிக்கலாம். தாடி வளர்ந்திருக்கின்றது. கண்களும் கன்னங்களும் குழிவிழுந்து காணப்படுகின்றது. ஒழுங்காகச் சாப்பிட்டு ஒரு மாதத்திற்கு மேலிருக்கும் போல் உள்ளது. நடந்து வந்ததால் என்னவோ களைப்பு கடுமையாக இருக்கின்றது. போட்டிருக்கும் பழுப்பேறியிருக்கும் பழைய சேட்டினூடாக மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கும் போது விலாஎன்புகள் வெளித்தெரிகின்றன. இவற்றை அவதானித்தவன், கதிரையில் அமரச்சொல்கின்றான்.

"என்ன வேலை செய்கிறீங்கள்?" "மூந்திக் கூலிவேலை செய்தனான். இப்ப ஒன்றுமில்லை" "ஏன்?" "இயலாமல் இருக்குது. ஆஸ்பத்திரிக்கு ஒருமைல் நடந்து வரவே நாலு மணித்தியாலம் எடுக்குது. வரேக்க நாலு இடத்தில இருந்து இருந்து தான் வாறன்." இவ்வளவையும் சொல்லி முடிக்கவே அவன் பரமபிரயத்தனம் செய்கின்றான். "அப்ப எப்பிடிச் சாப்பிடுறீங்கள்?" "நிவாரணத்தைத்தான் நம்பி இருந்தனாங்கள். இப்ப அதையும் நிப்பாட்டிப் போட்டாங்கள். அதுதான்..." என்றவர் வசனத்தை முடிக்காமல் கண்ணீர் விடத்தொடங்கிவிட்டார். இவனுக்கோ என்ன செய்வது என்று தெரியவில்லை. 'சின்னனில ஆம்பிளையள் அழக்கூடாது' என்று அம்மா சொன்னது அர்த்தமற்றுப் போனதை நேரில் காண்கின்றான்.

அவரின் குருதியையும் ஆய்வுகூடம் அனுப்பிப் பரிசோதித்தவன் கவலையுடன் கடுமையாக யோசிக்கின்றான். மனைவி பிள்ளைகளை விட இவர் தான் அதிகம் குருதிச்சோகையால் பாதிக்கப்பட்டுள்ளார். இவர் உழைத்தால்தான் குடும்பத்துக்கு ஓரளவு நல்ல சாப்பாடு கிடைக்கும். ஏனோ அவன் இயல்பையும் மீறி கோபம் வருகின்றது. 'தனியொருத்தனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என பாரதி பாடிப்போட்டுப் போயிற்றான்.

இப்ப என்ன செய்வது. அர்த்தமில்லாமல் மனம் அலைபாய்கின்றது. "இவரோ இரத்தமில்லாமல் இருக்கேக்க எப்பிடி மனிசி பிள்ளையளுக்கு இரத்தம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தடு என்று சொல்லுறது?' பல்வேறுபட்ட கேள்விகளால் துளைக்கப்பட்டவன் முகத்தில் சிந்தனைச்சாயை அப்பிக்கொள்கின்றது. திடீரென அதில் மகிழ்ச்சி ரேகை பரவிக்கொள்கின்றது. தனது சட்டைப்பையை பார்த்தான். அதனுள் ஐநூறு ரூபாய் தாள் இருப்பதனை காண்கின்றான்.

"அப்ப ஒன்று செய்யுங்கள்" என்றவன், சற்று இடைவெளிவிட்டுத் தொடர்கின்றான், "உங்கட மனைவி பிள்ளைகள் இங்கேயே இருக்கட்டும். அவர்களுக்கு கொஞ்ச நாளைக்கு நல்ல சாப்பாடு குடுக்கிறதுக்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தோட கதைச்சு நான் ஒழுங்கு செய்யிறன். ஆனால் நீண்ட நாட்களுக்கு அப்பிடிச் செய்ய இயலாது. அவவுக்கு இரத்தம் ஏத்த ஒழுங்கு செய்யிறன். இந்தாங்கோ இந்தக் காசை பத்திரமாக வைச்சிருந்து விட்ட போய் இரண்டு மூன்று நாளுக்கெண்டாலும் நல்ல சாப்பாடு சாப்பிடுங்கோ. பிறகு ஏதாவது வேலை செய்து உழைச்சு குடும்பத்தைப் பாருங்கோ" என்றவன் தனது பொக்கற்றில் கைச்செலவுக்கு கொடுக்கப்பட்டிருந்த காசை எடுத்துக் கொடுக்கின்றான். அவர் எதுவும் கூறாது கும்பிட்டபடியே தயங்கித் தயங்கி வேண்டுகின்றார். அப்பொழுது உதவிக்கு நின்ற ஊழியர் கேட்கின்றார். "ஐயா பிளட்டுக்கு எங்க போகப் போறியள?"

"டிரி சரிவந்தால், என்ர பிளட்டை கொடுக்க வேண்டியது தான்" இவர் கூற அவன் விழிகள் ஆச்சரியத்தால் விரிகின்றன. "ஐயா நாளைக்கு நீங்கள் வேலைக்கு வர வேண்டுமே. சோர்வாக இருக்காதா?" கூடனப்பட்டு வெளிவரும் அவனின் சொற்கள் மருத்துவருக்கு நான் என்ன சொல்வது? என்பது போல் உள்ளது. அவன் சிரித்தபடியே, "இல்லை நான் சோரமாட்டன். காயக்காரருக்கு இரத்தம் கொடுத்திட்டு, அன்றே கேஸ் செய்த அனுபவம் எனக்கு இரண்டு மூன்று முறை இருக்கு." அவனின் குரலில் ஆத்ம திருப்தி நிறைந்திருப்பதை உணர முடிகின்றது.

❖

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# போரின் மருத்துவம்



26-10-2000 முப 11.50

"டொக்டர் உங்களுக்கு செற் மெசேச் வந்திருக்கு" கூறியவாறு சிவநேசன் கையில் சிறு காகிதமொன்றுடன் வருகின்றான். அதனைத் திருமலை மாவட்டத்தில் கள மருத்துவனாகப் பணியாற்றும் வரன் வேண்டிப் பார்க்கின்றான். பின்வரும் செய்தியினை அது தாங்கியிருக்கின்றது. 'நீங்கள் செய்தனுப்பிய வயிற்றுக்காயம் பிரச்சினையில்லை. உயிர் தப்பிவிட்டது. எனினும் மீண்டும் சத்திரசிகிச்சை செய்யவேண்டி ஏற்பட்டது குடலில் தையல் விடுபட்டிருக்க வேண்டும்.' இவனின் மனம் ஒருமாதம் முன்னர் நடைபெற்ற சம்பவங்களை அசைபோடுகின்றது.

வேறொரு பாரிய தாக்குதலுக்கான முன்னாயத்தமாக வரன் திரியாயிலிருந்து உப்பாறு பிரதேசத்திற்கு அழைக்கப்பட்டிருந்தான். அடர்ந்த காடுகளை ஊடறுத்தும் கைவிடப்பட்ட கிராமங்களைக் கடந்தும் இரண்டு நாட்கள் நடையின் பின்னர் 22-09-2000 அன்று அவ்விடம் வந்துசேர்ந்தான். வந்த களைப்பு ஆறுமுன்னர் தாக்குதல் சம்பவமொன்றில் கால் சிதைந்து இரத்த இழப்புடன் வந்திருந்த போராளி ஒருவனுக்கு சிகிச்சை அளிக்கவேண்டியிருந்தது. அவனது உயிரைப் பாதுகாக்க இவனும் சிவநேசனும் மிகுந்த பிரயத்தனம் எடுக்கவேண்டியிருந்தது. அன்றிரவு மீண்டும் ஒரு செய்தி வந்திருந்தது. இவர்களின் இடத்திலிருந்து ஆறுமைல் தொலைவிலுள்ள கடற்கரைக் கிராமம் நோக்கி காயம் ஒன்று வந்துசேர இருப்பதாக. இவர்கள் உடன் புறப்பட்டுச் செல்கின்றார்கள். அக்காயத்தினைப் பொறுப்பேற்கின்றார்கள். அப்போராளியின் வயிற்றுச்சுவர் பிளந்துள்ளது. அதனூடு ஒரு பகுதி குடல் வெளித்தள்ளியவண்ணம் உள்ளது. மிகவும் ஆபத்தான நிலை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவசியம் தேவையான, உயிர்காப்புச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இவனின் உயிரைக் காக்கவேண்டுமானால் வயிற்றறை திறந்து (LAPROTOMY) மேற்கொள்ளப்படும் பாரிய சத்திரசிகிச்சையினைச் செய்யவேண்டும். சாதாரண காலமாயின், மேற்படி சத்திரசிகிச்சை வசதிகள் நிறைந்த நிபுணத்துவவளம் உள்ள மருத்துவமனைகளிலேயே சாத்தியப்படும். ஆனால் இங்கு மேலதிக அவசர சிகிச்சைக்காக நகரத்தினை நாடுவதற்குப் பதிலாக அடர்ந்த காட்டினுள் அடைக்கலம் தேடவேண்டியுள்ளது. அதிகநேரம் தாமதித்தல் ஆபத்தானது. இச்செய்தி கசிந்து பகைவன் காதினுள் வீழ்ந்து இவர்கள் சுற்றி வளைப்பினுள் சிக்கலாம். எனவே காயத்தைக் கொண்டுவரச் சொல்லிவிட்டு வரன் முன்னால் விரைகின்றான்.

காட்டினுள் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதால். பலதிசைகளிலும் காட்டுமரப் பரண்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மருந்துகளும் ஏனைய உபகரணங்களும் எடுத்துவரப்படுகின்றன. காலநிலை, காட்டுயானைகள் ஆகியவற்றின் தாக்குதல்களில் தப்பியிருந்தவற்றை கணக்குப் பார்க்கின்றான். அவசியம் தேவையானவை கூட காணப்படவில்லை. ஏதோவொரு தவறு நடந்துவிட்டது. ஆனால் அதனை ஆராய நேரமில்லை. இங்கு சிகிச்சைக்கு முயற்சிக்காவிட்டால் உடனடியாக வன்னித்தளத்திற்கு அனுப்பவேண்டும். ஆனால் இப்பொழுது அவ்வாறு செய்வது கனவிலும் சாத்தியமற்றது. எனவே சிகிச்சையை அங்கு ஆரம்பிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றார்கள். சத்திரசிகிச்சைக்கான கத்தி (SURGICAL BLADE) கூட அங்கு இல்லை. சிலபோராளிகள் அடுத்த கிராமம் சென்று 'PERMA SHARP' சவர அலகு வேண்டிவர அனுப்பப்படுகின்றார்கள். எல்லாவற்றிக்கும் மேலாக தசைநார்களைத் தளர்வடையச் செய்யும் (MUSCULAR RELAXANT) மருந்துகள் இல்லை. சாதாரண போர்க்காயங்களுக்குப் பாவிக்கப்படும் மயக்கமருந்துகளைக் கொடுத்து சிகிச்சை ஆரம்பிப்பது என்பது சிக்கல் நிறைந்தது. அவ்வாறு சிகிச்சையை ஆரம்பித்தாலும் அது முடிவுறும் தறுவாயில் குடலை உள்ளே வைத்து வயிற்றறையைத் தைப்பது என்பது காற்றடைத்த பலூனைத் தண்ணீரினுள் அமிழ்த்தும் செயலை ஒத்தது. வரனின் எண்ணவோட்டத்தையும் அதனால் ஏற்படும் தயக்கத்தையும் உணர்ந்த சிவநேசன் உற்சாகம் கொடுக்கின்றான். 'டொக்டர் ஒண்டும் செய்யாமல் விடுவதிலும் பார்க்க ஏதாவது செய்யலாம் தானே' அவனது கூற்றை ஆமோதிப்பதுபோல் தலையை ஆட்டியவன் மருந்துகளின் பாவனைக் காலத்தைப் பார்க்கின்றான். இழையங்களைத் தைக்கப் பயன்படும் நூல்கள் (SUTURE MATERIALS) பல குறித்த காலத்தைக் கடந்து விட்டிருந்தன. சிந்தித்துக் கொண்டிருப்பதால் பலனேதுமில்லை என்பதை உணர்ந்து சிகிச்சையை ஆரம்பிக்க முடிவெடுக்கின்றார்கள்.

கூடாரம் ஒன்றின் உதவியுடன் தற்காலிக சத்திரசிகிச்சைக்கூடம் அமைக்கப்படுகின்றது. அதனுள் மரமேசையொன்று இடப்படுகின்றது. அதில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நோயாளி கிடத்தப்படுகின்றான். மயக்கமருந்து கொடுக்கப்படுகின்றது. வயிற்றறை சவர அலகினால் வெட்டித் திறக்கப்படுகின்றது. சீறிவரும் இரத்தக் கலன்கள் பிடித்துக் கட்டப்படுகின்றன. காலால் மிதித்து இயக்கப்படும் உறிஞ்சும் கருவி (SUCKER) கொண்டு தேங்கும் இரத்தம் அகற்றப்படுகின்றது. திறக்கப்பட்ட வயிற்றறையினுள்ளும் வெளித்தள்ளியும் காணப்படும் குடலும் ஏனைய உள்ளுறுப்புக்களும் பரிசோதிக்கப்படுகின்றன. ஒரு அடி நீளமான குடல் வெட்டி அகற்றப்படுகின்றது. இடைத்துண்டு வெட்டி அகற்றப்பட்டதால் மிகுதிக் குடல்களின் இருமுனை வாய்களில் இருந்தும் மலப்பொருட்கள் வயிற்றுக்குழியினுள் வருகிறது. இது இவ்வாறான சிகிச்சையின்போது முடிந்தளவு தவிர்க்கப்படவேண்டும். இதனால் சிகிச்சைக்குப் பின்பான மாறும் தன்மை ( PROGNOSIS) பாதிக்கப்படும். அத்துடன் அதிகளவான கிருமித் தொற்றினால் (SEPTICAEMIA) உயிரிழப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். மேற்படி பிரச்சினையைத் தவிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம் (INTESTINAL CLAMP) இவர்களிடம் இல்லை. மாற்றுவழியாக வளையமிடப்பட்ட நூலின் உதவியினால் திறந்த குடல் வாய்கள் மிதமாக இறுக்கப்படுகின்றன. ஒருவாறாக சில மணிகளில் முடிக்கவேண்டிய சிகிச்சையை பலமணிநேர முயற்சியின் பின்னர் நிறைவு செய்கின்றனர். வெற்றி தோல்வியை நகரும் நாட்கள்தான் தெரிவிக்கவேண்டும்.

மருத்துவ அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணாகவே சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்கு எள்ளளவு திருப்திதானும் ஏற்படவில்லை. மேற்படி பிரதிகூலத்தை ஈடுசெய்வதற்காக வீரியம் கூடிய நுண்ணுயிர் கொல்லி மருந்துகளை ஏற்றுகின்றார்கள். ஒருவாறு அவனின் உயிரை சில நாட்கள் இழுத்துப்பிடித்துப் பாதுகாக்கின்றார்கள். சாதகமான உடல் நிலையும் கூட்டிப்படையின் கண்காணிப்புத்தளர்வும் பொருந்திவரும் நேரம் பார்த்து விழுப்புண்ணடைந்தவனை வன்னித்தளம் அனுப்பிவைக்கின்றார்கள். சில நாட்களின் பின் வந்த செய்தி இவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

நேரம் நண்பகல் 12.50 வழமையாகக் கிழக்கிலிருந்து மேற்காகச் செல்லும் பயணிகள் ஜெற் விமானம் இவர்கள் கவனத்தைக் கவர்ந்து கடந்து செல்கின்றது. அச்சத்தம் அகன்றவுடன் இவன் அவ்வனமுகாமில் அமைந்திருக்கும் மருத்துவக் கொட்டகையினுள் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை பற்றி சிவநேசனுடன் கலந்துரையாடுகின்றான். சில நிமிடங்களில் மேற்கிலிருந்து இவர்கள் திசைநோக்கி வான்பரப்பில் விரைவு விமானமொன்று இரைந்து வருவது கேட்கிறது. இவர்களது இராணுவ மனம் விழிப்படைகின்றது. சற்று உன்னிப்பாகக்கேட்ட சிவநேசன் "மிக் வாறான்" எனக்கத்தி எல்லோரையும் உஷார் அடையச்செய்கின்றான். "டொக்டர் பங்கருக்குள்ள பாயுங்கோ" எனக்கத்தியபடி மருத்துவக் கொட்டகை நோக்கி வேகமாக ஓடுகின்றான். ஒரு காயக்காரனைத் தூக்கியபடி அங்கிருந்த பதுங்கு குழியினுள் பாய்கின்றான். ஏனைய மருத்துவப் போராளிகளும் காயக்காரரைத்

தூக்கிக்கொண்டு நிலவறையினுள் பாதுகாப்பெடுக்க முயற்சிக்கின்றார்கள். எனினும் அச்சில கணநேர இடைவெளியினுள் அவ்விபரீதம் நடந்து விடுகின்றது. அடுத்தடுத்து மூன்று குண்டுகள் அப்பிரதேசத்தினுள் விழுந்து இடிகளென வெடிக்கின்றன.

வரனும் ஏனையவர்களும் இருந்த பதுங்குகுழி கந்தகப் புகையினால் சூழப்பட்டுவிட்டது. இவர்கள் மூச்சுவிட முடியாமல் தவிக்கின்றார்கள். உள்ளிருக்கும் ஒருவன் சொல்கின்றான், "வாசல் மூடப்பட்டுவிட்டது. வெளியில் போக முடியாது." வெளியில் திறந்த பதுங்குகுழியினுள் பதுங்கிச் சிறு காயமடைந்தவன் உள்ளே ஓடிவந்து இவர்களுடன் சேர்ந்து கொள்கின்றான். அதனை வைத்து வாசல் மூடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள். விமானங்கள் அடுத்த சுற்றுத்தாக்குதலைச் செய்யமுதல் நிலைமையை அவதானிக்க வெளியில் வந்து பார்க்கின்றார்கள். இம்முறை இவர்கள் தாக்குண்டது தாங்கள் கண்ணுற்ற காட்சி ஏற்படுத்திய அதிர்ச்சியினால், முன்னால் இருந்த மருந்துவக் கொட்டகையும் வேறும் சில கொட்டகைகளும் காணாமல் போய்விட்டிருந்தன. அடர்ந்த காட்டில் தூரடர்ந்த சில வெளிகள் உருவாகியிருந்தன. மூடிய நிலவறை இடிந்து நிலத்தினுள் இறங்கியிருந்தது. அதன் வாசலில் சிவநேசனின் ஒருகால் துண்டிக்கப்பட்டும் மறுகால் உடைந்தும் தொங்குகின்றன.

இவர்களின் களஞ்சியங்களும் அழிந்துவிட்டிருந்தன. வரனும் இன்னொருவனும் விரைந்து சென்று சிவநேசனைத் தூக்கிக்கொண்டு ஓடுகின்றார்கள். "ஆத்துக்கு அங்கால போங்கள் திரும்பவும் வந்து அடிப்பான் அல்லது செல்லால துலைப்பான்." தளபதி கட்டளை பிறப்பிப்பது கேட்கிறது. ஏனைய காயக்காரர்களையும் தூக்கிக்கொண்டு கழுத்தளவு நீர் ஓடும் ஆற்றைக் கடந்து மறுபக்கம் ஏறுகின்றார்கள். அப்பகுதியில் மரம் அரிவதற்கு என வெட்டப்பட்ட பாரிய குழி ஒன்று உள்ளது. அதனருகில் வைத்து அவசர அவசரமாக சறங்களைக் கிழித்து இரத்தப் பெருக்குகளைக் கட்டுப் போடுகின்றார்கள். மீண்டும் இரைந்து வரும் விமானங்கள் இவர்களின் திசையிலேயே குண்டுகளைப் போடுகின்றன. எல்லோரும் நிலத்தில் விழுந்து படுத்துக் கொள்கின்றார்கள்.

மருத்துவப் போராளி ஒருவன் சேதமுற்றிருந்த களமருத்துவப்பை ஒன்றினைக் கொண்டு ஓடிவருகின்றான். அதனுள் இரண்டு 'பைந்' திரவ ஊடகம் மட்டும் நல்ல நிலையில் உள்ளது. அதனை அவசியமானவர்களுக்கு ஏற்றுகின்றார்கள். இவர்களின் அதிஷ்டம் அதனுள் குருதி சேகரிக்கும் பையும் இருந்தது. அதனைப்பாவித்து ஒரு போராளியில் இருந்து இரத்தம் எடுத்து சிவநேசனுக்கு குருதி மாற்றீடு செய்கின்றார்கள். அப்பொழுது மருத்துவப் போராளி மன்மதனையும் மொழிவாணனையும் காணவில்லையென வரன் கேட்க, அவர்கள் அந்த இடத்திலேயே வீரச்சாவடைந்து விட்டதாகக் கூறுகின்றார்கள். மீண்டும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யுத்த விமானங்களின் இரைச்சல் காதைப் பிளக்கின்றது. இரத்தம் உள்ள பையை மரக்கிளை ஒன்றில் தொங்கவிட்டு ஒருவன் மட்டும் துணைக்கு நிற்க ஏனையவர்கள் பரந்து விரிந்து காடுகளினுள் ஓடுகின்றார்கள். போர் விமானங்கள் மறைந்தவுடன் மீண்டும் ஓடிவந்து பார்க்கின்றார்கள். சிவநேசனின் உயிரும் பிரிந்திருந்தது.

எதிர்பாரா திடீர் இழப்புக்கள் ஏற்படுத்திய சோகம், அந்தரம், இறுக்கமான சூழ்நிலை..... என்ன செய்யலாம்? காயமடைந்து உயிருடன் இருப்பவர்களுக்கு சிகிச்சையளிக்க மருந்துகள் வேண்டும். மீண்டும் பரண்களுக்கு ஆட்கள் போகவேண்டும். இருவர் அனுப்பப்படுகின்றார்கள். அவர்களின் கழுகுக் கண்களில் இராணுவப் பாதணித் தடங்கள் தென்பட்டுவிட்டன. விடயத்தைத் தளபதிக்கு அறிவிக்கின்றார்கள். நிலைமை விபரீதமாக உள்ளது. இராணுவம் காடுகளினுள்ளும் தேடலுக்கு இறங்கிவிட்டது. அல்லது பகை வேவுக்காரர்கள் நடமாடுகிறார்கள். காயக்காரரைக் காப்பாற்றுவதா? முற்றுகை உடைப்பிற்காகச் சண்டை வியூகத்தை மீளமைப்பதா? இல்லை பின்வாங்குவதா? நிலமைக்கு ஏற்ப முடிவெடுக்கவேண்டும். மீண்டும் மருத்துவப்போராளி லவனுடன் ஏழுபேர் மருந்துப் பொருட்கள் எடுத்துவரப் புறப்படுகின்றார்கள். இன்னும் சிலர் அருகிருக்கும் கிராமங்கள் சென்று கட்டுத்துணிகளையும் சில மருந்துப்பொருட்களையும் எடுத்துவரப் போகின்றார்கள்.

சில மணிகளில் கிராமங்கள் நோக்கிப் புறப்பட்டவர்களின் பாதையில் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுவிட்டது. எனவே அவர்களின் உதவியை இப்போதைக்கு எதிர்பார்க்க முடியாது. மரப்பரண்களில் இருந்து கொண்டுவரப்பட்டவற்றை வைத்து ஏனையவர்களுக்கு அவசர சிகிச்சை செய்யப்படுகின்றது. காயக்காரரைத் தொடர்ந்து அங்கு வைத்திருப்பது ஆபத்தானது. ஆதலால் மருத்துவப்போராளி ஒருவனுடன் அவர்கள் பலமைல் தொலைவிலுள்ள இன்னொரு வழைகாம் அனுப்பப்படுகின்றார்கள். பின்னர் நிலமைக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்படுகின்றன. வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் புதைக்கப்படுகின்றன. மீளொழுங்குபடுத்தப்பட்ட வீரர்களிலிருந்து வேவு அணியொன்று தேர்ந்தெடுக்கப்படுகின்றது. அது பகைவேவு அணியைத்தேடித் தொல்லை கொடுக்கும் தாக்குதலை நடாத்தப் புறப்பட்டு விட்டது. அவர்களுடன் மிகுதியாக எஞ்சி நின்ற மருத்துவப்போராளி லவனும் சென்றுவிட்டான். இப்பொழுது வரனுக்கு இக்கட்டான நிலை ஆலோசனை கலக்கவோ சேர்ந்து முடிவெடுத்து செயற்படவோ வேறு மருத்துவப் போராளிகள் துணைக்கு இல்லை. எனினும் அவன் அதனை உணரக் களைப்பும், அடுத்து ஏற்படும் நிலையை எதிர்கொள்ளத் தயாராகவேண்டிய வேலைப்பளுவும் இடம்கொடுக்கவில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சமரும் மருத்துவமும்



அருகில் இருப்பதையே அவதானிக்க முடியாத அந்த கார்இருள். அதற்கு வலுச்சேர்ப்பதற்காக வானத்து நட்சத்திர ஒளி வருகைக்குத் தடைவிதிக்கும் மழை மேகங்கள், அவை தெளிக்கும் நன்னீர்த் துளிகள் உடலைக் குளிர்விக்கும் நேரம், தங்கள் பாதம் பதியும் அன்றி மூச்சு விடும் ஓசையோ அவர்கள் செவிகளையே சேரக்கூடாத அவதானத்துடன் கரும்புலிகள் அணியொன்று ஆனையிறவுத் தளத்தை ஊடறுத்துச் செல்கின்றது. அவர்களின் இதய ஓசை மட்டுமே அவரவர் செவிப்பறையை அதிர்விக்கின்றது. தங்கள் சிறு அவதானமின்மையும் எதிரியை உசாரடையச் செய்து விடலாம். 'கரணம் தப்பினால் மரணம்' என்பது இவர்களுக்கு மட்டுமன்று இவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட இருக்கும் வெற்றி தேவதைக்கும் என்பது அனுபவங்களின் பாடம்.

மேற்படி எண்ணங்களால் சூழப்பட்ட வண்ணம் அவ்வணி நகர்கிறது. அப்பொழுது அவர்களில் ஒருவர் காலில் பாம்பு ஒன்று தன் பல்வரிசையைப் பதிக்கிறது. 'பாம்பென்றால் படையும் நடுங்கும' என்பர். ஆனால் இவர்களிற்குப் பயம் மறந்து பல காலம் ஆகிவிட்டது. எதிர்பார்க்கப்பட்ட ஆபத்துக்களை எதிர்கொள்வது ஒப்பீட்டளவில் இலகுவானதே. இதற்கமையப் பாம்பினால் கடியுண்டவர் களமருத்துவர் ஒருவருடன் இணைந்து இருவருமாகப் பற்றையொன்றினுள் புகுந்து பதுங்கி பாதுகாப்பாக தம்மை உருமறைத்துக் கொள்கின்றனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தரைவாழ் பாம்பினங்களில் 70% ஆனவை நஞ்சற்றவை. எனவே கடித்த பாம்பு ஆபத்தற்றதாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம். ஆயினும் அதனை உறுதிப்படுத்தல் வேண்டும். நஞ்சினால் நரம்பு மண்டலம் தாக்கப்படவில்லை என்பதனை மேலெழுந்தவாரியாக உறுதி செய்யலாம். குருதியானது பத்து நிமிட அளவில் உறைவதனை அவதானிப்பதன் மூலமே குருதியிழையமும் தாக்கப்படவில்லை என்பதனை உறுதி செய்யலாம். இதனைச் செய்வதற்கு வெளிச்சம் வேண்டும். எதிரியின் குகையினுள் ஏற்படுத்தப்படும் சிறு வெளிச்சமும் மலைமேல் விளக்காகும். கற்பனை கடந்த ஆபத்துக்களை கண் எதிரே கொண்டுவரும். எனினும் செயற்பட்டே ஆகவேண்டும். ஒருவாறு மெல்லிய ஒளிக்கதிரின் உதவியுடன் நாளமொன்றிலிருந்து வெளியேடுக்கப்பட்ட குருதியானது உறையவிடப்படுகிறது. கடித்த பாம்பு நஞ்சற்றது என்பது உறுதி செய்யப்படுகிறது. மேற்படி கரும்புலியின் பலம் மீளவும் உறுதி செய்யப்படுகிறது. இதனால் இவ்வணி தனது தாக்குதலிலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றி . இழப்புக்கள் எதுவும் இன்றி மீள்கின்றது. 'ஓயாத அலை–2'ன் வெற்றி எமதாகின்றது.

01.02.1998 அதிகாலை அம்மருத்துவ முகாம் மிகத் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. முதல் நாள் இரவு கிளிநொச்சி இராணுவத்தளம் மீதான வலிந்த தாக்குதலின் போது காயமுற்றவர்களுக்கு அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விரைந்து வரும் வாகனங்களில் இருந்து இறக்கப்படுபவர்களுக்கு முதலுதவியளித்தல், சிறுசிறு சத்திர சிகிச்சைகள் செய்தல், குருதி, திரவ ஊடகம் ஏற்றுதல், அவர்களை உடனுக்குடன் இடம் மாற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் வேகமாக இடம் பெற்றவண்ணமுள்ளன. குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் விட்டு விட்டுத் தரையையும் வானையும் அதிரவிக்கின்றது. இம் முகாம் தாக்கப்படலாம் எனும் ஐயம் எழுகின்றது. உடனேயே எல்லோரும் காயமடைந்தவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றவும், நிலக்கீழ் பதுங்குழியினுள் கொண்டு செல்லவும் முயற்சிக்கின்றனர். அதற்கு போதிய அவகாசம் இல்லாமலேயே மருத்துவ முகாம் வான் தாக்குதலிற்குள்ளாகின்றது. இதன் போது பூநகரி வெற்றித் தாக்குதல் முதல் இன்று வரையிலான சமர்களில் பல போராளிகளின் உயிர் காத்த இராணுவ மருத்துவர்களான மேஜர் சுசில், மேஜர் ரோகினி மற்றும் களதள மருத்துவப் பொறுப்பாளர்களான மேஜர் திவாகர், மேஜர் எஸ்தர் உட்பட 43 பேர் வீரச்சாவடைகின்றனர். மேற்படி கசப்பான அனுபவங்கள் தொடராமல் இருப்பதற்காகத் தொடர்ந்த தாக்குதல் திட்டமிடல்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இது ஓயாத அலை 2இல் வெளிப்பட்டது.

'ஆகாயக் கடல் வெளி'த் தாக்குதல், 'தவளைப் பாய்ச்சல்' தாக்குதல் போன்ற சமர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் காயமடைந்தனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவர்களைத் தன்னுள் அரவணைத்துக் காத்தது யாழ் போதனா வைத்தியசாலை. இதன்போது பணியாற்றிய நூற்றிற்கு மேற்பட்ட மருத்துவர்களும், ஆயிரத்துக்கும் அதிகமான பணியாளர்களும் தங்கள் உயிர் காக்கும் பணிக்குச் சிகரம் வைத்தனர். இவ் வளம் எப்போரிடும் ஆற்றலிற்கும் பெரும் வலுச்சேர்த்துக் கொண்டிருந்தது. இதனையும் இது போன்ற ஏனையவற்றையும் இல்லாதொழிப்பதற்கு எதிரி தன்னாலான எல்லாவற்றையும் செய்வான் என்பதில் ஐயம் இருக்கவில்லை. இதற்கான மாற்றீடுகளை பெறுவதற்காக தலைவர் அவர்களின் திட்டங்கள் சில வருடங்களுக்கு முன்னரேயே செயல் வடிவம் பெறத் தொடங்கியிருந்தது.

1993ல் மணலாற்றில் நடைபெற்ற கொக்குத்தொடுவாய்த் தாக்குதலின்போது களமுனையிலிருந்து யாழ் மருத்துவமனையினை சென்றடைவதற்கு பல பத்து மைல் பயணிக்க வேண்டியிருந்தது. கிளாலி நீரேரியைக் கடக்கவும் சில மணிநேரம் செலவழிக்க வேண்டியிருந்தது. இதன்போது காப்பாற்றக் கூடியவர்கள் எனக் கணிக்கப்பட்டவர்கள் வீரச்சாவடைந்தமை, பாதிப்பிற்குள்ளான குருதிக்கலன்கள் காலதாமதம் காரணமாக திருத்தமுடியாமல் போனதால் பலர் தம் அங்கங்களை இழந்தமை, பயண இடர்களின் போது அவர்கள் அனுபவித்த மேலதிக வேதனைகள் என பல காரணிகள் எம் மனங்களை உறுத்தின. பலமாகச் சிந்திக்க வைத்தன. நாங்கள் போர்ச் சத்திர சிகிச்சை செய்வதில் கணிசமான அளவு முன்னேறுவோமாயின் மேற்படி பின்னடைவுகளைத் தவிர்க்கலாம் என உணர்ந்தோம்.

முல்லைச்சமரில் விழுப்புண்ணடைந்த போராளி ஒருவர் தனது எண்ணவோட்டங்களைப் பின்வருமாறு கூறினார். "நாங்கள் பிரச்சனையில்லாமல் நகர்ந்து எங்களுக்குரிய இடங்களில் நிலையெடுத்து விட்டோம். மற்ற இடங்களும் குழம்பின மாதிரித் தெரியவில்லை. அதனால் இத்தாக்குதலில் பூரணமாக வெல்லுவோம். அதில் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால் காயமடைந்தால் என்ன செய்யிறது? முந்தியெண்டாலும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிருந்தது." பலநூறு போராளிகள் காயமடைவர் என்பது வெளிப்படையானது. இதனால் இப்படியான மனநிலை அவர்களுக்கு ஏற்படுவது தவிர்க்கவியலாதது. முதல் இரண்டு நாட்களிலேயே ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதன்போது ஏற்பட்ட மருத்துவப் பளுவிற்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தோம். இதனால் மருத்துவம் தொடர்பாக எம்மவர் மத்தியில் இருந்த சந்தேகம் தீர்க்கப்பட்டது. இது அவர்களுக்கு மேலதிக உளவியல் பலத்தை கொடுத்தது.

இச் சமரினைத் தொடர்ந்து 'சத்ஜய', 'ஜசிக்குறுய்' சமர்களில் ஏற்பட்ட அனுபவங்களின் விளைவான சிறப்புத் தேர்ச்சி எம் இராணுவ மருத்துவர்களின் செயற்பாட்டில் வெளிப்பட்டது. இது எம் போரிடும் ஆற்றலின் பரிமாண வளர்ச்சிக்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உறுதுணையாக அமைந்தது. உதாரணமாக வேவுப் புலிகளுடன் இராணுவ மருத்துவர்களும் நகர ஆரம்பித்தனர். பல நாட்களாக எதிரியின் பிரதேசத்தினுள் தங்கி நின்று வேவு எடுத்தல், சிறுசிறு அதிர்ச்சியூட்டும் பதுங்கித் தாக்குதல்களைச் செய்தல், இராணுவப் பொறுப்பதிகாரிகளைத் தேர்ந்து கொல்லுதல், போன்ற உப சமர்ச் செயற்பாடுகளின்போது பல போராளிகள் காயமடைவர். இவர்களை உடனடியாக எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் கொண்டு வருவது என்பது முயற்கொம்பாகும். அவர்களின் உயிரைத் தக்கவைக்க வேண்டுமாயின் எதிரியின் தளங்களினுள் வைத்தே சிகிச்சைகள் மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி போராளிகளுக்கு வனமரங்களின் மறைவில், பாதுகாப்பின்மையிலும் பாதுகாப்பை உணர்த்தல் வேண்டும். இப்பணிக்காக சிறு சத்திரசிகிச்சைக் கூடமொன்றையே தம்தோள்களில் சுமந்தவண்ணம் காடுகளில் திரிந்தார்கள் எம் இராணுவ மருத்துவர்கள். இவ்வாறான பணியில் ஈடுபட்டிருந்தவேளை, 10.11.1997 அன்று மேஜர் சந்திரன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

சமரும் மருத்துவமும் எனக் கருத்துக்களைப் பகிர்கையில், எம் மக்களின் மகத்தான பங்களிப்பைக் குறிப்பிடல் அவசியமாகின்றது. சமர்கள் விரிவடைந்த போதெல்லாம் இவர்கள் காலமறிந்து, தேவையறிந்து செய்த உதவிகள் ஞாலமறிந்தவை. சொற்களினால் ஏற்படுத்தப்படும் விபரிப்பு வரையறையைத் தாண்டியவை. பொருளாதாரத் தடை, மருத்துவத் தடை, எனப் பல தடைகளின் பாதிப்பைத் தாண்டி தம் போராளிகளுக்காக இரத்த தானம் செய்தனர். மேலும் அறுசுவை உணவுகளைப் பதமறிந்து செய்து தருதல், இரகசிய பாதுகாப்பிற்கு ஒத்துழைத்தல், சொந்த பந்தங்களைத் துறந்தவர்கள் விழுப்புண் வேதனையில் துடிக்கையில் தாதியாய் பராமரித்து தாயாய் பாசமழை பொழிந்து அவர்தம் வேதனையைக் குறைக்க உதவியமை எனப் பட்டியல் விரிக்கலாம். இத்தனைக்கும் மேலாய் இவர்தம் சொந்தப் பாதுகாப்பைக் கவனத்திற் கொள்ளாமை எமை மெய்சிலிர்க்க வைத்தது. வாகனச் சாரதிகளாக வந்தவர்கள் எறிகணை மழையிலும், வான் தாக்குதலுக்கு இடையேயும் தம் வாகனங்களை லாவகமாகச் செலுத்தியமை எமக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் தங்கள் உயிரை சமர்த்தேவதைக்கு அர்ப்பணித்தமையும் குறிப்பிடத்தக்கது.

10.06.1998 காலை சுதந்திரபுர கிராமம் வழமைபோலவே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. திடீரென வான்பரப்பை ஆக்கிரமித்த கிபிர் குண்டுவீச்சு விமானங்கள் மக்கள் குடிமனைகளை துவம்சம் செய்கின்றன. ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறிகளும் துணையாகச் சேர்ந்து கொள்கின்றன. விளைவு பல பொதுமக்கள் உடல்கள் சின்னாபின்னமாகச் சிதம்பிக் கிடக்கின்றன. இன்னும் பலர் படுகாயமடைந்து ஈனக்குரல் எழுப்புகின்றனர். தாக்குதல் சிறிது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஓய்ந்தவுடன் மீட்புப் பணியில் பொதுமக்களும், போராளிகளும் ஈடுபடுகையில் மீண்டும் அக்கிராமம் வான், எறிகணைத் தாக்குதல்களினுள் சிக்கிக் கொள்கின்றது. வானையும், மண்ணையும், புகைமண்டலம் இணைந்திருக்க இதனூடு மீட்கப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். பெருமளவில் மக்கள் காயமடைந்தனர். எல்லோருக்கும் சிகிச்சையளிக்க போதிய வசதி அம்மருத்துவமனையில் இருக்கவில்லை. அதனால் அவர்களில் பலர் விடுதலைப்புலிகளின் சத்திர சிகிச்சை கூடங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர். அவசர அவசரமாக உயிர் காத்தலுக்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவ்வாறு எதிரி பெருமெடுப்பில் எம்மக்கள் மீது திடீரெனத் தாக்குதல் தொடுக்கும்போது பெரும் எண்ணிக்கையில் மக்கள் காயமடைவர். மேலும் விரைவான உறுதியான வெற்றிகள் வேண்டி, இராணுவ விஞ்ஞானத்தினுள் இதுவரை இணையாத பல முறைகளில் எதிரி மீது தாக்குதல் தொடுக்கும்போது ஒருசில மணிகளினுள் பலநூறு போராளிகள் பலவகைக் காயங்களுக்கு உள்ளாவர். இதன்பொழுது இவர்களிற்கும் உயிர்காத்தலுக்கு முன்னுரிமை கொடுத்து சிகிச்சை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எங்களின் மருத்துவ மற்றும் ஏனைய வளங்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் ஒவ்வொருவருக்கும் நீண்டகால நோக்கில் பூரண திருப்தி தரக்கூடிய வகையில் சிகிச்சை செய்ய முடியவில்லை. இதனால் பொருந்தும் என்புகளில் ஒழுங்கின்மை, அறுந்த நரம்புகள் சீரிய முறையில் பொருத்தப்படாமை, முகம் போன்ற பகுதிகளில் அவலட்சணம் தரும் தோற்றங்கள் காணப்படுதல் போன்ற பாதிப்புகள் பலரில் தொடர்கின்றன. இவ்வாறான பாதிப்புக்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு துறைசார் நிபுணத்துவ உதவி தேவைப்படுகின்றது. மேற்படி செய்தியை போர்ச்சிலுவை சுமக்கும் மக்கள் சார்பில் உலகெங்கும் பரந்து வாழும் எம்மினிய உறவுகளின் கவனத்திற்கு கொண்டுவர இவ்வேடு முனைகின்றது.

✣

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தெளிவு



இளம் பனைவடலிகளுக்கு இடையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு பதுங்குகுழி அருகில் அவன் படுத்திருக்கிறான். நேற்றைய எறிகணை வீச்சினால் சிதைந்து வேரோடு பிரட்டிவிடப்பட்டிருக்கும், அச்சிறு பனைவடலியைப் பார்க்கும்போது ஆச்சரியமும், அச்சமும் கலந்த உணர்வு எட்டிப்பார்க்கவே செய்கின்றது. எவ்வளவு எறிகணைகள் மற்றும் ஏனைய வெடிச்சத்தங்கள் கேட்டபோதும், சேதங்களை விளைவித்தபோதும், வேலை நேரத்தில் அதை பெரிதுபடுத்தாத தன்மையும், பின்னர் நேரடி விளைவுகளைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்வும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதையிட்டு இவன் தன்னுள் பலமுறை வியந்துள்ளான். சூடாரப்பு தரையிறக்கம் நடைபெற்று இன்றுடன் பதினைந்து நாட்கள் காலத்தினுள் கரைந்துவிட்டது. தொடராக இன்று மதியம் வரை நடைபெற்ற மூர்க்கத்தனமான எதிரியின் உயர்வலு எறிகணைத் தாக்குதலினால் அச்சிறுபிரதேசம் சின்னா பின்னமாகச் சிதைக்கப்பட்டுள்ளது. இந்த ஊடறுப்பு பிரதேசத்தைத் தக்கவைத்தால் தான் ஆனையிறவை வீழ்த்தலாம். அரசியல் இராணுவ ரீதியில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போராட்டத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனத் தலைவர் முதல் தளபதிகள் வரை விளக்கியதால் தோற்றம் பெற்ற, நாம் சாகத்துணிந்து, சாதிக்க வந்தவர்கள் எனும் கருத்துருவாக்கம் அவர்களை இயக்கிக்கொண்டிருக்கின்றது, என்றால் மிகை ஆகாது. உயர் போர் அழுத்தம் நிறைந்த சூழலில்தான் ஒரு இராணுவ மருத்துவராக கடமையாற்றுவதும், அதனால் ஏனைய போராளிகளுடன் வழமைக்கு மேலாக ஏற்பட்ட நெருக்கமான உறவும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. எனினும் இதற்கு மேலாக எல்லைப்படை வீரர்கள் அப்பகுதியில் ஆற்றும் விபரணைத்திற்கு அப்பாற்பட்ட பணியும் இவர்களை உற்சாகம் கொள்ள வைத்துள்ளது. அத்துடன்… 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்னும் தியாகி திலீபனின் கூற்று நிதர்சனமாவதும் ஒருவகை ஆத்ம திருப்தியைக் கொடுக்கின்றது.

மேற்படி எண்ணங்களால் சூழப்பட்டவன் எப்படியும் இண்டைக்கு அவருடன் கதைத்துவிட வேண்டும் எனத்தன்னுள் எண்ணிக்கொள்கின்றான். இவர்களுடன் இணைந்ததில் இருந்து அவரை இவன் கவனித்தவண்ணமே வருகிறான். தன்னிலை மீறி உறங்கினால், அன்றி அவர் ஓய்வெடுத்ததே இல்லையென்று சொல்லலாம். பதுங்குகுழி வெட்டுதல், காயக்காரர்களைத் தூக்கிவருதல், தேவையான இடங்களுக்கு உடனடி விநியோகம் செய்தல், காவலரண்களின் முன்னால் நாற்றமெடுத்துக் கொண்டிருக்கும் பகைப்பிணங்களைப் புதைத்தல், என ஓடியோடி ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருப்பார். இவன் நிலக்கீழறை அமைத்தல் போன்ற கடின வேலைகளைச் செய்ய முற்படும் போதெல்லாம், "டொக்ரர் தாங்கோ நான் செய்யிறன் நீங்கள் ரெஸ்ட் எடுத்தால் தான் தட்டித்தவறி நான் காயப்பட்டாலும் வடிவாக் கவனிப்பீங்கள்" என்று கூறியபடி இவனிடமிருந்து பறிக்காத குறையாக மண்வெட்டியை வேண்டுவார். இவனும் எதுவுமே கூறாது புன்சிரிப்பொன்றுடன் அதனைக் கொடுத்து விடுவான்.

இன்றும் இருபத்தைந்து போராளிகளளவில் காயப்பட்டிருந்தனர். அவர்களுக்கான அவசர சிகிச்சைகளை போராளி மருத்துவர்கள் செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது அவரும் கூடவே நின்று வாகனத்திலிருந்து இறக்குதல், ஏற்றுதல் போன்ற இன்னோரன்ன உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். ஒருவாறு காயக்காரர்களை பின்னுக்கு அனுப்பி முடிய இவர்கள் ஓய்வெடுக்கத் தொடங்குகின்றனர். அப்பொழுது ஏதோவொரு காவலரண் பகுதியில் ஆட்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனப் பகுதிப்பொறுப்பாளர் அறிவிக்க அவர் உடனேயே அப்பகுதிக்குச் சென்றுவிட்டார். ஆனால் அவர்கள் இன்று 'ரேன்' மாறும் முறை புதிய அணிகள் உள் எடுக்கப்பட இவர்கள் பின்னுக்கு அனுப்பப் படுவார்கள். அவரை அழைத்துவர இன்னொருவன் சென்றிருந்தான். "இண்டைக்கு தவறினால் பிறகு சந்தர்ப்பம் கிடைக்காது." இவன் யோசித்துக்கொண்டிருக்கும் போது அவரும் வேறு சிலரும் சி[illegible]கிகளைச் சுமந்தவண்ணம்

Tamileelam Archive

வந்துகொண்டிருக்கிறார்கள். "இதுகள் ஆமின்ர பொடிகளோட கிடந்தது" எனக் கூறியவண்ணம் அருகில் கொண்டுவந்து போடுகின்றார்கள். ஆயுதங்கள் வாங்க பொன் கொடுத்த மக்கள் இன்று அவற்றை தாங்களே அள்ளி வருகின்றார்கள். அப்பொழுது ஒருவன் வந்து சொல்கிறான், "டொக்ரர் உங்களையும் மெயின் மெடிசினுக்கு வரட்டாம். பிறகு தேவையென்றால் அனுப்பிறதாம்." தனது நெற்றியைச் சுருக்கி ஏதோ கேட்க நினைத்தவன் எதுவும் கேட்காமல் எழும்புகின்றான்.

"அண்ணே! கேக்கிறன் என்று குறை நினைக்காதையுங்கோ..." எனச்சற்று இழுத்தவன் அவரின் ஆமோதிப்பை எதிர்பார்க்காமலேயே தொடர்கின்றான். "நீங்கள் கலியாணம் செய்திட்டீங்களா?" "ஓம்", "பிள்ளையள்...?" "மூன்று வயதில் ஒரு பொடியனும் ஒரு வயதில் ஒரு பிள்ளையும் இருக்கு." A9 பாதையிலிருந்து இவர்கள் தொண்டமனாறு நீரேரிக்கரையை நோக்கி நடக்கின்றார்கள். எதிரியின் எறிகணை விமான, பீரங்கிக் குண்டு வீச்சுக்களினால் சிதைந்தும், எரிந்தும் காணப்படும் பற்றைகளும் ஊடறுப்புத் தொடரை உடைத்து இவர்களை முற்றுகையினுள் கையகப்படுத்தும் நோக்கத்துடன் பலமுறை முனைந்து மூக்குடைபட்டதால் சிதைந்துபோய் கிடக்கும் பகைவன் கனரக ஆயுத வாகனங்களும் சற்றுத் தள்ளி ஆங்காங்கே புதைக்கப்படாமல் தவற விடப்பட்டிருந்த அழுகிய அவனின் சடலங்களும், ஊதிப்பெருத்து வெடித்து வான்நோக்கி கால்கள் நீட்டிக்காணப்படும் இறந்த கால்நடைகளினது உடல்களிலிருந்து வெளிவரும் நாற்றமும் என எல்லாம் சேர்ந்து இன்னவென்று சொல்லமுடியாத சூழல் ஒன்றை பிரசவித்துள்ளன. இவர்கள் அவற்றை சாதாரணமாகப் பார்த்தவண்ணம் எதிரி எறிகணை 'தத்தும்' சத்தங்கள் ஏதாவது கேட்கின்றதா! எனக் காதுகளைத் தீட்டியவண்ணம் தமது சம்பாசணையை தொடர்ந்த வண்ணம் செல்கின்றனர். "நீங்கள் எங்களோட நிக்கேக்க வீட்டு யோசனைகள் வராதோ?" "வரத்தான் செய்யும்" "அப்படியிருந்தும் எப்பிடி எங்களோட அதுவும் இப்படியான இடத்தில வேலைசெய்ய முடியுது?" இக்கேள்விக்குச் சற்று யோசித்தவர், "எப்படி வீட்டு யோசனை வாறது தவிர்க்க முடியாததோ, அப்படித்தான் நாங்கள் இந்நேரத்தில் பங்களிப்புச் செய்யிறதும் தவிர்க்கமுடியாதது ஆகிவிட்டது." என பதிலளிக்கின்றார். "நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?" "தம்பி! இந்த உண்மை எங்கேயும் பொருந்தும்." "எந்த உண்மை?" "சாகத் துணிந்தவனே வாழத் தகுதியானவன், அதனை வன்னி நிலம் தெளிவாய் வெளிக்காட்டுது." சொன்னது அவராக இருந்தாலும் போராளியான இவனின் மனதில் இறக்கை முளைக்கின்றது.

இப்போது தொண்டமனாறு நீரேரியை சிறு படகு ஒன்றில் கடந்துகொண்டு இருக்கின்றார்கள். அவர்களுடன் இரண்டு காயக்காரர்களும், வேறு சிலரும் பயணிக்கின்றார்கள். இடையிடையே கடல்மண் தட்டுப்பட, இவர்கள் இறங்கி படகைத்தள்ளி மீண்டும் ஏறிச் செல்கின்றனர். ஏரியின் நடுவில் நின்று பார்க்கும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போது இரண்டு கரைகளிலும் காணப்படும் பலநூறு பனைமரங்களின் உச்சிகள் வட்டுடன் அறுந்து விழுந்திருந்தன. ஏரியினுள் எறிகணை, கிபிர் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததால் உருவான பாரிய பள்ளங்களை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அவர்கள் கரையை வந்தடைந்து விட்டார்கள்.

அங்கே தயாராக நின்ற ரைக்ரரில் காயக்காரர்களையும் ஏற்றி தாங்களும் ஏறிக்கொள்கின்றார்கள். இப்பொழுது ஒரு வெட்டைப் பகுதியைக் கடந்து கொண்டிருக்கிறார்கள். இப்பகுதிக்கே உரிய அந்த விபரீதம் நடக்கின்றது. இவர்களுக்கு சில நூறுமீற்றர்கள் முன்னால் வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளும், அதனால் எழும் புகைமண்டலங்களும் இவர்களை நோக்கி விரைகின்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் நடக்கப்போவதை ஊகித்த அவர்கள் இருவரும் ஓடும் ரைக்ரரில் இருந்து பாய்ந்து நிலத்தில் வீழ்ந்து படுக்கவும், ஒரு எறிகணை ரைக்ரர் இஞ்சினில் வீழ்ந்து வெடிக்கவும், ஏனையவை இவர்களைத் தாண்டிச்சென்று விழவும், புகைமண்டலங்களால் அவ்விடம் சூழப்படவும் என அனைத்தும் சில கணங்களினுள் நடந்தேறி விட்டன. புகை அடங்கியவுடன் எழுந்து பார்க்கின்றார்கள் சாரதியும் இன்னொருவரும் இறந்து இருந்தனர். ரக்ரர் பெட்டியிலிருந்த காயக்காரர்களும் மற்றும் சிலரும் சிறுசிறு காயங்களுக்கு உட்பட்டிருந்தனர். உடனே காயக்காரர்களுக்கான முதலுதவிகளைச் செய்கின்றனர். உரிய இடத்திற்கு நிலைமையை வோக்கியில் அறிவிக்கின்றனர். சிறிது நேரத்தில் இன்னொரு ரைக்ரர் வர அனைவரும் அதில் ஏற அது சீறிப்பாய்கின்றது.

அவர்கள் கட்டைக்காட்டுப் பகுதியில் இயங்கிக்கொண்டிருந்த பிரதான மருத்துவ நிலையை வந்தடைந்து விட்டார்கள். நொந்து வந்திருக்கும் அவர்களிடம் நிலைமையை விசாரிக்க தெரிந்த முகங்களிற்குக் கூட நேரமில்லை. அப்பகுதி வேகமாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. முகமாலைப் பகுதியில் காயமடைந்து கொண்டு வரப்பட்டிருந்த பல போராளிகளுக்கு அவசர சிகிச்சை அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களின் சவரஞ் செய்யப்படாத முகமும், இரத்தச் சிவப்பேறிய கண்களும், அவர்களின் தொடர் வேலைப்பழுவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவர்களுடன் வந்திருந்த காயக்காரர்களுக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இவர்கள் இருவரும் அங்கிருப்பவர்களுக்கு உதவிகள் செய்வதில் ஈடுபடுகின்றனர். அம்மருத்துவ நிலையிலிருந்து வன்னித் தளமருத்துவ மனைக்கு காயக்காரர்களை அனுப்புவதற்கான ஒழுங்கு நடைபெறுகின்றது. அப்பொழுது அங்குவந்த எல்லைப்படை வீரர்களுக்கு பொறுப்பான போராளி அவரையும் வன்னிக்குச் செல்லும்படி பணிக்கின்றார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சற்றுத் தயங்கிய அவ்வீரர், இன்னும் சில நாட்கள் நிற்கப்போவதாக கூறுகின்றார். அந்நேரம் குறித்த பொறுப்பாளரிற்கு முகமாலைப்பகுதியில் சண்டை நடப்பதாகவும் ஆட்கள் தேவைப்படுவதாகவும் அறிவித்தல் வருகின்றது. அவர் அம்மருத்துவ நிலையில் உதவிக்கு நின்ற வீரர்களை ஒழுங்குபடுத்தி உரிய இடத்திற்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபடுகின்றார். இப்பொழுது இவரும் அவர்களுடன் இணைந்து கொள்கின்றார்.

மூன்றாம் நாள், விரைந்து வந்து நின்ற வாகனத்திலிருந்து சில காயக்காரர்கள் இறக்கப்படுகின்றார்கள். அவசரமாக மீளவுயிர்ப்பு அளித்தல், உயிர்காத்தலுக்கான சிகிச்சைகள் என்பன செய்யப்படுகின்றன. அப்பொழுதுதான் அம்மருத்துவன் அவ் எல்லைப்படை வீரரையும் கவனிக்கின்றான். அவருக்கு வலதுகால் முழங்காலிற்குக் கீழாக சிதைந்துள்ளது. மயங்கிய நிலையில் இருக்கும் அவரிடம் அனுமதி பெறாமலேயே அக்காலை வெட்டி அகற்றுகின்றான். சாதாரண மருத்துவ முறைப்படி நோயாளியின் அனுமதி இன்றி இவ்வாறு செய்யமுடியாதுதான். எனினும் வழமைபோல் போர்க்காலத்தில் மீறப்படும் மரபுகளினுள் இதுவும் அடங்குகின்றது. பலபேருக்கு இவ்வாறு செய்திருந்த போதிலும் ஏனோ இவனுக்கு இது அதிக கவலையைக் கொடுக்கின்றது. அதேவேளை சிகிச்சை முடிந்தும் மயக்க மருந்தின் தாக்கத்தில் இருந்து முற்றாக விடுபடாத, இவர்களுக்கு பொறுப்பாகப் போன போராளி, "டேய்... எல்லைப் படைக்காரரை பங்கருக்க படுக்கச் சொல்லுங்கடா.... காத்துப் படாட்டிலும் பரவாயில்லை......" எனத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பது ஏனைய இனக்குரல்களையும் தாண்டி வந்து கொண்டிருக்கின்றது.

சில நாட்களாக இவனுக்கு அவ் எல்லைப்படை வீரரைப் பார்த்து ஆறுதல் சொல்ல வேண்டுமென்ற எண்ணம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. காயக்காரர்களை ஏற்றிச்செல்லும் வாகனம் ஒன்றில் வன்னித்தள மருத்துவமனைக்குச் செல்கின்றான். அங்கு அவர் அருகிலிருந்து மெல்ல அவரின் தலையைக் கோதி விடுகின்றான். அவர் கேட்கின்றார், "ஏன் தம்பி வந்தனீங்கள்?" "உங்களைப் பார்க்கத்தான்" "இப்படிக் காயப்படுகிற எல்லோரையும் போய்ப் பார்க்கிறனீங்களா?" "இல்லை" "அப்ப ஏன் என்னட்ட வந்தனீங்கள்?" இவன் அதற்கு எதுவும் சொல்லாது பின்வருமாறு கேட்கின்றான். "நீங்கள் கால்போனதை இட்டு கவலைப்படவில்லையா?" "எப்படித்தம்பி கவலைப்படாமல் இருக்க முடியும?" இவன் எதிர்பார்ப்பிற்கு மாறான பதில் கிடைத்தால் கவலைச் சாயை முகத்தில் அப்பிக்கொள்கின்றது. அதனையும் அவதானித்தவர் தொடர்கின்றார். "தம்பி நீங்கள் கேள்விப்பட்டீங்களோ தெரியாது........" என்றவர் அவனின் அனுமதியின்றியே தான் அறிந்த சம்பவத்தை சொல்லத் தொடங்குகின்றார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"இப்படித்தான் மட்டக்களப்பில் ஒரு கடைக்குக் கிட்ட எங்கட பொடியள் கண்ணிவெடி வைக்கப்போனவங்கள். அந்தக் கடைக்காரரும் எங்கட தீவிர ஆதரவாளர். அப்ப இவையள் சொல்லி இருக்கினம் கடையைப் பூட்டிப்போட்டு போகச்சொல்லி, தாங்கள் அமத்தப்போறம் எண்டு. அதற்கு அவர் சொன்னாராம் "தம்பிமாரே நான் கடையப் பூட்டிப்போட்டுப்போனா வழமையா வாறவங்களுக்கு சிலவேளை சந்தேகம் வந்திடும். பிறகு தெரியும்தானே. அதால வழமைபோலவே இருக்கின்றேன் நீங்கள் உங்கட வேலையைப் பாருங்கோ. நடப்பதை பிறகு பார்ப்போம் என்று. அதற்கு எங்கட ஆட்களும் ஓம் எண்டுபோட்டு போட்டினம்.

அண்டைக்கெண்டு வந்த ஆமிக்காரங்களுக்கு என்ன நடந்ததோ தெரியாது கடையில் வந்து நின்றவங்கள் அவரையும் தங்களுடன் வரும்படி கேட்டிருக்கின்றார்கள். இவரால் மறுக்க முடியவில்லை. மறுத்தால் அவர்களுக்கு சந்தேகம் வந்திடுமோ என்ற பயம் உடனே மனிசியிட்ட போய்ச் சொன்னார். என்னை வரட்டாம். நான் போறன் சிலவேளை நான் திரும்பவராமல் போகலாம். பிள்ளைகளை மட்டும் படிப்பிச்சுப்போடு! என்று. அவவிற்கு விசயம் தெரியாது. பிறகு என்ன எங்கட ஆட்களுக்கும் இது தெரியாது. அவங்களும் அமத்திப்போட்டாங்கள்!" எனக்கூறியவர் சிறிது இடைவேளை விட்டு பெருமூச்சோடு தொடர்கின்றார். "இவைகளோடு ஒப்பிடுகையில் நாங்கள் எந்த மூலைக்கு?" என்றவர் இவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கின்றார். இவனும் ஏதும் கூறாமலேயே அவரையே பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

"நான் இந்த ஆளுக்கு ஆறுதலாக இருக்குமென்று வந்தால், இந்த ஆள் எனக்கெல்லோ ஆறுதல் சொல்லுது!" என இவன் தன்னுள் எண்ணியிருக்க வேண்டும். இவனின் எண்ண ஓட்டத்தை அவரும் புரிந்திருக்க வேண்டும். அவர் கேட்கிறார் "தம்பி உங்கட இடத்தில் காயக்காரர்கள் வாறது நிண்டுற்றுதா?" "இல்லை" "அப்ப ஏன் வந்தனீங்கள்?" "உங்களைப் பாத்தால் கொஞ்சம் நிம்மதியாய் இருக்குமென்றுதான்." "எனக்கும் உண்மையில் நீங்கள் வந்தது சந்தோசமாக இருக்குத்தான். ஆனால்..." "என்ன இழுக்கின்றீர்கள். பரவாயில்லை சொல்லுங்கோ..." "நீங்கள் இங்கு நிக்கேக்க அங்க காயக்காரங்கள் தட்டித்தவறி கூட வந்தா உங்களுக்கு குற்ற உணர்வாக இருக்காதா?" அவரின் கேள்வி இவனைத் திடுக்கிட வைக்கின்றது. தான் ஏதோவோரு கருத்தாக்கத்தினால் ஆட்கொள்ளப்பட்டுள்ளதை உணர்கின்றான்.

✣

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தொடரும் தொடர்புகள்



புலோரசன் மின் ஒளியில் அந்த இடம் பிரகாசிக்கிறது. வெளியிலிருந்து காற்று உட்புகா வண்ணம் அமைக்கப்பட்டுள்ள அவ்வறையினுள் உயிர்வாழும் மின் விசிறியானது தொடர் காற்றசைவை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. அத்தொகுதியினுள் முகமூடித் திருடர்களாய் மென்நீல நிற சீருடையில் காட்சி தரும் மருத்துவர்கள் ஏனையவர்களினதும், அசைவுகள் 'மாஸ்க்கினால்' முகம் மறைக்கப்பட்ட அவர்களின் உரையாடல், இயக்கும் மின் உபகரணங்களின் மெல்லிய இரைச்சல் எல்லாம் சேர்த்து இனம் பிரிக்க முடியாத சூழலொன்றை பிரசவிக்கின்றது. அந்த சத்திரசிகிச்சை கூடத்தின் மத்தியில் காணப்படும் அதற்குரிய நவீன படுக்கையில், இளம் பெண் ஒருவர் கிடத்தப்பட்டுள்ளார். அவளது வலது கையில் இரத்தம் கசிந்தவண்ணம் வெண்ணிறக்கட்டு காணப்படுகிறது. உயிர் காக்கும் பணியில் நுண்கிருமிகளுக்கெதிரான போராட்டத்தில் மருத்துவத்தின் மரபு ரீதியான திட்டமிடல் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

"அப்ப சரி அனஸ்தீசியாவைக் கொடுங்கோ....." அவன் கூறியவண்ணம் தன் உதவியாளருடன் அறுவைச் சிகிச்சையை ஆரம்பிக்க ஆயத்தமாகின்றான். மயக்க மருந்து கொடுப்பதற்கு நிற்கும் பெண்போராளி மருத்துவரால், காயமடைந்தவளின் நாடித்துடிப்பு, குருதியமுக்கம் என்பன பரிசோதிக்கப்படுகின்றது. "தங்கச்சி.... தண்ணீர் ஒன்றும் குடிக்கவில்லைத்தானே...?" என ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டதை இன்னுமொருமுறை கேட்கிறான். "நல்லா மூச்சு இழுத்து விடுங்கோ" எனக் கூறியவாறே இடது மேற்புய நாளம் ஒன்றினூடாக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உட்செலுத்தப்பட்டிருக்கும் 'வென்புளோன்' ஊடாக மயக்க மருந்தை உட்செலுத்துகிறாள். மெல்ல.. மெல்ல சுயநினைவை இழந்த அந்தப் போராளியின் சுவாசம் திடீரென நிற்கின்றது. சில பத்து கணநேர இடைவெளியின் பின் மீளவும் அது உயிர் பெறுகிறது. இதுவரை கண்வெட்டாமல் தனது ஒரு கையால் அவளது நாடித்துடிப்பை அவதானித்த மருத்துவர் ......சரி இனித்தொடங்கலாம் என்பதற்கு அறிகுறியாக தலையை அசைக்கிறார். விழுப்புண் ஏற்றவளின் வலது கையில் சிதறல் காயம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் சின்னிவிரல் மோதிர விரலுடன் சேர்ந்து உள்ளங்கையின் ஒரு பகுதியும் அகற்றப்பட வேண்டியுள்ளது. என்ன இருந்தாலும் ஒரு அங்கவீனம் ஏற்படப்போகின்றது என எண்ணியதாலோ என்னவோ இவன் அவளின் முகத்தை ஏறிட்டுப்பார்க்கிறான். சடுதியாக ஏற்பட்ட சந்தேக சாயையை மேலுயர்ந்த அவன் புருவமும் சுருங்கிய நெற்றியும் கண்களும் வெளிக்காட்ட மறுக்கவில்லை. எனினும் அதனைப் பெரிது படுத்தாமல், தனது சிகிச்சையை ஆரம்பிக்கின்றான். வேகமாகவும் நிதானமாகவும் சிகிச்சை செய்து கொண்டிருக்கையில் அவனது இதயத்துடிப்பு வீதம் அதிகரிக்கிறது "காயமடைந்த பல நூறு பேருக்கு சிகிச்சைகள் செய்திருந்த போதிலும், உயிர்காக்கும் நோக்கில் பலரின் அங்கங்களை வெட்டி அகற்றியிருந்த போதிலும், ஏற்படாத இந்நிலை இப்போது மட்டும் ஏன் ஏற்படுகிறது? ஏன் இந்த சின்னக்காயத்திற்கு நான் கவலைப்படுகிறேன்." என எண்ணியதாலோ என்னவோ வழமைக்கு மாறான அமைதியுடன் தனது பணியை முடிக்கின்றான். மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை, கொடுக்கப்படவேண்டிய நுண் உயிர் கொல்லி மருந்துகள் பற்றிய குறிப்புக்களை நோயாளியின் ரிக்கற்றில் எழுதியவன், அவளின் இயக்கப் பெயரையும் வயதையும் அதிலிருந்து பார்த்து மனதில் பதித்துக் கொள்கிறான். அந்த இடத்தைவிட்டு வெளியேற முற்பட்டவன் மீண்டும் ஒருமுறை அவளது அழகிய வதனத்தை திரும்பிப்பார்க்கிறான். முழு மயக்கத்திலிருக்கும் அவளோ வயிறு நிறைய பால் குடித்தபின் அமைதியாக உறங்கும் மழலைபோல் காட்சியளிக்கிறாள். சற்று வேகமாக ஓய்வறைக்கு திரும்புகிறான்.

சிங்கள இனவெறியர்களின் கொடுமைகளுக்கு முகம் கொடுப்பதுவே வாழ்க்கையாகிவிட்ட கிழக்கு மாகாணக்கிராமம் ஒன்றில் இவன் பிறந்திருந்தான். அன்றைய சூழ்நிலை சிறுவனாகவே அவனை போராளியாக்கியிருந்தது. 86ஆம் ஆண்டு புலிவீரன் ஆனவன் சிறிலங்கா, இந்திய இராணுவத்தினர், தேசவிரோத கும்பல்கள், மீண்டும் சிறிலங்கா இராணுவத்தினர் என.. பல எதிரிகளுடனான சமரில் தீவிரமாக ஈடுபட்டான். இவனது தீவிர செயற்பாடுகளால் கவரப்பட்ட தளபதி இவனை யாழ் மாவட்டத்திற்கு விசேட வேவுப் பயிற்சிக்காக அனுப்பி வைத்தார். அதற்கமைய பயிற்சிகள் பெற்றவன், பூநகரி முகாம் பற்றிய தகவல்கள் சேகரிக்கும் வேவுக்குழு ஒன்றிற்கு பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறான். பனி, மழை, கடல்நீர்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஏரி, வயல் வெள்ளம் என்று பாராது இரவைப் பகலாக்கி பயிற்சிகள் பெறுகின்றனர். பின்னர் எறும்பு உணவு சேகரிப்பது போல தாக்குதல் பசியை ஈடுசெய்ய முகாமை ஊடுருவி தகவல்களை சேகரிக்கின்றனர். ஒருநாள் கும்மிருட்டில் சகபோராளி ஒருவனுடன் முழங்காலளவு நீரும் சக்தியும் நிறைந்த வயலினூடாக சிறு அரவமேதும் ஏற்படாமல் நகர்கின்றனர். வரம்பொன்றைக் கடக்க எத்தனிக்கின்றனர். "படீர் படபட, சடசட" எனக்கேட்ட பாரிய சத்தமும், அதைத் தொடர்ந்த இயந்திர துப்பாக்கிகளின் உறுமலும், சீறிய ரவைகளும் இவர்களை இச்சையின்றிய செயலாக வயலோடு வயலாகப்படுத்து நிலையெடுக்க வைக்கின்றது. இவன் மிதிவெடி ஒன்றில் மிதிக்க அது காலில் ஒரு பகுதியை அபகரித்துக்கொண்டது. விபரீதம் புரிந்த மற்றவன் உடனே இவனது வாயைப் பொத்துகிறான். "சத்தம் போடாதே" என வலியில் வயலில் துடிக்கும் இவனது காதருகே மெல்லமாய் இரைக்கின்றான். இரத்தப் பெருக்கைத் தடுக்க உரிய கட்டைப் போடுகின்றான். சூழலை அவதானமாக அவதானிக்கிறான். பன்றியோ, மாடோ தான் மிதித்திருக்க வேண்டும் என பகைவன் எண்ணியிருக்க வேண்டும். சிறிது நேரத்தில் அவ்விடம் வழமைபோல மயான அமைதி அடைகின்றது. இவனை இழுத்தவண்ணம் சக்தியினூடு ஊர்ந்து பின்வாங்குகின்றான். பாதுகாப்பான தூரம் வந்தவுடன் இவர்களது துப்பாக்கிகளில் ஒன்றை பூவரசம் மரம் ஒன்றின் அடியில் புதைத்துவிட்டு, ஒரு கையில் சூடுநிலைக்கு தயாரான மறு துப்பாக்கியுடன், தோளில் இவனைத் தூக்கிக் காவியவண்ணம் விரைவாக முகாம் திரும்புகிறான். மெல்ல இவன் தன் சுயநினைவை இழக்கிறான். கண்விழிக்கையில் மருத்துவமனை ஒன்றில் தன் வலதுபக்க முழங்காலின் கீழ்ப்பகுதி அகற்றப்பட்டுள்ளதையும், 'குளுக்கோஸ்' ஏற்றப்படுவதையும் அவதானிக்கிறான். தன் நிலையை கண்கள் உண்மை என்று கூற மனமோ ஏற்க மறுக்கின்றது. மிகவும் சிரமப்பட்டு தனது அழுகையை நிறுத்த முயன்றவன் அதில் தோற்கின்றான். தன்னால் இனி வழமைபோல நடமாட முடியாது என எண்ணுகையில் இதயம் விம்மி, வெடிப்பதுவாய் உணர்கின்றான். கன்னங்களின் பக்கமாய் வழியும் கண்ணீர் தலையணைப் பஞ்சிடம் அடைக்கலம் தேடுகிறது. குடும்பத் தொடர்பில்லாமல் ஐந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டது. உடலில் ஏற்பட்ட பலவீனம் உள்ளக் கதவைத் தட்டுகின்றது.

உறவுகளின் மென்பாச நினைவுகள் மெல்லமெல்ல மொட்டு அவிழ்கின்றது. அம்மா, அன்பான அரவணைப்பு, ஆறுதலுக்கு மனம் ஓர் இடம் தேடுகின்றது. 'கடிதம் போடுவோமா' மனதுள் ஒரு குரல் வேண்டுகோள் விடுக்கின்றது. 'இல்ல வேண்டாம், அவையள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் இருக்கினம் எதுவும் பிரச்சினை வரலாம்.' இன்னுமொரு குரல் காரணம் சொல்லி தடுக்கின்றது. 'எனக்கு அம்மா வேண்டும், அவ இப்ப என்ர நிலையைப் பார்த்தா கவலைப்படுவா.' எனப் பலவாறு தன்ர மன அரங்கில் விவாதமண்டபம் நடத்தியவன், கடிதம் போடும் எண்ணத்தை கைவிடுகின்றான். வலியையும் மன அழுத்தத்தையும் மறக்க

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விரும்பியவன் சிறுவயது நினைவுகளை துணைக்கு அழைக்கிறான். ஊரில் இவனைக் கவர்ந்தவர்களின் உருவங்கள் நீராவி படிந்த கண்ணாடியின் விம்பங்களாவே வந்து போயின. காலம் எந்த ரணத்தையும் ஆற்றும் எனும் அனுபவ நம்பிக்கையில் நாட்களை நகர்த்துகின்றான். இப்போது பொய்க்கால் போட்டு பழைய அனுபவங்களைக் கொண்ட புதிய பிறவியாக நடமாடத் தொடங்கிவிட்டான். 'இருக்கும் வரை பிரயோசனம் உடையவனாக இருக்க வேண்டும்'. எனத் தன்னுள் திடசங்கற்பம் பூண்டவன் மருத்துவப்பிரிவில் கல்வியைத் தொடர்ந்தான். நடைமுறை இடர்பாடுகளைக் கடந்து, பணியின் செம்மைக்காய், அறிவின் வளர்ச்சிக்காய் முயற்சியையே ஊன்று கோலாக்குகின்றான். விழுப்புண் ஏற்பவர்களின் மனநிலையை இலகுவாக, விலாவாரியாக இவனால் புரிந்துகொள்ள முடிந்தது. வீரன் வீரனைப் புரிந்து கொள்வதைப் போல.

ஆரம்ப மருத்துவப்படிப்பு, செயல்முறை, களமருத்துவம், மேலதிக படிப்பு எனத் தொடர்ந்தவன் அரை தசாப்தம் கடக்கையில் இயக்கத்தில் குறிப்பிடப்படும் சத்திர சிகிச்சைக்கான இராணுவ மருத்துவர்களில் ஒருவனாகின்றான். காயமடைந்த போராளிகளை காப்பாற்றுகையிலும், மக்களுக்கு மருத்துவ பணிவிடை செய்கையிலும் ஆத்ம திருப்தியையும், உற்சாகத்தையும அடைந்தவன் விடுதலை நகர்வுக்கு உந்துவிசை சேர்ப்பதில் பங்காளனாகவே இருக்கிறான். ஓய்வறையில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கையில் அவன் மனப்பாறையில் மேற்படி கடந்தகால நினைவலைகள் மோதுகின்றன. "தங்கச்சி நாக்கை நீட்டுங்கோ பாப்பம்" குறித்த போராளி மயக்க நிலையில் இருந்து சுயநினைவிற்கு மீண்டுவிட்டாரா என்பதை உறுதிப்படுத்தும் முகமாக அவள் கன்னத்தில் தட்டியவண்ணம் கேட்கப்படுகின்றது. அது இவனை மீண்டும் இவ்வுலகிற்கு அழைத்து வருகின்றது. எதையோ தன்னுள் நினைத்து தலையை ஆட்டியவன் சற்று வேகமாக வெளியில் வருகின்றான். அந்த சகபோராளி மருத்துவரை அழைத்து "இவாவின்ர... முழு விபரமும் எனக்குத் தேவை... ஆள் எழும்ப விட்டு ஒருக்கா எடுத்துத் தாறீங்களா..." எனக் கேட்கின்றான். அதற்கு அவர் தன்னுள் எழுந்த நமட்டுச் சிரிப்பை முழுதாக மறைக்காமல் ஏன? என இவனிடம் கேட்க முற்பட்டு, பின் அதனைக் கைவிட்டு ஆங்கிலப் பாணியில் தன் இரு தோள்களையும் குலுக்கிய வண்ணம் "சரி" என்கின்றார்.

தன் தங்ககம் வந்தவன், அருகிருக்கும் வேப்பமரத்தின் கீழ் போடப்பட்ட மர வாங்கில் அமர்ந்திருக்கின்றான். இவன் வழமையாக கடமை முடிந்து வந்தவுடன், கலகலப்பாக ஏனையவர்களுடன் ஏதாவது கதைத்த வண்ணம் உணவருந்துவான். இன்று அமைதியாக அவன் அமர்ந்திருப்பது மற்றவர்களுக்கு வியப்புடன் கூடிய கவலையையும் கொடுக்கின்றது. "எப்படியும் இயல்பு நிலைக்கு வந்து ஆள் கதைப்பதற்கு ஐந்தாறு மணித்தியாலங்கள் எடுக்கலாம்" என திரும்பத் திரும்ப

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தன்னுள் கணக்குப் பார்ப்பதும், கடிகாரம் பார்ப்பதுமாக ஆறு மணித்தியாலங்கள் கடந்துவிட்டன. "என்ன மச்சான் மூட்டவுட்டாய் இருக்கிறாய்? என்னட்டையும் சொல்லக் கூடாதா?" என அவனிடம் சற்று நெருக்கமாகப் பழகும் போராளி ஒருவன் கேட்டவாறு அவன் அருகில் வந்தமர்கின்றான்."ஒன்றுமில்லையே..." என இவன் இழுக்கின்றான். "இல்ல நீ எதையோ மறைக்கிறாய் இந்த வயதில குழம்பிறதென்றால் அது ஒன்றாய்தான் இருக்கலாம்!" என்பதுவாய் தன் புருவங்களை உயர்த்தி வினாவுகின்றான். அப்பொழுது "அண்ணா... அண்ணா" இவர்களின் முகாம் வாயிலடியில் அந்த பெண்போராளி மருத்துவரின் குரல் கேட்கின்றது. அதனை எதிர்பார்த்திருந்தது போல எழுந்து ஓட்டத்திற்கும் நடைக்கும் இடைப்பட்ட வேகத்தில் செல்கின்றான். அப்போராளி ஏதோ கூற அதற்கு இவன் தலையை ஆட்டியபடியே நின்றவன் பின் நன்றியென கூறி திரும்புகின்றான்.

திரும்பும் அவனில் சென்ற வேகம் இருக்கவில்லை இதனை அவதானித்த மற்றப் போராளி எழுந்து அவனை நோக்கிப் போகின்றான். அவனோ நிலத்தை பார்த்த வண்ணம் வருகின்றான். இவன், அவன் நாடி தொட்டு முகத்தை உயர்த்தி பார்க்கின்றான். அவனது முகத்தில் பிரதிபலிக்கும் உணர்வுக்கலவையை கண்ணுற்றவன் திகைக்கின்றான். பனித்திருக்கும் கண்களிலிருந்து நீர் சிந்திவிடக்கூடாது என்பதற்காக தனது கீழ் உதட்டின் இடது ஓரமாக பற்களினால் இறுக்கிக் கடிக்கின்றான். "ஏன் மச்சான் என்ன நடந்தது சொல்லன்?" அவனின் இரு தோள்களையும் ஆதரவாக பற்றிய வண்ணம் கேட்கின்றான். "நான் காலில்லாமலுந்தானே வேலை செய்கிறன். அவளிற்கு இரண்டு விரல்கள்தானே இல்லை. நான் கதைத்தால் அதையும் பெரிய பாதிப்பாக உணரமாட்டாள். தொடர்ந்தும் இயக்கத்தில் சாதிப்பாள்." என பலவாறு தன்னுள் எண்ணியவன் தன் முகத்தில் ஒரு தெளிவொளியை படரவிடுகின்றான். அதனையும் கவனித்த மற்றப் போராளி எதுவும் விளங்காமல் இவனை உற்றுப்பார்கிறான்.

"இல்ல மச்சான் நான் சந்தோசமாத்தான் இருக்கிறன். ஆனா ஒரு சின்னக்கவலை" "என்ன கவலை சொல்லித் தொலையண்டா?" அவனின் குரலில் உரிமை தொனிக்கிறது. "இல்ல...! என்ர தங்கச்சியை நேரில் சந்திச்சனான். ஆனா அடையாளம் காணமுடியாமல் போயிற்று. அதுதான் கவலை மற்றும்படி ஒன்றும் இல்லை." என்றவன் அன்று நடந்தவற்றைக் கூறத்தொடங்குகின்றான்.

❖

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# யுத்த நிருத்தம்



"இதைப்பற்றி என்ன மச்சான் நினைக்கிறாய்?" அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பவற்றையே சுட்டிக் காட்டியவன் இவனிடம் கேட்கிறான். என்ன நினைப்பது......?" என சற்று தாமதித்தவன் தன்னுள் பொருத்தமான பதிலைத் தேடுகிறான். கேட்டவனே பதிலளிக்கின்றான். "மில்றி பூனிபோம் உக்குவதற்கு முதலே, உடலில் பெரும்பகுதி உக்கிவிடும்..... ஆனால்....... என்புகளிற்கு முதலே யூனிபோம் உக்கிவிடும்." என அரியதொரு கண்டுபிடிப்பைக் கூறிவிட்டது போன்ற பெருமை தரலில் பிரதிபலிக்கக் கூறுகின்றான். உப்புச்செறிவு உள்ளதும் வாகனத் தடங்களால் உருவானதுமான அத்தரவை முச்சந்தியில் கிடக்கும் இருபத்தி நான்கு இராணுவத்தினர்களின் உடல்களையே அவர்கள் பார்த்த வண்ணம் நிற்கின்றார்கள். அவற்றின் தோல், தசை போன்ற மென்னிழையங்கள் உக்கி மண்ணோடு மண்ணாகிவிட்டன. அவற்றின் உடைபட்ட மிச்சசொச்சமான என்புகளைப் போர்த்தியவாறு, அரைகுறையாக இற்றுப்போன சீருடைகளும், மண்டையோடுகளைத் தம்முள் தாங்கியவாறு காணப்படும் இராணுவத் தொப்பிகளும், துருப்பிடித்து ஆரம்ப உருவம் அழிந்த ஆயுதங்களும், ரவைக் கோதுகளுமென அப்பகுதி மென்மாலைப் பொழுதில் சற்று அச்சமூட்டுவதாகவே காட்சியளிக்கின்றது. அருகில் அநாதரவாக சேதமடைந்த ஆண்டவன் சொருபமொன்று காணப்படுகிறது. இருநூறு மீற்றர் தூரத்தில் இடிந்தும், சிதைந்தும், நகரும் பதுங்கு குழிகளினாலும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காவலரண்களினாலும் சூழப்பட்டுள்ள புல்லாவெளி புனித தேவாலயமானது ஆள் நடமாட்டமிழந்து மயான அமைதியை வெளிப்படுத்துகின்றது.

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு என்றவனே! எங்களால் என்ன செய்யமுடியும? நாங்கள் இரு கன்னத்தில் மட்டுமா அடிவாங்கினோம்! உடல் முழுவதுமல்லவா வாங்கினோம். அதன் விளைவுகளில் ஒன்றுதானே இது....." இவன் தன்னுள் எண்ணிக்கொள்கிறான். அந்த மௌனமான சூழலைக் கலைக்கும் முகமாக, "மச்சான்! கத்தியோட வாறவனுக்கு கத்தியோட நின்றால்தான் பதில்சொல்ல முடியும். இல்லையென்றால் வாறவன் குத்திப்போட்டுத்தான் மிச்சவேலை பார்ப்பான்." கூறுகின்றான். தனது எண்ண ஓட்டத்தைப் புரிந்து தான் இவ்வாறு கூறுகின்றானோ? என்றெண்ணியவன் தன்னைப் பிடிகொடுக்காமல் "எப்படி மச்சான் இது நடந்தது.......?" எனவொரு கேள்வியைக் கேட்கின்றான். "இங்க இருந்த ஆமிக்காரங்க சண்டை பிடிக்க ஏலாம ஓட வெளிக்கிட்டிருக்காங்கள். அதத் தடுக்கவும் இவயளுக்கு சப்போட் கொடுக்கவும் என இவையள் வந்தவையள். இதை எதிர்பார்த்து முதலே எங்கட கொமோண்டோஸ் ரீம் ஊடுருவி அங்க...... பொசிசன் எடுத்து இருந்தது. பிறகென்ன வசமாவர. முதல் ஆர்.பீஜி செல்லில் ரக்ரர் பெட்டி பிரண்டது. கட்டி வைத்திருந்த நெல் மூடைகள் கொட்டினட மாதிரி இவையள் விழத் தொடங்கிட்டினம். அப்படியிருந்தும் றைவர் ரேஸ்பண்ணி ரக்ரரை இழுத்தவன். அடுத்த செல்லையும் ஊதிவிட முழுப்பேரும் குளோஸ்......." இவ்வாறு தான் நேரில் நின்று பார்த்தது போல் அக்காட்சியை விபரித்தான்.

இவன் மனப்பறவையானது எட்டு வருடங்கள் கடந்து சிறகடிக்கின்றது. அடிப்படை இராணுவப் பயிற்சியை முடித்த போராளியாக களம் நோக்கித் தவழ்கின்றான். 'புல்லாவெளி நோக்கி இராணுவம் முன்னேறப்போகிறது' எனக் கிடைத்த தகவலையடுத்து இவனடங்கிய அணியும் அப்பகுதிக்கு விரைகின்றது. மாசிப்பனி மூசிப்பெய்கிறது. இவர்கள் தங்கியிருக்கும் ரக்ரர் பாதையை அண்டிய பகுதியில் காணப்படும் பற்றைகள் இருளின் கொடூரத்திற்கு மெருகூட்டுகின்றன. "கவனம் சென்றி மடக்க வாறவன் வாயைப் பொத்தியவாறு கழுத்தைத்தான் வெட்டுவான்" காவல் கடமையில் நிற்பவர்களின் எச்சரிக்கை உணர்வை அதிகரிப்பதற்காக அணித்தலைவன் கூறியது மனமூலையில் இருந்து அருட்டுகின்றது. சரக்...சரக்...என எவரோ மெல்ல சருகுகளை மிதித்து நடந்து வருவதுபோல் கேட்கும் சத்தம் காதுகளுக்கே அதிக வேலையைக் கொடுக்கின்றது. தன் துப்பாக்கியைத் தயார் நிலையில் வைத்தபடி நீண்டநேரம் உற்றுக் கேட்டவன், அவ்வோசை ஒரே இடத்தில் கேட்பதை உணர்கின்றான். இதயத்துடிப்பின் ஓசை செவிப்பறையை அதிர வைப்பதை அனுபவிக்கின்றான். ஒருவாறு அச்சத்தத்தின் காரணத்தைக் கண்டு பிடித்துவிட ஆசுவாசப் பெருமூச்சு விடுகிறான். பெரிய

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மரமொன்றின் இலைவழியே வழியும் பனித்துளிகள் இலைச் சருகொன்றில், குறித்த நேர ஆயிடையில் விழும் சத்தமே அதுவென உணர்ந்தவுடன் தன்னை எண்ணித் தன்னுள் சிரிக்கிறான். "ஓமோம் ...... மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்."

ஒவ்வொரு நாளும் அதிகாலை ஐந்து மணியளவில் காவலரண் பகுதியிலிருந்து மூவர் கொண்ட குழுக்களாக இவர்கள் முன்னேறி, எதிரி அருகில் வந்துபோன தடயங்கள் ஏதாவது தென்படுகின்றனவா? என ஆராய்ந்து வருவது வழக்கமாகிவிட்டது. அணித்தலைவன் இருக்கும் குழுவில்தான் இவனும் இடம்பெறுவது வழக்கம். சற்றுத் தூரத்திலிருக்கும் பற்றைகளிற்குள்ளே எதிரி மறைந்திருக்கலாம் என்று கருதினால், அணித்தலைவன் தன் துப்பாக்கியை இவனிடம் கொடுத்துவிடுவான். கத்தியைக் கையில் எடுத்தபடி அதன் அருகில் செல்வான். அதற்குமுன் "அந்தப் பற்றையை குறிபார்த்தபடி இரு...... ஏதாவது நடந்தால்...... என்னைப்பற்றி யோசியாமல் என்னையும் அவங்களையும் நோக்கி ஓட்டோவில சுட்டுப்போட்டு நீ பின்னால போயிடு...... மிச்சாக்கள் அலேட் ஆவாங்கள்." என இவனிடம் சொல்வான். இவனும் சற்று எட்ட நிலை எடுத்தபடியே பற்றையைக் குறிபார்த்தவண்ணம் நிற்பான். இப்படியே ஒவ்வொரு பற்றையாக 'கிளியர்' பண்ணுவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவனுக்கு கிட்டண்ணை பத்திரிகைக்கான பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தது ஞாபகத்திற்கு வரும். "நாங்கள் இஸ்ரேல் பாணியில் தாக்குதல்களை நடாத்துகின்றோம். போர்முனையில் தளபதிகள் முன்சென்றவாறு மற்றவர்களைக் தொடர்ந்து வரச்சொல்லுகின்றோம்." இப்பண்பு அடித்தள அணிவரை பரவியிருக்கின்றது. இது சந்ததிக்கு கடத்தப்படும், வளரும் தலைமைத்துவப் பண்பிற்கு உதாரணமாக அமைவதை அவன் எண்ணிப் பார்ப்பதுண்டு.

இவ்வாறு இவர்கள் சென்றுகொண்டிருக்கும்போது, சற்றுத் தூரத்தில் இருபது முப்பது இராணுவத்தினர் வருவதைக் கண்டுவிட்டனர். உடனேயே தங்களை உருமறைத்து அவர்களை அவதானிக்கத் தொடங்குகின்றனர். "அவங்களும் கிளியறிங்கிக்குத்தான் வாறாங்கள" என்கின்றான் அணித்தலைவன். தொடர்ந்து சில நாட்களாக பகை நடமாட்டத்தை வேவு எடுக்கின்றார்கள். பின்னர் முன்முனைப்புப் பெற்ற தாக்குதல் ஒன்றை நடாத்துவது எனும் முடிவிற்கு வருகின்றார்கள். திட்டப்படி மறுநாள் அதிகாலை 3.30 மணியளவில் தயாராகின்றார்கள். தமக்கு முன்னால் கைவிடப்பட்ட வயல்வெளியொன்று இருக்கக்கூடியதாக நிலையெடுத்துக் கொள்கின்றார்கள். அதற்கு முன்னால் சிறு பற்றைகள் இருக்கின்றன. அதற்கும் அப்பால் தென்னந்தோப்பு ஒன்று அமைந்துள்ளது. அவ்விடம் வரும் ஆமிக்காரர்கள் சிறிது நேரம் தங்குவது வழமை. இப்பொழுது அணித் தலைவனும் இன்னொருவனுமாக அவ்வயல்களையும் கடந்து சென்று காத்திருக்கின்றனர். கிழக்கு நன்றாக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெழுக்கத் தொடங்கி விட்டது. பொழுது புலர்ந்து விட்டிருந்தது. இவர்கள் இருவரும் தற்செயலாக எத்துப்பட்டவர்களாக அவர்களின் கண்களில் படுகின்றனர். உடனேயே அவர்களின் துப்பாக்கிகள் இவர்களை நோக்கி சடசடக்கின்றன. ஒரு ரவை மற்றவனின் பின்பகுதியை பதம்பார்க்க இரத்தம் கொப்பளிக்கின்றது. காயத்தை கரம்கொண்டு பொத்தியவாறு இருவரும் பின்வாங்கி ஓடத்தொடங்குகின்றார்கள். அணித் தலைவன் தானும் காயப்பட்டு விட்டமாதிரி பாசாங்கு செய்தபடியே ஓடத் தொடங்குகின்றான். இவர்கள் உடலையாவது கைப்பற்ற வேண்டுமென ஆவல் கொண்ட படையினர் காய்.........கூய்......... எனக் கத்தியவண்ணம் ரவைகளைத் தீர்த்தபடியே இவர்களைக் கலைத்து வருகின்றனர். இவர்களோ குறித்த வயலையும் கடந்து, தங்களவர் நிலைகளையும் தாண்டி இழுத்து இழுத்து ஓடுகின்றனர். இவர்களையே இலக்காகக் கொண்டு துரத்தி வந்த இராணுவத்தினர் இப்போது அவ்வயலினுள் இறங்கிவிட்டனர். தங்களுக்கு விரிக்கப்பட்டிருக்கும் மரண வலையைப்பற்றி அறியாமல் உடும்பைக் கலைக்கும் வேட்டை நாய்களென கலைத்து வந்தவர்கள், கொலை வலயத்தினுள் நன்றாக புகுந்தவுடன், இவர்களின் துப்பாக்கிகள் அதிர்ச்சியூட்டும் வகையில் உயிர்பெறுகின்றன. குறி பார்க்கப்பட்டு தங்கள் உடல்கள் சல்லடை போடப்படுவதையும் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதையும் விளங்கிக் கொள்வதற்குள் சிலரின் உயிர்க்குருவி சிறகடித்து விட்டிருந்தது. எனினும் இராணுவ விதிகளுக்கு அமைய இச்சையின்றிய செயலாகவே வரம்பு மறைவுகளில் அவர்கள் நிலையெடுக்கின்றார்கள். இவர்களை நோக்கி எதிர்ச்சமர் தொடுக்கின்றனர். எனினும் பகைவர்களிற்கு பின்னால் உதித்த சூரியனின் கதிர்கள் பட்டுத் தெறித்ததால் அவர்களின் இராணுவத் தொப்பிகள் பளிச்சிடுகின்றன. இதனைச் சாதகமாக்கியவர்கள் ஒவ்வொரு ஒளிர்வாய் குறிபார்த்து ரவையைச் செலுத்தி கவசம் துளைத்து மண்டையோட்டில் துளைகள் போடுகின்றனர். நிலைமை கைமீறியதையும் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் தமது உயிர்களுக்கான உத்தரவாதம் குறைவதையும் உணர்ந்த பகைவர் காப்புச்சூடு வழங்கியபடியே பின்வாங்குகின்றனர். அவர்களிலும் சிலர் இம்மண்ணை மிதித்த குற்றத்திற்காக தண்டிக்கப்படுகின்றனர்.

பதினாறு இராணுவத்தினரின் சடலங்கள், GPMG போன்ற அப்பொழுது மிகவும் பெறுமதி வாய்ந்தவையாகக் கருதப்பட்ட ஆயுதங்கள் உட்பட பல இராணுவத் தளபாடங்கள் அள்ளப்படுகின்றன. இவற்றை கைப்பற்றிக் கொண்டிருக்கும் போது தான் எதிர்பாராத அந்த விபரீதம் நடக்கின்றது. பகைவனின் எறிகணை வீச்சினால் அப்பகுதி அதிரத் தொடங்குகின்றது. திடீரென உருவான இந்தச் சூழலின் கந்தகப் புகையும் தூசு மண்டலமும் அடங்குகையில் அணித்தலைவன் தலையிலும் இன்னொருவன் நெஞ்சிலும் காயத்துடனும் உயிருக்காகப் போராடுகின்றனர். அவர்களைத் தூக்கிக்கொண்டு பின்வாங்குகையில் அவர்கள் உயிர் பிரிந்திருந்தது. மக்கள் குடியிருந்ததற்கான அடையாளங்களைக் கொண்ட அப்பிரதேசங்கள் இவர்களின் உதிரத்தை உரமாக்கிக் கொள்கின்றது. தங்களினால் பெறப்பட்ட அரிதான

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெற்றியை அனுபவிக்க முடியாமல், மணப்பாரங்களைச் சுமந்தவண்ணம் தங்கள் பாசறை திரும்புகின்றனர்.

தோளில் 'சிலிங்கில்' தொங்கும் துப்பாக்கியுடன், மார்புக்குக் குறுக்காக கட்டப்பட்ட கைகளுடன் முன்னால் விரிந்திருந்த போர்க் கறையை நோக்கியபடி கடந்த காலத்தை இரைமீட்டுகின்றவனை நோக்கி மற்றவன் கூறுகிறான். "மச்சான் நேற்று பால்ராஜ் அண்ணையின்ர மீற்றிங்கிற்கு போயிருந்தனானல்லோ!" என சற்று இடைவெளி விட்டவன் தொடர்ந்து அவர் குறிப்பிட்டவற்றையே கூறுகின்றான்.

"இந்தச் சண்டைகென வேவுக்காகச் சென்றவர்கள் நாலு பேர் கடமை முடித்து, சேகரித்த தகவல்களுடன் திரும்பி வரேக்க அவன் கண்டுட்டான். எப்படியும் தகவல்களை பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்து விட வேண்டுமென்றதால் சண்டையைத் தவிர்த்து ஓடிவருகின்றார்கள். சண்டை பிடித்தோ அல்லது குப்பி கடித்தோ இறந்தால், பதிவு செய்து வைத்திருக்கும் தகவல்கள் பகைவன் கையில் மாட்டிவிடும். இவர்களின் திட்டம் தவிடுபொடியாகிவிடும் எனக் கருதியவர்கள் உடனேயே ஒரு முடிவிற்கு வருகின்றனர். இவர்களில் இருவர் தங்கள் பதிவுகளை தம்மோடு அணைத்தபடியே 'சாச்சா' இழுத்து வெடித்துச் சிதறுகின்றனர். மற்ற இருவரும் சண்டை பிடித்து இறக்கின்றனர். அவர்கள் அப்படிச் செய்ததாலதான் எங்கட திட்டங்கள் எதிரிக்குத் தெரியாமல் இருந்தது. அதனாலதான் நாங்கள் வெல்லக்கூடியதாக இருந்தது. எங்கட விடுதலைப் போராட்டப் பாதை இரத்தமும் தசைத் துண்டங்களும் நிறைந்ததாகவே காணப்படுகிறது. இதுபோல பல பதிவிலிருக்க வேண்டிய சம்பவங்கள் பதிவில்லாமலேயே வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கின்றன." என்றவன் அக் கதையைத் தொடராமல் திடீரெனத் திசைமாற்றி "அதெல்லாம் சரி மச்சான், 'ஓயாத அலை-03' கட்டம் - 03இல் இப்பகுதிகளைக் கைப்பற்றிப் போட்டோம். யாழ்ப்பாணத்துக்குள்ள காலூன்றிப் போட்டம். இந்த நேரத்தில் நோர்வே அரசு ஊடாக எதிரி பேச்சுவார்த்தைக்கு வர முனைகின்றான்— யுத்த நிறுத்தம் ஏதாவது வரும் சாத்தியம் உண்டா?" எனும் கேள்வியுடன் இவனைப் பார்க்கிறான்.

"கட்டாயம் வரும்— நிரந்தர யுத்தநிறுத்தம் வரும்" இவன் பதிலளிக்கவும் தான் எதிர்பார்த்ததற்கு மாறான பதிலைக் கேட்டதால் என்னவோ இவனின் கண்களை ஊடுருவிப் பார்க்கிறான். அதில் 'இயக்கத்திற்கு வந்து இத்தனை வருடமாச்சு இன்னும் போராட்ட அரிச்சுவடி கூடத்தெரியவில்லை, இவனுக்கு' என்ற கருத்து பிரதிப்பலிக்கின்றது. என்ன நினைக்கிறான் என்பதை புரிந்துகொண்டவன், "என்ன மச்சான்! புழுவைப் பார்ப்பதுபோல் பார்க்கின்றாய்." "பிறகென்ன இப்படி பலமுறை வந்து போயிட்டுது. நீயென்னடா என்றால், தற்காலிக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யுத்த நிறுத்தம் வரும் என்று சொன்னாலும் ஓரளவு ஏற்கலாம். நிரந்தர யுத்தநிறுத்தம் வரும் என்கிறாய்?" "மச்சான் இந்த இடத்தில் எட்டு வருசத்துக்கு பிறகு வந்து நிக்கிறம்.... இதை இழக்கேக்கையும், மீட்கேக்கையும் பல உயிர்களைக் கொடுத்தனாங்கள். அது மட்டுமல்ல உனக்கும் தெரியுமா?" என்று இடைவெளி கொடுத்து பெருமூச்சொன்றை வெளிவிட்டவன் தொடர்கின்றான். "தவறி விழுந்த கைக்குண்டிற்கு மேலபடுத்துத் தான் சிதறி கிட்டண்ண ஆட்களைக் காப்பாற்றிய அன்பண்ணையும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்தான். அதுமட்டுமல்ல..." என்று சற்று இழுத்து தொடரமுதல் இவன் இடையறுக்கின்றான். "நீ என்ன சொல்ல வாறாய் எண்டு விளங்குது. அத்தோட இந்த வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பிரதேச மக்கள் எவ்வளவு விலை கொடுத்தவை எண்டும் தெரியும். இந்திய ஆமிக்காரங்களின்ர கால கட்டத்திலையும் அதற்கு முதலும்... என ஒரு பெரிய பங்கே இருக்கு... ஆனால் அந்தச் சனங்கள் இப்ப எங்கெங்க இருக்குதுகளோ...!" எனத் தானும் சேர்ந்து கதைத்தவன் "அதுதான் மச்சான் இதற்கு சரியான கணக்குத் தீர்க்கமுதல் யுத்த நிறுத்தம் ஏதும் வந்திடுமோ எனப் பயப்படுறன்." என்று முடிக்கின்றான். "நீயும் என்னடாவென்றால் வரும் என்று சொல்லுகிறாய்." "வரும்... கட்டாயம் வரும்... ஆனால் எப்ப சொல்லு பாப்பம்...?" என்றவன் மெல்லிய புன்சிரிப்பொன்றை உதிர்க்கின்றான். இவன் ஏதோ பூடகமாகத் தெரிவிக்க முனைகின்றான் என்பதை விளங்கிக்கொண்டவன் "நீயே சொல்லு" என்கிறான். அவங்கட இராணுவக் கட்டமைப்பே இப்ப சீரகுலஞ்சு போயிற்று. மூலோபாயம் தந்திரோபாயம் எல்லாம் பொருளாதார பூகம்பத்தில சிக்கின சோவியத் யூனியன் மாதிரிப் போயிற்று. எல்லாத்தையும் சரிபண்ண அவங்களுக்கு ரைம் வேணும். அதால யாற்றையும் காலைக் கையைப் பிடிச்செண்டாலும் பேச்சுவார்த்தைக்கு வரப்பாப்பாங்கள். சில சர்வதேச அழுத்தங்களுக்கு நாங்களும் விட்டுக் கொடுக்கவேண்டி வரலாம். ஆனால்...." "சொல்லி முடியன்." என அவசரப்படுத்தினான். அப்பொழுது எதிரி பனைப்பக்கம் இருந்து ஏவிய ஆட்லறி செல் ஒன்று இவர்களைத் தாண்டிச்சென்று விழுந்தது. அது காற்றைக் கிழித்து வரும் சத்தம் கேட்டு நிலத்தில் வீழ்ந்து நிலையெடுத்தார்கள். தமதிடம் நோக்கி அவசரம் அவசரமாகப் புறப்படுகிறார்கள். "முடிவாய் என்ன மச்சான் சொல்லுகிறாய்?" அவனின் கேள்வியில் அவசரமும் தவிப்பும் கலந்திருக்கின்றது. "நாங்கள் எப்ப எங்கட இலக்கில வெல்லுறமோ... அப்பதான் பூரண யுத்த நிறுத்தம் வரும்...." "அதுவரை..." "அதுவரை யுத்தமும் யுத்தநிறுத்தமும் மாறிமாறி வரும். நாங்கள் வென்றால்தான் யுத்தம் நிற்கும்." என்றவன் தனது துப்பாக்கியில் படிந்திருந்த தூசிகளைப் போக்கும் முகமாக பூ...பூ... என வாயினால் ஊதியபடி, முன்னால் நடக்கத்தொடங்க மற்றவனும் இணையாகத் தன் வேகத்தைக் கூட்டுகின்றான்.

❖

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அனுபவத்தின் பெறுமதி உயிர்



நீரைக்கிழித்து விரைகின்றது நீருந்து விசைப்படகு கொடூர இருளும் கருங்கடலும் கைகோர்த்துள்ளன விசைப்படகில் மோதும் பேரலைகள் உள்ளிருப்பவர்களைத் தூக்கியடிக்கின்றது. அப்படகில் 50கலிபர் துப்பாக்கியொன்று பொருத்தப்பட்டுள்ளது அதனை தயார்நிலையில் வைத்தபடி வலத்திசையை உற்று நோக்குகின்றாள் ஒரு பெண் கடற்புலி அவளின் கால்களுக்குஅருகில் வலது கால் முழுவதும் POP கட்டுடன் கிடத்தப்பட்டுள்ளான் போராளியொருவன். அங்கு காணப்படும் போராளி மருத்துவனும் ஏனைய சிலரும் வலத்திசையையே வைத்த கண் வாங்காமல் பார்க்கின்றனர். சுமார் ஒருமைல் தூரமளவில் நடைபெறும் கடற்சமர் இடையிடையே கடலில் தீப்பிளம்புகளைத் தோற்றுவிக்கின்றது இருளைக் கிடையாகக்கிழிக்கும் ரவைமழையும் வானைப் பிரகாசமாக்கித் நட்சத்திரங்களைக் கரையவைக்கும் பராவெளிச்சங்களும் படகில் இரைந்தபடியே கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும் தொலைத் தொடர்புக் கருவியும் வலியில் முனகும் காயக்காரனும் கடல் நீரில் நனைத்து கடற்காற்றினால் சில்லிடும் உடல்களுமென கடற்சமர் சூடுபிடித்துள்ளது. இக்காயக்காரனை வன்னிப் பெருநிலம் கொண்டு செல்லவும் படைக்கலப் பரிமாற்றங்கள் செய்யவுமென பாதுகாப்புக் கொடுத்து நிற்கும் கடற்புலிக் கலங்களிற்கும் கடற்படைக் கலங்களிற்கும் இடையேயான கடற்சமர் ஆரம்பித்துவிட்டது.

இதோ! இவர்களின் கடல்வியூகத்தை உடைத்து பகைக்கலமொன்று நெருப்புத்துண்டங்களை வேகமாக உமிழ்ந்து வரும் இராட்சத முதலையென, அலைகளில் பாய்ந்து பாய்ந்து பக்கவாட்டாக இவர்களை நோக்கி வருகின்றது. தனது ஆளுகையில் இருக்கும் இயந்திரத் துப்பாக்கியை அவள் அதனை நோக்கித் திருப்புகின்றாள். இவர்களின் சூட்டுவலுவோ பலமடங்கு குறைவானது. எனினும் சில கணங்களில் நேரடி வலுச்சண்டையொன்று மூழப்போகின்றது. முன்னாணைச் சில்லிட வைக்கும் அச்சில கண இடைவெளியில் இவ்விரு கலங்களிற்கிடையேயும் சீறிப் பாய்ந்து வந்த கடற்புலிச் சமர்க்கலமொன்று பகைக்கலத்தைப் போரிற்கு இழுக்கின்றது. அது தன் திசை மாற்றிச் செல்கின்றது ஒரு காயக்காரனைக் காப்பாற்றவென சிலர் வீரச்சாவடையும், பலர்காயமடையும் கடற்சமர் தொடர்கின்றது. அச்சூழலிலும் அம்மருத்துவனின் மனவோட்டம் சிலநாட்கள் பின்னோக்கிப் போகின்றது.

1999 யூலை 31 அதிகாலை அத்திருமலை வளமுகாமின் பரபரப்பு குறைந்து காணப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் பதுங்கித் தாக்குதல் ஒன்றைச் செய்வதற்கென இரவோடிரவாக நகர்ந்து விட்டிருந்தனர். திட்டமிட்டபடி சூரியக்கதிர்கள் தெறிக்கும் நேரம் வீதிச் சோதனைக்கு வரும் பகைவர் மீது உயிர் பறிக்கும் தாக்குதல் தொடங்கப்படும். இவர்கள் தரப்பில் எவ்வித இழப்புகளும் ஏற்படாத வண்ணமே திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏனெனில் அம்முகாமின் முத்திசைகளிலும், சிலமைல் தொலைவில் தொடர் இராணுவ முகாம்கள் உள்ளன. நான்காம் திசையை கடல் வரையறுத்துள்ளது.

இச்சூழ்நிலையில் காயமடைபவர்களைக் காப்பாற்றி பராமரித்து வன்னிக்கு அனுப்புவதென்பது கற்பனை கடந்த கடினங்களை உள்ளடக்கியதாகும். வேகமான நகர்திறனைக் கொண்டிருப்பதுடன் தற்காலிக தங்ககங்களை அமைத்துத் தங்குவதே இவர்கள் வழமையாகும். எதிரிக்குத் தொல்லை கொடுக்கும் தாக்குதல்களை அடிக்கடி மேற்கொள்ளவேண்டும். இதனால் பகைவனுடைய படைப்பலம் இம்மாவட்டத்தில் முடக்கப்படும். வன்னியை ஊடறுக்க முனையும் 'ஜெயசிக்குறுப்' படையினருக்கு வலுவூட்டும் படைகள் இங்கிருந்து செல்வது தவிர்க்கப்படும். மேலும் இத்தாக்குதல் நடக்கும் இடத்தில் தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு போராளியை எதிரி கொன்று அவள் தலையை வெட்டிச் சென்றிருந்தான். அதற்கான பதிலடியாகவும் இது அமைய வேண்டும்.

திடீரென இவர்களின் தொலைத்தொடர்புக்கருவிகள் உயிர் பெறுகின்றன.

சண்டையின் விபரத்தைக் களமுனைத் தளபதி அறிவிக்கின்றார். இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட மற்றவர்கள் தப்பியோடிவிட்டார்கள் என இவர்கள் கைப்பற்றிய ஆயுதங்களுடன் எவ்வித இழப்புகளுமின்றிப் பின்வாங்குகின்றனர். களமருத்துவன் ஆசுவாசப் பெருமூச்சு விடுகின்றான். எதிரியின் இராணுவ மூளை இவர்கள் பின்வாங்கும் திசையைச் சரியாகக் கணித்திருக்கவேண்டும். பல முகாம்களில் இருந்தும் ஒருங்கிணைந்த எறிகணை வீச்சை செறிவாக மேற்கொள்கின்றார். முகாமில் நீண்ட போராளிகள் புன்சிரிப்பினூடாகவும் கையசைப்பினூடாகவும் வெற்றியைப் பகிர்ந்தபடியே பதுங்குகுழிகளினுள் புகுந்து கொள்கிறார்கள். அப்பொழுது வந்து விழுந்து வெடித்த எறிகணையொன்று இருவரைக் காயப்படுத்தி விட்டது.

கணமும் தாமதிக்காது அவர்களைக் காப்பரண்களினுள் இழுத்துச் சென்றவர்கள் இரத்தப்பெருக்கைக் கட்டுப்படுத்துகின்றனர். மேலதிக சிகிச்சையினை இப்பொழுது செய்யமுடியாது. எறிகணை வீச்சு சற்றேனும் ஓய வேண்டும். கால்மணி நேரத்தின் பின்னர் காயங்களைக் களமருத்துவன் கவனமாகப் பரிசோதிக்கின்றான். உடனடியாக இருவருக்கும் பெரிய சத்திர சிகிச்சைகள் செய்யவேண்டும். ஒருவனுக்கு வலதுகால் முழங்காலிற்கு கீழாகச் சிதைந்து விட்டது. மற்றவனுக்கு முதுகினைத் துளையிட்டுச் சென்றுள்ள எறிகணைச் சிதறல் வயிற்றறை உள்ளுறுப்புகளைத் தாக்கிவிட்டது.

தளபதிக்கு மருத்துவர் நிலைமையை விளக்குகின்றார். அவர் அணிகளை மீள ஒழுங்கமைக்கின்றார். இரண்டாமவனின் வயிற்றறையினைத் திறந்து தான் மேலதிக சிகிச்சையினை மேற்கொள்ளவேண்டும். அதற்குத் தேவையான மருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆதரவாளர் வீடொன்றின் குளிர்சாதனப் பெட்டியினுள் வைக்கப்பட்டுள்ளது. அதனை எடுத்து வருவதற்காக அணிகளை அனுப்ப வேண்டும். ஒரு பகல் நடந்து, இரவு இராணுவக் காவல்அரண்கள் கடந்து, ஊர்மனையினுள் புகுந்து, குறித்த மருந்தினை எடுத்து மறுநாள் பகல் மீளவேண்டும். ஏதோவொரு வழியில் நிச்சயம் இராணுவத்தினரின் பதுங்கித் தாக்குதல்களை எதிர்பார்க்கலாம். அவ்வாறு நடைபெறின் சிலர் இறக்கவோ காயமடையவோ வேண்டி வரலாம். அவ்வாறு நடந்தால்...... நினைக்கவே பயமாக இருக்கின்றது. காயமடைதல் மீண்டும்...... மருத்துவத் தேவைக்காகச் செல்லுதல், மீண்டும் காயமடைதல்.... எனவொரு நச்சுவட்டமே தொடர்கதையாகிவிடும். எனினும் ஆள் எண்ணிக்கை மீதான இலாபநட்டக் கணக்கைவிட போராளிகளின் உளவியல் பலம் பேணப்பட வேண்டும். ஆதலால் துணைத் தளபதி தலைமையில் அணிகள் புறப்பட்டு விட்டன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இங்கு போராளி மருத்துவன் உதவியாளர்களுடன் தனது பணியை வேகப்படுத்துகின்றான். காட்டு மரம் ஒன்றின் கீழ் காட்டு மரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மாதிரிக் கட்டில் ஒன்றில் காயக்காரனுக்கு சிகிச்சையை ஆரம்பிக்கின்றான். எவ்வித அடிப்படை உயிர்காப்பு வசதியும் இல்லாமல் மயக்கமருந்து கொடுத்து சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றது. சாதாரண சூழலில் இவ்வாறு செய்வது மருத்துவ விதிகளுக்கு முற்றிலும் முரணானது. ஆனால் அதுவே இங்கு விதியானது சிகிச்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே தேவையான மருந்துகள் பல்வேறு பகுதிகளில் உருமறைந்திருந்த மரப்பரண்களில் இருந்து எடுத்துவரப்படுகின்றன. போராளியொருவனில் இருந்து பெறப்பட்ட இரத்தமானது நேரடிப்பரிசோதனை மூலம் ஒருங்கொட்டாமை உறுதி செய்யப்பட்டு இவனுக்கு ஏற்றப்படுகின்றது. புதியசூழல் என்பதால் நுண்ணுயிர்கொல்லி மருந்துகளுக்கு தாக்குப்பிடிக்கும் வல்லமை பெற்ற கிருமிகளின் தொற்று தவிர்க்கப்படும். இது சாதகமான ஒன்று. வெட்டித்திறக்கப்பட்ட கால்காயத்தில் இருந்து இரத்தப் பெருக்கை ஏற்படுத்தும் நாடி நாளங்கள் பிடித்துக் கட்டப்படுகின்றன. சிதைந்த தசைநார்கள் வெட்டி அகற்றப்படுகின்றது. என்பு சீராக்கப்பட்டு p. o. p. போடப்பட்டு சிகிச்சை வெற்றிகரமாக நிறைவு செய்யப்படுகின்றது. வயிற்றுக் காயக்காரனுக்கு உயிர்காப்புச்சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

மறுபகுதியில் ஒரு தற்காலிக சத்திர சிகிச்சைக்கூடம் 'பிளாஸ்ரிக் ரெண்டினால்' அமைக்கப்படுகின்றது. அவ்வேலை முடிவடைய சில மணித்தியாலங்கள் தேவைப்படும். சிறு மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரமும் வழங்கப்படுகின்றது. தளபதி உட்பட அனைவரும் பம்பரமாகச் செயற்படுகின்றனர். இதனுள் தான் வயிற்றறையைத் திறக்கும் சிகிச்சையினைச் செய்யலாம்.

வயிற்றறைக் காயத்திற்குட்பட்டவரின் நிலையோ மோசமடைந்து கொண்டு செல்கின்றது நிமிடங்கள் ஒவ்வொன்றும் நாட்களாகக் கழிகின்றது "டொக்டர் நான் தப்புவனா? ஏன் எனக்கு இன்னும் ஒப்பிரேசன் செய்யவில்லை?' போன்ற அவனின் கேள்விகள் இவனைக் குடைந்து எடுக்கின்றது. மருத்துவனோ அவன் தலையைத் தடவியவண்ணம் 'இன்னும் கொஞ்ச நேரத்தில தொடங்கிவிடுவம். மருந்துக்குப் போனவையள் வந்து கொண்டிருக்கினம் '' எனத் தன்னாலான பொய்களைச் சொல்கின்றான்.

அவனுக்கு வாயினால் எதுவும் அருந்தக் கொடுக்கவில்லை. திரவ ஊடகத்தின் மூலம் உடலின் அனுசேபத் தேவையானது பூர்த்திசெய்யப்படுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நாடித்துடிப்புவீதம், குருதியமுக்கம், உடல் வெப்பநிலை என்பன அளக்கப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகின்றது. மருத்துவரோ காயக்காரனுக்கும் தொலைத்தொடர்புக் கருவிக்கும் இடையில் நடந்தவண்ணம் உள்ளார். தளபதி தொலைத்தொடர்புக் கருவிக்கு அருகிலேயே அமர்ந்திருக்கின்றார். சென்றவர்கள் ஊரினுள் நுளையும் நேரம் நெருங்கிவிட்டது. நேரம் மென்னிருள் கடந்து ஆழமான பகுதிக்குள் செல்கின்றது. திடீரென சமர்ச்சத்தங்களுடன் தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. ஒருவரினது முகத்திலும் ஈயாடவில்லை.அவர்களுக்கு அடிவிழுந்துவிட்டது. அவர்கள் கலைந்து சென்றிருப்பார்கள்.....சிலர்........ எதிர்பார நிகழ்வுகளே வழமையாகிவிட்ட வாழ்க்கைக்குப் பழகியவர்கள் ஆழ்ந்த யோசனையுடன் காத்திருக்கின்றனர். நள்ளிரவு தாண்டிவிட்டது. மீண்டும் தொடர்பு சாதனத்தில் தொடர்பெடுத்த உபதளபதி நிலைமையை அறிவிக்கின்றார். தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தாங்கள் காயமோ உயிரிழப்போ இன்றித் தப்பிவிட்டதாகவும், எதிரி உசார் அடைந்துவிட்டதால் தாங்கள் மீண்டும் மீண்டும் முயற்சித்தும் முடியவில்லை எனவும், மறுநாள் இரவு மீண்டும் முயற்சிப்பதாகவும் கூறுகின்றார். தளபதி மருத்துவரிடம் என்ன சொல்வது எனக் கேட்கின்றார்.

நிலைமை கையை மீறிவிட்டது ஏற்கனவே தாமதமாகிவிட்டது. இன்னுமொருநாள் அவனால் தாக்குப்பிடிக்க முடியாது. இதனை அவனுக்கு தெரிவிக்கவும் இயலாது. சாதாரண மயக்கமருந்தைக் கொடுத்து சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டியது தான். அவ்வாறு வயிற்றறையை வெட்டித்திறந்தால் காற்றடித்த பலூனாக குடல்கள் வெளித்தள்ளிக்கொண்டுவரும். அவற்றை மீண்டும் உள்ளே செலுத்தி சிகிச்சையை முடிப்பது என்பது மிகவும் கடினமானது. எனினும் அதனைத்தான் செய்யமுடியும. அவ்வாறு செய்வதை சத்திரசிகிச்சைக்குரிய மருந்தியல் புத்தகங்கள் அனுமதிக்கின்றனவா எனத் தேடித் தேடிப்பார்க்கின்றான். புத்தகங்களைப் பார்ப்பதும் காயத்திற்குள்ளானவனின் உடல் நிலையைப் பரிசோதித்து தளபதியிடம் நிலமையைக் கேட்பது என மாறி மாறி செயற்பட்டுக் கொண்டிருந்தவன். அவரின் கேள்விக்கு "நாங்கள் இருக்கிறதக் கொண்டு தொடங்குவோம், அவர்களை வரச் சொல்லுங்கள்" என்கின்றான்.

ஒன்றும் செய்யாமல் விடுவதிலும் ஏதாவது செய்வது நல்லது என்பதால் சிகிச்சையை ஆரம்பிக்க வேகமாகச் செயற்பட்டனர். தேவையான மாற்றுக்குருதி தயார்செய்து உபகரணங்களை ஒழுங்குசெய்து மின்ஒளியைத் தயார்செய்து காயக்காரனை மேசையில் கிடத்தி சிகிச்சையை ஆரம்பிக்கையில் எல்லாமே பிந்திவிட்டது என்பது புரிந்தது விழுப்புண்ணடைந்தவன் தனது இறுதி மூச்சுக்காக அவஸ்த்தைப்படத் தொடங்கி விட்டான். மெல்ல மெல்ல ஆவிபிரிய அவன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

துடிப்புகள் அடங்கிப்போகின்றன. வீரச்சாவு என்பது உறுதி செய்யப்படுகின்றது.

களமருத்துவ வாழ்வில் அவன் சந்தித்த தோல்வியின் பட்டியல் நீள்வதாக உணர்கின்றான். தன் உணர்வுகளை முகத்தில் வெளிக்காட்டாமல் தளபதிக்கு விடயத்தைச் சொல்கின்றான். மறுநாள் வீரமரண நிகழ்வு நடந்தது. இவர்கள் இருக்கும் பகுதியிலேயே அவ்வித்துடல் விதைக்கப்படுகின்றது. தப்பியிருப்பவனை தொடர்ந்து அங்கு வைத்துப் பராமரிக்க முடியாது. வன்னிக்கு அனுப்ப வேண்டும். அதற்கு இரண்டு நாள் நடந்து கடற்கரை செல்ல வேண்டும். இன்றிரவு நித்திரை செய்தால் தான் நாளைக்காலை நடக்கத் தொடங்கலாம். இவனை ஏதோவொரு குற்றவுணர்வு கொல்கின்றது.

"இப்படியான இடங்களில பயன்படுத்தக் கூடியவாறு குளிர்சாதனப்பெட்டி தேவைப்படாத வகையில் மருந்து தயாரித்து இருக்கமாட்டார்களா?" மீண்டும் இரவு புத்தகங்களைப் புரட்டுகின்றான். அவன் தேடியதைக் கண்டு கொள்கின்றான் குறித்த மருந்து இருந்திருந்தால் இம்மரணத்தைத் தவிர்த்திருக்கலாம். மேற்படி மருந்தைக் குறிப்பெடுத்தவன் துறைசார் பொறுப்பாளரிடம் அறிவித்து வெளியில் இருந்து இதனை எடுப்பிக்க வேண்டும், என எண்ணுகின்றான். அப்பொழுது 'டொக்டர்' எனக்கூப்பிட்டபடியே வரும் தளபதி சொல்கிறார் 'களைத்துப் போயிருப்பீர்கள், இரண்டு நாள் தொடர்ந்து நடக்க வேணும், நித்திரை செய்யலாம்தானே! என, இவனிடமிருந்து வெறுமை கலந்த சிரிப்பொன்று வெளிவர முயற்சிக்கின்றது.

❖

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வெள்ளைப் பொய்கள்



அண்மித்துக்கொண்டிருக்கும் எறிகணைச் சத்தங்களும் கிபிர் விமானங்களின் இரச்சலும், அவனிற்குத் தொலைவில் கேட்பவையாகவே இருக்கின்றன. இவ்வாறான அனுபவங்கள் பலமுறை ஏற்பட்டிருக்கின்றது. எனினும் இன்னும் அவனால் இவற்றை சாதாரணமானதொன்றாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எதனை...? "இன்னும் கொஞ்சம் நாங்கள் முன்னேறியிருந்தால் இந்த உயிரிழப்பையும் தவிர்த்திருக்கலாம்." என ஒரு மனமும், "இன்றைய யதார்த்தத்திற்கு இது சாத்தியமில்லை." என இன்னொரு மனமும், உயிரிழத்தல் நிகழ்வொன்றை ஏற்படுத்திவிட இவன் தடுமாறுகிறான். "டொக்டர் நீங்கள் அனுப்பிய ஆள் வழியில் வீரமரணம்." என வாகனச்சாரதி கூறிய செய்தி எதிர்பார்த்ததாக இருந்தாலும், அதிர்ச்சியையே கொடுக்கிறது.

ஆனையிறவு இராணுவ முகாமை வெற்றி கொள்வதற்கான தொடர் முயற்சிகள் நடைபெறுகின்றன. அப்பிரதேசத்திற்கான பிரதான மருத்துவ நிலையம் கட்டைக் காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது. அதன் வன்னித்தளத்துடனான தரைத்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொடர்பானது கண்டாவளை நீரேரியினால் இடைவெட்டப்பட்டுள்ளது. இதனால் அங்கு ஆரம்ப சிகிச்சைகளுடன், சிதைந்த அங்கங்களை அகற்றுதல், குருதிக் கலன்களை திருத்துதல் போன்ற சிகிச்சைகளும் செய்ய வேண்டியிருந்தது. எனினும் அவ்விடம் களமுனைக்குச் சில மைல் தொலைவினுள் இருந்ததாலும், வேறு பல காரணங்களினாலும், எம் மருத்துவ வளர்ச்சியின் உச்ச திறனை வெளிப்படுத்துமிடமாக அதனை மாற்றமுடியவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் தான் வயிற்றில் காயப்பட்ட போராளி ஒருவன் அங்கு கொண்டுவரப்படுகிறான். அவன் காயப்பட்ட நேரம், குருதியமுக்கம், நாடித்துடிப்பு வீதம் போன்ற இன்னோரன்ன துணைக்குறிகளை வைத்து அனுமானிக்கும் போது விரைவான குருதிப் பெருக்கானது வயிற்றறையினுள் ஏற்பட்டுள்ளது எனும் முடிவுக்கு வருவதில் சிரமம் இருக்கவில்லை. அவனைக்காப்பாற்ற வேண்டுமாயின் மீள் உயிர்ப்பளித்தல் செய்யப்படுவதுடன் வயிற்றறையானது உரிய முறையில் வெட்டித் திறக்கப்பட்டு குருதிப்பெருக்கானது நிறுத்தப்படல் வேண்டும். ஆனால் மேற்படி சத்திர சிகிச்சையை அங்கு செய்ய முடியாது. அதனால் உடனேயே பின்தள மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும். வழியில் உயிர் பிரிவதற்கான சாத்தியங்களே அதிகம் காணப்படுகிறது. மேற்படி விடயங்களை கருத்தில் எடுத்தவன், குருதி, திரவ ஊடகம் என்பவற்றை தேவையான அளவு உட்செலுத்தி பின்தளம் அனுப்பும் முயற்சியில் வேகமாக ஈடுபடுகிறான். அப்போது அப்போராளி "டொக்ரர் நான் தப்புவனா? " எனக் கேட்கிறான். இவனோ அவன் தலையைக் கோதியவண்ணம், "ஓம் பிரச்சனையில்லை......" என நம்பகத்தன்மையை முகத்தில் பரவவிட்டவண்ணம் கூறுகிறான். உயிர் இழக்கப் போகின்றவனுக்கு உண்மை கூற முடியாத நிலையும், தெரிந்தே ஒரு இழப்பு ஏற்படுவதை அனுமதிக்க வேண்டிய நிலையும் அவனில் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.

"சே......இந்த வேலை எத்தனை நாளைக்குத் தொடரும்." என ஒரு முறை கூறுகிறான். "இல்லையில்லை பல்வேறுபட்ட போர்ப்பணிகளில் இதுவும் ஒன்றே.... கடமையை மட்டும் செய்வோம்..." தத்துவங்களை சமாதானத்துக்கு இழுக்கிறான். விரைந்து வரும் வாகன இரைச்சல் ஒன்று பணியைத்தொடர அவனை ஆயத்தப்படுத்துகிறது. இரண்டு, மூன்று நாட்களாக தொடரான வேலைப்பழுவும், சீரான நித்திரை, உணவின்மையும் களைப்பை அதிகப்படுத்திவிட அதனை வெளிக்காட்டாமல் இருக்க அதிக பிரயத்தனம் எடுக்க வேண்டியுள்ளது. ஆளணி எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினால் சத்திர சிகிச்சை செய்யும் இவனே மயக்க மருந்து கொடுப்பதை கண்காணித்தவண்ணம் ஏனைய மருத்துவப் போராளிகளையும் ஒருங்கிணைத்து பணியைத் தொடங்குகிறான். எது எவ்வாறு இருந்தபோதும் இயக்கத்தின் இராணுவத்துறைசார் முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவில் கள மருத்துவமும் முன்னேறியுள்ளது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆறுதலைத்தருகிறது.

1994ல் ஆண்டு எமது மருத்துவ வளம் யாழ் நகரையே தளமாகக் கொண்டிருந்தது. கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலை மேற்கொள்வதற்காக மணலாறு, நெடுங்கேணிப்பகுதிகளில் கூடியிருந்தோம். சமர் நிலைகளில் இருந்து கொண்டுவரப்படும் நூற்றுக்கணக்கான காயக்காரர்களுக்கும் முதலுதவி, சிறு சத்திர சிகிச்சைகள் என்பனவே மேற்கொள்ளப்படும். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் உடனடியாக யாழ் மருத்துவமனைக்கே அனுப்பப்படுவர். இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில்தான் பெண் மருத்துவப்போராளி ஒருவர்
பின் முழங்கால் பகுதியில் சிறு காயத்திற்குட்படுகின்றார். அக்காயம் காலிற்கான பிரதான நாடியைத்தாக்கியிருக்குமோ என சந்தேகம் எழுகின்றது. அவ்வாறு இருந்தாலும் அங்கு ஒன்றும் செய்ய முடியாது. அப்போராளி யாழ் மருத்துவமனைக்கு சென்றடைய ஒரு நாள் தாமதமாகியது. விளைவு அப்போராளியின் கால் இழக்கப்பட வேண்டியதாயிற்று. அந்நிகழ்வுடன் ஒப்பிடுகையில் இன்று களமுனைக்கு அருகாமையிலேயே மேற்படி சிகிச்சைகளைச் செய்வது பெருமை கொள்ள வைக்கிறது. எனினும் திருப்தி கொள்ள முடியாது...... இன்னும் முன்னோக்கி நகரவேண்டுமென பலவாறு எண்ணியவன் சத்திர சிகிச்சையின் நுணுக்கமான பணியினுள் அமிழ்ந்து போகிறான்.

நிமிடங்கள் மணித்தியாலங்களினுள் மறைய உடைகள் வேர்வையிலும், தெறிக்கும் இரத்தத்திலும் தெப்பமாக நனைகின்றது. இடையிடையே வீசும் சிறு காற்றும் இந்திரபோக இதம் இதுவோ என எண்ணவைக்கிறது. போதிய உபகரணங்கள், வெப்பம் வெளிவிடா ஒளியூட்டல் வசதி
என்பன இன்மையால் மாற்று வளங்களைப்பிரயோகிப்பதென்பது இடையிடையே சினத்தையும் கொடுக்கின்றது. எனினும் இடர்பாடுகளுக்குள் முகம் கொடுத்து ஒரு அங்கவீனத்தை வெற்றிகரமாகத் தடுக்கிறோம். எனும் எண்ணம் மகிழ்வை மேல் நிலைக்கு கொண்டு வருகிறது. சுமார் நான்கு மணித்தியாலத்திற்கிடையில் சிகிச்சை நிறைவுக்கு வருகிறது. எனினும் இதன் பூரண வெற்றி அறியப்படுவதற்கு 24 மணித்தியாலங்கள் பொறுக்க வேண்டும். எனினும் நோயாளியை இங்கு வைத்திருப்பது களச்சூழலுக்கு உகந்ததல்ல. ஆதலால் மயக்கம் பூரணமாக தெளிந்து சில மணிகளில் பின்னுக்கு அனுப்பலாம் என்னும் முடிவுக்கு வருகின்றனர்.

நேற்றைய வெற்றியின்மை இன்றைய செயல்களால் ஈடுசெய்யப்பட மனம் அமைதியடைகிறது. எனினும் உடற்களைப்பு அவனை விரட்ட நித்திரையிடம் சரணம் புக முனைகிறான். அப்பொழுது இன்னொரு வாகனத்திலிருந்து அவசர அவசரமாக காயமடைந்த போராளி ஒருவன் இறக்கப்படுகிறான். அவனுக்குரிய

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உயிர்காப்புச் சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. மேற்படி சிகிச்சையை மற்றவர்களுடன் இணைந்து செய்த வண்ணம் நோயாளியின் கையில் கட்டப்பட்டிருந்த காகித அட்டையில் குறிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கிறான். அவனின் முகமாற்றம் திருப்தியினைக் காட்டுகிறது..... குறித்த போராளி காயமடைந்து இரண்டு மணித்தியாலங்கள்தான் சென்றிருந்தது. அவனின் வலது மேற்புயம் சிதறல்காயத்திற் குட்பட்டுள்ளது. அவனுக்கு செய்யப்பட்ட முதலுதவி சிகிச்சைகளும், குருதிக்கலன் திருத்தும் சிகிச்சை தேவைப்படும் என்பதும் அவ்வட்டையில் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்னர் உப மருத்துவ நிலைகளில் இருந்து வந்திருந்த மருத்துவப் போராளிகளுக்கான வகுப்பில் மேற்சொன்ன விடயங்களை மீள வலியுறுத்தியிருந்தான். சின்னச் சின்ன விடயங்களில் நாங்கள் கூடுதல் கவனமெடுப்பதுடன், நிதானமாகவும், வேகமாகவும் செயற்பட்டால், பலரின் உயிரைக்காப்பதுடன், அங்க இழப்புக்களையும் தவிர்க்கலாம் என்றவன் அதற்குரிய முக்கிய கருத்துக்களை குறிப்பாக காயத்தின் தன்மையை, சிகிச்சையை குறிக்கும் அட்டையை காயக்காரருடன் அனுப்பும்படி வலியுறுத்தியிருந்தான். அதன் உடனடிப் பயனை உணரக்கூடியதாக இருப்பது ஒருவகை உற்சாகத்தைக் கொடுக்கிறது.

குறித்த நோயாளி சத்திர சிகிச்சைக்கான மேசையில் ஏற்றப்படுகிறான். உரிய ஏற்பாடுகள் விரைவாக நடைபெறுகின்றன. அப்பொழுது எதேட்சையாக அவன் கூரையை அண்ணாந்து பார்க்கிறான். மேலே இடப்பட்டிருந்த திராந்திகள் உழுத்திருந்தன. அவற்றிலிருந்து கொட்டும் மரத்தூசு திறக்கப்பட்ட சத்திர சிகிச்சைப் பகுதியினுள் விழலாம். அவ்வாறு நடைபெறுமாயின், அது சத்திர சிகிச்சைக்குப் பின்னான உடலின் காயம் மாற்றும் தொழிற்பாட்டைப் பாதிப்படையச் செய்யலாம். ஏன் சத்திர சிகிச்சையின் நோக்கத்தையே சிதறடித்து விடலாம். வேக வேகமாக இவர்கள் மருத்துவ நிலையை நகர்த்தி வந்ததனால் இதனை விட சிறந்ததொரு இடத்தை அவர்களால் அப்போதைக்கு தெரிந்தெடுக்க முடியவில்லை. அது இராணுவத்தின் ஒரு மினி முகாம். சாதாரண நிலைமைகளில் இவ்வாறான சிகிச்சைகள் மூடிய தொகுதியொன்றினுள்ளேயே நடைபெறும். அங்கு வெளிக்காற்று, தூசு என்பன உட்செல்வது தடுக்கப்பட்டு குளிரூட்டப்பட்டிருக்கும். தொற்று நீக்கப்பட்டிருக்கும். இன்னோரன்ன நவீன வசதிகளை உள்ளடக்கியிருக்கும். அங்கு பணியாற்றுபவர்களின் சீருடைகள் ஒவ்வொரு சத்திர சிகிச்சையின் பின்னும் மாற்றப்படும். தேவையான ஓய்வு எடுக்கப்படும். மேற்படி காரணங்களினால் சிகிச்சையின் வெற்றிவீதம் அதிகமாகவே இருக்கும். எனினும் இவ்வாறான யுத்த சூழ்நிலையில் இது சகஜமானதே. போர் நெருக்கடிகளை சந்திக்கும் எல்லா தேசமுமே இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பது ஒன்றும் புதினமில்லை.

மயக்க மருந்து கொடுக்கப்பட்டு சிதைவிற்குள்ளாகியிருந்த

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவையவமானது சீராக வெட்டித்திறக்கப்படுகின்றது. சீறும் இரத்தக்குழாய்கள் உபகரணங்களால் கவ்வப்பட்டு குருதிப் பெருக்கு நிறுத்தப்படுகிறது. தசை நார்கள் பிரிந்து விலக்கப்பட்டு சேதமடைந்திருந்த பிரதான நாடியானது கண்டுபிடிக்கப் படுகின்றது. இவ்வளவும் செய்வதற்கே இரண்டு மணித்தியாலங்கள் எடுத்து விட்டிருந்தது. அளவான உயரமில்லா மேசையில் நோயாளி கிடத்தப்பட்டிருப்பதால், தொடர்ந்து குனிந்து நின்று நுணுக்கமாக சிகிச்சை செய்வதால் நாரிப்பகுதி தசைநார்கள் விண்விண் என வலியெடுக்கத்தொடங்கிவிட்டது. இரைச்சல் கேட்கிறது. களைப்பால் வாடியவர்கள் ஒருவர் முகத்தை இன்னொருவர் அர்த்தமுடன் பார்க்கின்றனர். வரும் காயத்தை ஏற்பதற்காக மளமளவென சூழலைத்தயார்படுத்துகின்றனர். காயக்காரரை இறக்கும் போது அவர்கள் கதைப்பது கேட்கிறது. "கிபிர் சாத்திப்போட்டான். இரண்டு வீரச்சாவு. நாலு காயம்."

காயக்காரரை தரம் பிரித்துப்பார்க்கையில் அவனிற்கு அதிர்ச்சி கிடைக்கிறது. எப்போராளி தன் கடமையைச் சரிவரச் செய்ததால் ஒருவரின் அங்கம் காப்பாற்றப்பட்டதோ, அந்த மருத்துவப் போராளி பாரிய காயத்துடன் வந்துள்ளான். அவனிற்கான சிகிச்சையினைச் செய்து கொண்டிருக்கையில் பலவீனமான குரலில் கேட்கிறான் "டொக்ரர் என்ர கால் தப்பும் தானே" காயத்தைப் பொறுத்த வரை அவனது வலதுகால் முழங்காலிற்குமேல் வெட்டி அகற்றப்படவேண்டிய நிலையில் உள்ளது. ஆயினும் அதனை வெளிக்காட்டக்கூடாது. தனது புருவ அசைவின் மூலம் ஒரு வெள்ளைப் பொய்யைச் சொல்கிறான். பூரண மயக்க மருந்து உட்செலுத்தப்படுகிறது. அப்போதுதான் உதடு திறந்து பொய் சொல்லவில்லை, என தன்னைத் தானே சமாதானம் செய்தவன் என்பறுக்கும் வாளினால் சர சரவென தொடையென்பை வெட்டுகிறான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விளைவழியா விதிகள்



முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள "மேஜர் சிந்தளைச்செல்வன்" ஞாபகார்த்த போர் மருத்துவமனை வழமைக்கு மாறாக இன்று சோகத்தில் அமிழ்ந்துள்ளது. அங்கங்கள் அகற்றுதலையும், காயங்கள் சீராக்கலையும், பிரவாகிக்கும் வேதனை ஒலிகளையும், அடிக்கடி சந்திக்கும் உயிரிழப்புக்களையும் தன்னுள் நடைபெறும் சாதாரண நிகழ்வாகக் கணித்திருந்தது அம்மருத்துவமனை. இன்று தன்வேகம் சற்றடக்கி மௌனத்தில் அழுகின்றது. அதன் முன்றலில் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் கப்டன் கார்முகிலனின் வித்துடல் வைக்கப்பட்டுள்ளது. ஆம் இம்மருத்துவமனையின் உயிர்த்துடிப்பான செயற்பாட்டிற்கு ஒருவருடத்திற்கு மேலாக அச்சாணியாக இருந்தவன் இப்பொழுது மூச்சடங்கிக் கிடக்கின்றான்.

இவ்வஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்பவர்களில் பெரும்பாலானோர் போரின் வடுக்களை வெளிப்படையாகச் சுமந்தவண்ணம் உள்ளனர். ஒலிக்கும் சோககீதம் மனதை உருக்குகின்றது. ஒவ்வொருவராக மலர் தூவுகின்றனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போராளிகள் தங்கள் கனக்கும் இதயம் கண்ணீராக மாறாமல் இருக்க கடினப்படுகின்றார்கள். அப்பொழுது போராளியொருவன் ஊன்றுகோலின் உதவியுடன் POPகட்டுப்போட்ட தனது வலதுகாலை நிலத்தில் ஊன்றாமல் புகழுடல் C. க்கி மெல்லமெல்ல நகர்கின்றான். அசைவின்போது சிதைந்த என்புகள் வெளிப்படுத்தும் வலி சோகத்தை மீறி முகத்தில் வெளிப்படுத்துகின்றது. இவற்றைக் கவனித்துக்கொண்டிருக்கும் வாணனின் கண்களினுள் கடந்த காலம் விரிகின்றது.

தமிழீழத்தின் தொண்டையில் முள்ளாய் உறுத்திய ஆனையிறவு முகாம் முற்றுகையிடப்பட்டு விட்டது. அம்முற்றுகையை இறுக்கி எதிரியை ஓடவிரட்டும் தொடர் சமர்கள் நடைபெறுகின்றன. வெற்றிலைக்கேணி, புல்லாவெளி, நாகர்கோவில் மற்றும் தரையிறக்கம் நடைபெற்ற குடாரப்புப் பகுதிக்கான பிரதான களமருத்துவ முகாம் கட்டைக்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது. எதிரியின் எறிகணைவீச்சு வலயத்தினுள்ளேயே அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. அண்மையில் விழுந்து வெடிக்கும் எறிகணைச் சத்தங்களையும், போர் விமானங்களின் பேரிரைச்சலையும் சிலமைல் தொலைவில் சடசடக்கும் துப்பாக்கியின் ஓசைகளையும் அலட்சியம் செய்தவண்ணம் அம்முகாமில் நிற்பவர்கள் துரிதமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சத்திர சிகிச்சைக்கான மேசையில் ஒருவன் மயங்கிய நிலையில் கிடத்தப்பட்டுள்ளான். அவனது சிதைந்த வலது மேற்கை தசைநார்கள் பிரிக்கப்பட்டுள்ளது. அதனூடாகச் செல்லும் மேல்வயவ பிரதான நாடியானது சிதைந்துள்ளது. அதனை வெட்டிப் பொருத்தும் நுணுக்கமான சத்திர சிகிச்சையானது மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு மயக்க மருந்து கொடுக்கும் பொறுப்பை கார்முகிலன் ஏற்றிருந்தான். களங்களுக்கு அண்மையில் இவ்வாறான சிகிச்சைகளைச் செய்வதென்பது அசாத்தியமானது. அவசர உயிர்காப்புச் சிகிச்சைகளைச் செய்வதும் வேகமான பாதுகாப்பான பின் நகர்த்தலுமே இவர்களுக்கென வரையறுக்கப்பட்ட பணி. எனினும் இங்கு இது விதிவிலக்கானது. கண்டாவளை நீரேரி கடந்துசெல்ல சிலமணிகள் பிடிக்கும். அவ்வாறு அனுப்பப்படின் இப்போராளியின் வலக்கை தோள்மூட்டுடன் துண்டிக்கப்படுதல் தவிர்க்க முடியாதது ஆகிவிடும். எனினும் மூன்று நான்கு மணித்தியாலங்கள் தேவைப்படும். ஒரு சத்திர சிகிச்சையை இங்கு ஆரம்பிப்பது வரவேற்புக்குரியது அல்ல. இதில் அமிழ்ந்திருக்கும்போது தவறியேனும் விழும் ஒரு எறிகணையே பல பெறுமதியான உயிர்களைப் பலியெடுத்துவிடும். இதனைப் பொருட்படுத்தாத கார்முகிலன் மற்றவர்களுக்கும் உற்சாகம் கொடுக்கின்றான். எல்லோருமாக சிகிச்சையை ஆரம்பித்துவிட்டார்கள். அப்பொழுது சிலமீற்றர் தூரத்தில் அடுத்தடுத்து மூன்று ஆட்லறி எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன. அவற்றின் சிதறல்கள் இவர்களைச் சுற்றிவர அடுக்கப்பட்டுள்ள பனைமரக் குற்றிகளைச் சிராய்க்கின்றன. சூழலில் காணப்பட்டவர்கள் நிலக்கீழ் அறைகளினுள் புகுந்துவிட்டார்கள். முகாம் பொறுப்பாளர் இவர்களைக் கீழே வரும்படி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வற்புறுத்துகின்றார். அப்பொழுது இவன் சொல்கின்றான். "இப்படியே விட்டு வர ஏலாது. ஆளையும் தூக்கிக்கொண்டு உள்ளுக்குள்ள வர ஏலாது." கோபமடைந்த பொறுப்பாளர் சற்று உரக்கவே சொல்கின்றார். "நீங்கள் ஒரு உயிரைப் பாக்கின்றீகள், நாங்கள் பல உயிரைப் பாக்கின்றோம். உங்களை நம்பி முன்னால சண்டைபிடிக்கிற ஆக்களின் மனநிலையைப் பார்க்கின்றோம். இப்படி அடம்பிடிச்சுத்தான் 43 பேர் ஒண்டாச் செத்தது." அவரது கோபத்தின் நியாயம் புரிகின்றது. இவர்களின் நிலையைப் பொருட்படுத்தாது எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன. சிறிது நேரத்தில் போர் ஓய்கின்றது. எல்லோரும் கூடியிருந்து கதைக்கின்றார்கள்.

அப்பொழுது ஒருவன் சற்று ஏளனம் கலந்த குரலில் கூறுகின்றான், "டொக்டர்! நீங்கள் பெரிய வீர னெண்டும் தியாகி எண்டும் நினைக்கிறியள். உங்களை விட்டிட்டு நாங்கள் எப்படி பங்கருக்குள்ள போறது?" அவனுக்குக் கோபம் வருமென்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். அதற்குப் பதிலாக நிதானமாக புன்முறுவல் பூத்தான். சிறிது இடைவெளிவிட்டு கதைக்கின்றான், "நான் இதை வீரம் எண்டோ, தியாகமெண்டோ பார்க்கவில்லை. கடமையென்று பார்க்கிறன்." "என்ன சொல்லுறியள்?" "எப்படி இந்த மண்ணில பிறந்தவன் போராட வேண்டியது கடமையோ, அதுமாதிரி போராளி மருத்துவரான நாங்கள் காயப்பட்டவர்களை முடிந்தளவு காப்பாற்றவேணும். அதுவும் கடமையே. கடமையைச் செய்யிறதால ஏற்படுகின்ற மனத்திருப்தியை இந்த செல்வீச்சுக்காக நாங்கள் இழக்க முடியாதுதானே!" இங்கு அர்ப்பணிப்புடன் போராடுவதையே இவன் கடமையென கருதுவது சிந்திக்க வைக்கின்றது.

இப்பொழுது கார்முகிலன் மணலாற்றுப் பகுதியில் களமருத்துவனாகப் பணியாற்றுகின்றான். அவனுக்கு அறிவித்தலொன்று வருகின்றது நெடுங்கேணிப் பகுதியில் வேவுக்குப்போன அணியொன்று தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டதாவும், ஒருவன் காயமடைந்து விட்டதாகவும், இவர்களை ஆயத்தமாக இருக்கும்படியும். உடனடியாக இவன் வரைபடத்தை எடுத்துப் பார்க்கின்றான். அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் இருந்து இங்கு வந்துசேர குறைந்தது நான்கு மணித்தியாலங்கள் எடுக்கும். அதுவரை காத்திருப்பது நியாயமற்ற செயல். வேவுப்புலியொருவனுடன் கதைக்கின்றான். பின் இருவரும் மருத்துவப் பையையும் தமக்குரிய ஆயுதங்களையும் தூக்கிக்கொண்டு காட்டினை ஊடறுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"டொக்டர் நாங்கள் சூனியப் பிரதேசத்தினுள்ள போறம், அவன்ர கொமாண்டோஸ் அடிக்கடி இஞ்சால வாறவங்கள். அடிவிழுறதும் வழமை. அப்படி அடிவிழுந்தா என்ன செய்யிறது?" வேவுப்புலி கேட்கின்றான். "வழமையா என்ன செய்யிறனீங்கள்?" "நிலமைக்கு ஏற்ப முடிவெடுப்போம். அவன் முந்தினால் கிண்டிக்கொடுக்க வேண்டியதுதான்." சற்றுச் சிரிப்புடன் சொல்கின்றான். "சரி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அடிவிழுந்தால் அப்படியே செய்வம்." "அது சின்னப்பிரச்சினை." "அப்ப எது பெரிய பிரச்சினை?" "இந்தக்காடு எனக்கு அத்துப்படி. நான் தப்பிடுவன். நீங்கள் பாதை மாறினால் கஸ்ரப்படவேண்டிவரும்." என்று கூறினான். அப்படி நடைபெற்றால் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை கார்முகிலனுக்கு விளக்குகின்றான். தங்கள் ஊடுருவி அலகும் பார்வையால் காட்டை அவதானித்தபடி விரைகின்றனர். இவன் மருத்துவப் பையினுள் மேலதிகமாக வைத்திருக்கும் சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் அதிக பாரத்தைக் கொடுக்கின்றது. அதனால் இவன் வேகம் சற்றுக் குறைகின்றது. 'சே– ஒரு பத்து நிமிடம் முந்தி வந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம்' எனத் தன்னுள் பின்னர் கவலைப்படுவதைத் தவிர்ப்பதற்காக மூச்சுப்பிடித்து வேகமாக நடக்கிறான். இவனது மனவோட்டத்தைப் புரிந்த வேவுப்புலி, சற்று முன்னால் விரைந்து அடர் கொப்புகளை விலத்தி பாதை எடுத்துக் கொடுக்கின்றான். குனிந்து, வளைந்து, நிமிர்ந்து 'ஒருநாள் நடப்பதற்கே தான் இவ்வளவு கஸ்ரப்படுறன் வேவுக்காரர் ஒவ்வொரு நாளும் இப்படித்தானே நடப்பினம்' என ஒப்பிட்டுத் தனது கடினத்தைச் சிறிதாக்கிக் கொள்கிறான்.

சுமார் இரு மணித்தியாலத்தின் பின்னர் வேவுக்காரன் சொல்கிறான், "டொக்டர்! இதுதான் கடைசி R.V. இதில நிப்பம். இன்னும் கொஞ்ச நேரத்தில அவையள் எப்படியும் இங்க வந்து சேருவினம்." இவர்கள் ஒரு பெரிய முதிரை மரத்தடியில் அமர்கின்றனர். சற்றுத் தொலைவில் சிலர் வருவதற்கான அரவம் கேட்கிறது. இவர்கள் எழுந்து மரக்கொப்புகளிடையே உற்றுக் கவனிக்கிறார்கள். ஒரு சறத்தினூடு இரு காட்டுத் தடிகளைப் புகுத்தி, அதில் காயமடைந்தவனைக் கிடத்தி காவிவருகின்றார்கள். சுற்றிவர ஏனையவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை நோக்கி குரல்கொடுத்து, சைகை செய்கின்றார்கள். தங்களை அவர்கள் அடையாளம் கண்டதை உறுதிப்படுத்தியவுடன் அவர்களை நோக்கி ஓடிச் செல்கின்றார்கள். இவர்களைக் கண்டவுடன் ஏற்பட்ட அளவிட முடியாத மகிழ்ச்சியை அவர்கள் முகம் வெளிப்படுத்துகின்றது. ஓடிச்சென்ற கார்முகிலன் காயமடைந்தவனைப் பார்க்கின்றான். ஒரு கண அவதானிப்பிலேயே புரிந்துவிட்டான். நெஞ்சிலும் காலிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள். நெஞ்சறைக் குழியினுள் வெளியேறித் தேங்கிய குருதி சுவாசப்பைகளை அழுத்துகின்றது. மூச்சுவிடுவதற்கு மிகவும் கடினப்படுகின்றான். உரிய சிகிச்சை கொடுக்காவிட்டால் இன்னும் சில நிமிடங்களில் உயிர்பிரிவது உறுதி. இரத்தமும் அதிகமாக வெளியேறிவிட்டது. இப்ப முதலில் செய்ய வேண்டியது மூச்சுவிடுவதை இலகுவாக்க வேண்டும். உடனடியாக காயக்காரனை நிலத்தில் வைக்கச் சொல்கின்றான். இன்னொருவனை அவனின் முதுகை உயர்த்திப் பிடிக்கச் சொல்கின்றான். உடன் பாய்ந்து சென்று தனது மருத்துவப் பையை எடுத்து வருகின்றான். மேற்சட்டையை பொறுமையாக கழட்டுவதற்கு நேரம் இல்லாததால் கத்தரிக்கோலினால் வெட்டிக்கிழித்து அகற்றுகின்றான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


எவ்வித வலி நிவாரணியும் கொடுக்கப்படவில்லை. இன்னொருமுறை காயப் பக்கத்திற்குரிய கையை உயர்த்திப் பிடிக்கச் சொல்கின்றான். பக்கவாட்டாக நடுப்பகுதியில் இரு விலாவென்புகளுக்கு இடைப்பட்ட தோலை வெட்டுகின்றான். அவ்வெட்டினூடு கம்பி உட்செருகப்பட்ட றப்பர் குழாயை அழுத்தி தசைநார்களினூடு நெஞ்சறைக் குழியினுள் செலுத்துகின்றான். குழாயை உட்செலுத்தியவண்ணம் கம்பியை வெளியில் எடுக்கின்றான். அதனூடு இரத்தம் வேகமாக வெளியேறுகின்றது. குழாயை மடக்கிப் பிடித்தவன் அதன் வெளிமுனையில் பையுடன் கூடிய இன்னொரு குழாயைப் பொருத்துகின்றான். இப்பொழுது குருதி அப்பையினுள் நிரம்புகின்றது. மேற்படி றப்பர் குழாய் கழன்று விடாதிருக்க நைலோன் ஊசிநூலினால் அதனைத் தோலினோடு சேர்த்து கட்டுகின்றான். மறுகையை எட்டிப் பார்க்கின்றான். அதில் 'வென்புளோன்' போடப்பட்டுள்ளது. தலையை ஆட்டியவன், தனது மருத்துவப் பையினுள் இருந்து இரத்தம் சேகரிக்கும் பையை எடுக்கின்றான். அதனூடு இணைக்கப்பட்டிருக்கும் ஊசியை ஏற்கனவே இரத்தம் நிறைந்திருக்கும் பையினுள் ஏற்றுகின்றான். அதிலிருந்து இரத்தத்தை இந்தப் பையிற்கு மாற்றுகின்றான். இவ்வாறு சேகரிக்கப்பட்ட இரத்தத்தை அக்காயக்காரனுக்கு மீண்டும் ஏற்றுகின்றான். இவ்வாறு இரண்டு பைந் குருதி ஏற்றியவன், இரண்டு பைந் திரவ ஊடகத்தையும் ஏற்றுகின்றான். இப்பொழுது சற்று ஆசுவாசப் பெருமூச்சு விடுகின்றான்.

அப்பொழுது அணித்தலைவன் சொல்கின்றான், "டொக்டர்! நாங்கள் வேகமாக வெளிக்கிடவேணும். அவனுக்கு எங்களில ஒரு ஆள் காயம் எண்டது தெரியும். எப்படியும் எங்கள பின்தொடர்ந்து வந்துகொண்டிருப்பான். இடையில அடிக்கிறத்துக்கு ரீமை அனுப்பியிருப்பான்." நிமிர்ந்து பார்த்தவன் ஐந்து நிமிடங்கள் பொறுக்கச் சொல்லி சைகை செய்தவன், கால் காயத்தைக் கவனிக்கின்றான். என்பு சிதைந்துள்ளது. நோநிவாரணி கொடுத்தவன் காலிற்கு மட்டை வைத்து அசையாமல் கட்டுகின்றான். நாடித்துடிப்பு, சுவாசவீதம் என்பவற்றை அவதானிக்கின்றான். உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுவதை அவன் முகம் பிரகாசிப்பதன் மூலம் வெளிப்படுத்துகின்றது. இப்பொழுது சற்று வேகம் குறைத்து நுண்ணுயிர்கொல்லி மருந்துகளை ஏற்றுகின்றான். 'சரி போகலாம்' என்பதற்கு அறிகுறியாக தலையை ஆட்டுகின்றான்.

மேற்படி பின்தள மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றான். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் தப்புகின்றான். ஆனால் சில நாட்களின் பின்னர் நடைபெற்ற பதுங்கித் தாக்குதல் ஒன்றில் கார்முகிலன் வீரச்சாவடைந்து விட்டான். அவனின் தனித்துவமான துணிச்சலான முடிவால் காப்பாற்றப்பட்டவன் அவனின் வித்துடலுக்கு மலர்வணக்கம் செய்கின்றான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அடிப்படைகள்



அந்த நிலக்கீழ் அறையானது இதமான மென் மஞ்சல் நிலவொளியால் மெழுகப்பட்டிருக்கின்றது. அதன் நேரடி வெளியுலக தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் அங்கிருந்து உலகில் எப்பாகத்துடனும் சில மில்லி செக்கன்களிலேயே தொடர்பைப் பெறும் வல்லமையைப் பெற்றுள்ளது. அவ்வறையின் உள்ளிடம் காலத்தை பிரதிபலிக்கும் உபகரணங்களினால் நிரப்பப்பட்டுள்ளது. அங்கு சிறு மென் அதிர்வையும் உள்வாங்கக் கூடிய வகையில் காற்றினால் நிரப்பப்பட்டதும், 360 பாகை ஊடாக சூழலக்கூடியதுமான நான்கு இருக்கைகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டு இருவரினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அவர்களின் முகங்கள் அச்சூழல் ஏற்படுத்திய பாதுகாப்பு உணர்வை பிரதிபலிக்கின்றன. எவ்வகை சக்தி வாய்ந்த கதிர்களினாலும் அவ்வறையை ஊடுருவமுடியாது என்பது பலமுறைவாய்ப்பு பார்க்கப்பட்ட பின்னரே அக்காரியாலயம் அங்கு இயங்கத் தொடங்கியது. அது அணுகுண்டு போன்ற ஆயுதங்கள் கைவிடப்பட்டு பலவருடங்கள் ஆகிவிட்ட காலப்பகுதி. உடல் வெளியேற்றும் $Co_2$ ஐயும் வெப்பத்தையும் தகுந்த விகிதத்தில் மாற்றி அமைக்கும் தானியங்கி இயந்திரங்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் வளமான சூழல், உடலில் சிறு அசதியும் ஏற்படுத்துவதற்கு அனுமதி அளிக்கவில்லை. உடல் உள பகுப்பாய்வு அவதானிப்பு கணனிகளின் அறிவுறுத்தல்களை அலட்சியம் செய்வதால் என்னவோ, ஒருவரின் தொந்தி சற்று

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பெரிதாகவே காணப்படுகிறது. அவன் ஒரு உயர்தர அதிகாரிக்குரிய மிடுக்குடனும், சிறிதளவு கபடத்தனம் கலந்திருக்கும் ஆனால் அறிவொளி சுடர் விடும் கண்களையும் கொண்டுள்ளான். மற்றவனோ முகத்தசைகளுக்குரிய உணர்வு நரம்புகள் அறுந்ததால் எண்ணபிரதி பலிப்புகளை வெளிக்காட்ட முடியாத, தோல்முகமூடி அணிந்தவன் போல் காணப்படுகின்றான். இவன் பணிவாக இருக்கும் தோரணையை அவதானிக்கும் பொழுது முன்னவனிற்கு உதவியாளன் என்பது வெளிப்படுகின்றது.

சிறிலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரியான அவன், "புதிதாக ஏதாவது நடந்துள்ளதா?" என தன் தலையை சற்று திருப்பி பிரதான கணினிஆணை உள்வாங்கியை நோக்கி கேட்கின்றான். இக்கருவியானது ஒலியலைமூலமான கட்டளைகளை ஏற்று செயற்படும் திறன் வாய்ந்தது இவன் தனது வழமையான பணிகளில் குறிப்பிடத்தக்கதாக பின்வருவனவற்றை கொண்டுள்ளான். மின் அணுவலை தொடர்புகள் மூலம் தமிழீழத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை வேவு பார்ப்பது, பதிவு செய்வது, உயர் மட்ட உத்தரவுகளை உடனுக்குடன் உரிய இடங்களுக்குத் தெரிவிப்பது. தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு செயற்படும் நாசகார திட்டங்களை இணைப்பது போன்றன. இவன் ஒருவன் செய்யும் வேலையை 50 வருடங்களுக்கு முன்னர் செய்வதென்றால் குறைந்தது 1500 ஆரோக்கியமான, 75வீதத்திலும், கூடிய அறிவுச்சுட்டெண் உடைய மனித வலு தேவைப்பட்டிருக்கும். இவனது கேள்விக்கு ஆம்... என பதிலளித்த கணனியானது தொடர்கிறது. "தமிழீழம் புதிய கணினி வைரஸ் ஒன்றை கண்டு பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இது சாத்தியமடையும் பட்சத்தில் எமது முன்னரங்க மின் அணுப்பாதுகாப்பு வலயமானது ஒரு நனோ செக்கனில் தகர்த்தழிக்கப்பட்டுவிடும்.

அது இவ்வாறு தெரிவிக்க இவனது புருவமோ ஆச்சரியத்தால் உயர்கின்றது. எதையும் பொருட்படுத்தாது சமகால மனித சிந்தனை ஆற்றலில் 5வீதம் வரை கைவரப்பெற்றுள்ள அக்கருவியானது தொடர்கிறது. அவர்களது இம் முயற்சி பற்றிய முன்னறிவிப்பு எமது நாசகார முறியடிப்பு பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலதிகமான பாதுகாப்பு வலயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எங்களைப் பொறுத்தவரை இவர்களின் இச் செயற்பாடானது ஒரு வள விணடிப்பு முயற்சியாக கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறி சிறிது இடைவெளிவிட்டு "மேலதிக தகவல்கள் தேவையா?" எனக் கேட்கிறது. அதற்கு தமிழீழத்திற்கான கணினி மையங்களை ஒரு முறை சரி பார்ப்போம். என இவன் ஆணையிடுகிறான்.

இப்பொழுது இவர்களுக்கு முன்னால் இருக்கும் இருபதிற்கு பத்தடி இலத்திரனியல் திரையானது உயிர்பெறுகின்றது. அதில் உலகப் படமொன்று விரிகின்றது. முதலில் சிறுபச்சை நிற வெளிச்சங்கள் பல இடங்களில் ஒளிர்கின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவை பல்வேறு நாடுகளில் இயங்கும் இரகசிய மையங்களாகும். அப்பொழுது அத்திரையை ஊடறுத்து சிவப்பு வெளிச்சம் ஒன்று நகர்கின்றது. இது தான் நடவடிக்கை ஒருங்கிணைப்பு தலைமையகம் ஆகும். இதன் சிறப்பியல்பு என்ன வென்றால் இது பூமியிலிருந்து 39 கிலோ மீற்றருக்கு அப்பால் விண்வெளியில் இயங்கும் செயற்கை கோளாகும். இதன் செயற்பாட்டில் நேரடியான மனித தலையீடுகள் எதுவும் இடம்பெறவில்லை. மேற்படி தகவல்கள் தமிழீழ பாதுகாப்பை பொறுத்தவரையில் அதி உச்ச இராணுவ இரகசியங்களாக கருதப்படுகின்றது. இப்பொழுது பல நூறு பொன்நிற ஒளிர்வுகள் திரையில் விட்டு விட்டு தோன்றுகின்றது. இவை நேரடியான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செய்திகளாக இருக்கின்றன. எனினும் இவற்றில் பல போலியானவை. பகைவனின் கவனக்கலைப்பானாக தொழிற்படுபவை. மேற்படி தகவல்கள் 2வருடங்களுக்கு முன்னரேயே தங்களால் திரட்டப்பட்டு விட்டதையும். அதனை தமிழீழம் இன்னும் உணரவில்லையென்பதையும் எண்ணியதால் என்னவோ அவன் முகத்தில் பெருமிதம் பிரவாகம் எடுக்கின்றது. "யுத்தம் ஒன்று ஆரம்பித்தால் இதை செயலிழக்க வைத்தால் காணும். பகைவன் இதயத்தில் ஈட்டி பாய்ச்சியதற்கு சமன்," எனக் கூறியவாறு அச்சிவப்பு ஒளிர்வை சுட்டிக்காட்டிய வண்ணம் தனது உதவியாளனை திரும்பிப்பார்க்கின்றான்.

எதிர்பார்த்தவாறு உதவியாளனிடமிருந்து திருப்திகரமான பிரதிபலிப்புகள் எதுவும் இவனுக்கு கிடைக்கவில்லை. ஏதோ தன்னுள் எண்ணியதற்கு அறிகுறியாக தலையை ஆட்டியவாறு "நீ யுத்தத்தை விரும்பவில்லைப்போல் உள்ளது..." எனத் தனது குரலில் சந்தேகத்தை கலந்தவன் அவன் பதிலளிக்க இடைவெளிவிடாது சொல்கிறான். "யுத்தத்தை பெரும்பாலானவர்கள் விரும்பவில்லைத்தான் ஆனால் அது தவிர்க்க முடியாமல் இருக்கின்றது. இப்பொழுது தமிழீழத்துடன் எங்களிற்கு நல்லுறவே இருக்கின்றது. அது எதனால் வந்தது என நினைக்கின்றாய?" என இவன் கேட்க " பயத்தினால்..." என மற்றவன் பதிலளிக்கிறான். "சற்று விளக்கமாகவும் சொல்லும்". "ஆம்... இப்பொழுது நாங்கள் ஏறக்குறைய ஒருவரையொருவர் மிஞ்சும் சமபலத்தில் உள்ளோம் அதனால் தான் நாங்கள் சமாதானமாக இருக்கின்றோம்." சரியாகச் சொல்கின்றாய்.... இனிமேலும் யுத்தம் ஏற்படாதென்று கருதுகின்றாயா? அவ்வளவிற்கு நான் முட்டாள் இல்லை. ஏனெனில் 2100 வருடங்களிற்கு மேலாக இத்தீவில் மத, கலாச்சார, வாழ்க்கை முறைகளில் வேறுபட்ட இரு இனங்களாக வாழ்ந்து விட்டோம். பல யுத்தங்களையும் சந்தித்து விட்டோம். இனியும் அதற்கு சந்தர்ப்பங்களுண்டு 'இவற்றுள் எமக்கு அவமானகரமான தோல்வியென எதை நீ கருதுகின்றாய?. அதிகாரியின் இக்கேள்வியுடன் உரையாடல் சிறிது இடைவெளி பெறுகின்றது. சற்று அவகாசம் எடுத்த உதவியாளன் 'அது ஒரு தோல்வியல்ல தொடரான தோல்விகளாகும். அதற்கு அவர்கள் ஓயாத அலைகள் எனப் பெயரிட்டிருந்தனர்.' எனக் கூறிமுடிப்பதற்குள் இடையறுத்த அதிகாரி 'அதனால்தான் இரு தேசம் இங்கு உருவானது. நம் தாய்நாட்டிற்கு ஏற்பட்ட அவமானத்தை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

துடைக்கவேண்டும் என்ற ஆவேசம் உன்னில் எழவில்லையா? என இவன் கேட்க, 'பாதுகாப்பு அமைச்சு உங்களை அழைக்கிறது.' என பிரதான கணினி குரல் கொடுக்கிறது. தன் தேசப்பற்றை அதிகாரி சந்தேகித்ததால் மன உழைச்சலிற்கு உட்பட்டவன் தன் கடந்த காலத்தை இரை மீட்கின்றான்.

தாய் நாட்டில் தான் கொண்ட பற்றும், விடா முயற்சியும் தான் தன்னை இந்நிலைக்கு கொண்டு வந்து விட்டது. எனினும் தான் பாதுகாப்பு அமைச்சின் வட்டத்தினுள் உள்வாங்கப்பட்டதும், பூரண உடல் உள சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இரண்டு வருடங்களிற்கு முன்னர் தனது ஞாபகப் பகுதியில் இருந்து 1/2 மணிநேரம் அழிக்கப்பட்டது. போன்ற தொடர் நிகழ்வுகள் ஞாபகத்திற்கு வருகின்றன. அந்த 1/2 மணி நேரத்தில் தான் தனது உடலில் ஏதோ ஒரு பகுதியில் மிக நுண்ணிய சைகை கடத்தியானது பொருத்தப்பட்டிருக்க வேண்டும். தான் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அவை முப்பரிமான படங்களாக பதியப்பட்டு கொண்டிருக்கும். தனது பிரத்தியேக வாழ்க்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. தனது செயற்பாடுகள் பல்வேறு மட்டங்களிலுள்ள கணினிகளால் தொடர்பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டவண்ணம் இருக்கும். தேச நலனிற்கு குந்தகமாக எது செய்ய முற்பட்டாலும் உடனேயே கண்டு பிடிக்கப்படுவேன். இத்துறையில் இருப்பவர்களிற்கு இது பொதுவானதே. அவ்வாறு தேச பாதுகாப்பிற்காக சிலர் தங்கள் பிரத்தியேக வாழ்க்கையை இழப்பது தவிர்க்க முடியாததே என பலவாறு எண்ணியவன் என்ன இருந்தாலும் தனது மனம் இவர்களின் நாசகாரத்திட்டத்திற்கு முழுமையாக ஒப்பவில்லை என்பதை உணர்ந்து கொள்கின்றான்.

பாதுகாப்பமைச்சு அழைப்பதாக அறிவிக்க கணினியை நோக்கி "தொடர்பைக் கொடு" என ஆணையிடுகிறான். உடனேயே அவ் இலத்திரனியல் திரையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் தோன்றி "வேலைத்திட்டம் என்ன மாதிரி போகிறது? முடிவு எப்பொழுது கிடைக்கும்?" எனக் கேட்கிறார். முப்பரிமாணத்தை உணர்த்தும் வகையில், அத்திரையில் தோன்றும் காட்சிகள் அமைவதால் அது நேரடியாக உரையாடுவது போன்ற பிரமையையே ஏற்படுத்துகிறது.

"இன்னும் ஒரு மணித்தியாளத்தினுள் முடிவு வந்துவிடும்." என இவன் கூற "நல்லது கிடைத்தவுடன் எனக்கு தொடர்பெடுக்கவும்." எனக்கூறி அதிலிருந்து மறைகிறார். "உங்களிற்கு அரை மணித்தியாலம் ஓய்வு இருக்கிறது". எனச் சுட்டிக்காட்டிய கணினியானது "ரம்மியமான சூழ்நிலை ஏதாவது தேவையா?"எனக் கேட்கிறது. "ஆம் நாயகரா நீர்வீழ்ச்சி" எனப் பதில் அளிக்கின்றான். உடனேயேதொலைவில் இருந்து நோக்கும் நாயகரா நீர்வீழ்ச்சியின் காட்சியானது அத்திரையில் தோன்றுகின்றது. அத்துடன் அவ்வறையினுள் அப்பிரதேசத்திற்குரிய

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனிமையும் பரவுகின்றது. சிறிது நேரம் அப்புதிய சூழலை ரசித்து கொண்டிருந்தவன் தன் உதவியாளனை நோக்கி கேட்கின்றான். "இத்திட்டம் பற்றிய உனது கருத்து என்ன?" "கொடுக்கப்படும் வேலைகளை செய்வதே நமது கடமை, கருத்துக்களை தெரிவிப்பதல்லவே!." எனத் தனது நிலையை உதவியாளன் தெளிவுபடுத்துகின்றான். அவன் குரலின் தன்மையிலிருந்து அவனுக்கு பூரண விருப்பம் இல்லையென்பது விளங்குகின்றது. அதனைக் கவனித்த அதிகாரி பின்வருமாறு கூறுகின்றான். "நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ சிலவற்றை செய்யத்தான் வேண்டும். இல்லையென்றால் இந்தப் போட்டி நிறைந்த உலகில் வாழும் தகமையை இழந்து விடுவோம். நாங்கள் எப்பொழுதும் எங்கள் பலத்தை மேல் நிலையில் வைத்திருத்தல் அவசியமாகின்றது." என்றவன் உதவியாளனின் கண்களூடு உற்றுப்பார்த்து அவன் எண்ணவோட்டத்தை கவனிக்க முற்படுகின்றான். இதனைப் புரிந்து கொண்ட உதவியாளன் தனது இறுக்கமான முகத்தை சற்று தளர்த்தி புன்சிரிப்பொன்றை உதிர்த்தவண்ணம், "யுத்த காலத்தில் சமாதானத்திற்கு தயாராவதற்கும், சமாதான காலத்தில் யுத்தத்திற்கு தயாராவதற்கும் செயற்பட வேண்டி இருப்பது வாழ்வியல் வழமை போலும்." எனக் கூறி முடிக்கின்றான். "இவ்வளவு அழிவுகள் தேவைதானா?" எனவும் கேட்கிறான். அதற்கு அதிகாரி "நீ அழிவுகளைக்கண்டு பயப்படுகிறாயா? அப்படியானால் யுத்தத்திற்கும் பயப்படுகிறாய் என்றுதானே அர்த்தம்!" எனக் கேட்கிறான். "ஆம் நான் விளைவுகளை எண்ணிப்பயப்படுகிறேன். அதற்காக நான் எனது கடமையில் பின் நிற்பதில்லையே!" எனக் கூறுகின்றான். "இவ் யுத்தத்தின் விளைவு உயிர்வாழும் சந்ததியை நேரடியாக பாதிக்காது என்பதனை அறிவாய் தானே?" "இல்லை உயிர் வாழ்தலின் அடிப்படையே அது கேள்விக்குறியாகின்றது." "நீ என்ன சொல்ல வருகிறாய்?" "ஒவ்வொரு உயிரியும் தான் வாழ்வது மட்டுமன்றி தன் இனம் வாழ்வதற்கான ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதையும் தன் இயல்பூக்கமாகக் கொண்டுள்ளது. உண்மையில் ஆரம்பத்தில் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மட்டுமே நேரடியாக பாதிக்கப்பட்டனர். இடைக்காலத்தில் மக்களும் பாதிக்கப்பட்டனர். தற்பொழுது எதிர்காலச் சந்ததியும் பாதிக்கப்படுகின்றது." என இவர்கள் சம்பாசனை தொடர்ந்து கொண்டிருக்கையில், "நாசகார தலைமையகம் உங்களை அழைக்கின்றது." எனக் கணினி கூற "தொடர்பைக் கொடு" என்கிறான். உடனேயே அத்திரையில் வயது முதிர்ந்த ஒருவர் தோன்றி "திட்டம் பூரண வெற்றியடைந்து விட்டது. நீங்கள் உரிய இடத்திற்கு அறிவிக்கலாம்." என்கிறார். அவரின் முகபாவனையோ இரண்டாம் உலக மகாயுத்த முடிவில் யப்பானில் அணுகுண்டு ஏற்படுத்திய அழிவை கேள்வியுற்ற பொழுது விஞ்ஞானி ஐயன்ஸ்டீனின் முகம் எப்படி இருந்திருக்குமோ அப்படி தோற்றமளிக்கிறது. அதிகாரி அவரிற்கு நன்றி தெரிவிக்க அவர் திரையில் இருந்து மறைகின்றார்.

இத்திட்டத்தின்படி அவர்கள் வித்தியாசமான கதிரொன்றைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கண்டுபிடித்துள்ளனர். இது புறவூதாக்கதிர் போன்றது. இதன் விசேடம் என்னவென்றால் குறித்த வேலையைச் செய்தவுடன் தானாகவே அமைப்பழிவிற்குள்ளாகிச் சூழலுடன் கலந்துவிடும். "இத்திட்டத்தின் முதலாவது வெற்றியென நீ எதைக் கருதுகிறாய்?" என்ற அதிகாரியின் கேள்விக்கு மற்றவன் சற்று யோசித்து விட்டு "தமிழர்களின் போர்க் குணத்திற்கு காரணமாக இருக்கும் மரபணுப்பகுதியை பிரித்தறிந்து கண்டு பிடித்தது." என்கிறான். தொடர்ந்து இவன் "அதற்காக ஒரு தமிழ் உயிரையும் நாங்கள் பலியெடுத்துவிட்டோம்" என்று அவ்விடத்தில் அவசியமில்லாத உண்மையையும் சொல்லி விடுகிறான். "அது கிடக்கட்டும் வெற்றியின் மகத்துவத்தை பூரணமாக விளங்கிக் கொள்கின்றாயா?" எனக்கேட்க "ஆம்" என்றவன் தொடர்கின்றான். "இக்கதிரை நாங்கள் தமிழர்களின் மீது பிரயோகிப்போம். அது அவர்களின் இனப்பெருக்க கலங்களில் உள்ள போர்க்குணத்திற்கு பொறுப்பாக இருக்கும் மரபணுப்பகுதியை மட்டும் விகாரத்திற்கு உட்படுத்தும். இதனால் அவர்களின் சந்ததியில் 1 வீதத்திற்கேனும் போர்க்குணம் கடத்தப்படமாட்டாது அவர்கள் எங்கள் நவ ஆதிக்கத்திற்கு உட்படுவார்கள் கிட்டத்தட்ட 100 வீத மனித சிந்தனை ஆற்றலுடன் தொழிற்படும். ஆனால் எங்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் றோபோக்கள் போல் அவர்களை நாங்கள் பயன்படுத்தலாம்." என தெரிவிக்க, அதிகாரியோ தனது இருக்கையிலிருந்து எழுந்து, இவன் அருகில் வந்து முதுகில் தட்டிக்கொடுத்து "சரியாகச் சொன்னாய், சாடிக்கேற்ற முடிபோல் எனக்கு வந்து வாய்த்துள்ளாய்" என்கின்றான். "இதை மேலிடத்திற்கு அறிவித்த உடனேயே எனக்கும் உனக்கும் பதவியுயர்வும் கௌரவமும் கிடைக்கும்." அக்கூற்றில் பெரிதாக நம்பிக்கை வைக்காத உதவியாளனிற்கு முன்னர் நடக்கும் சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

சுமார் பதினைந்து வருடங்களிற்கு முன்னர் தமிழீழம், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பக்ரீரியாக்களைப் பாவிக்கும் தொழில்நுட்பத்தில் மிக முன்னணியில் நின்றது. இதனால் உலக சந்தை வாய்ப்பை இலகுவாக கைப்பற்றிக் கொண்டது. இதனால் பொறுக்காத வேறு சில சக்திகளுடன் சேர்ந்து சதித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதனால் தமிழீழத்தின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஆட்டங்காண வைத்தது. என்னவென்றால் தமிழீழம் பாவித்த பக்ரீரியாக்களுக்கு வைரஸ் போன்று தங்கள் புரத உடல்களை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் வல்லமை புகுத்தப்பட்டது. இதனால் இவர்களின் திட்டம் தவிடு பொடியாகியதுடன் பாரிய சக்தி விரையம் ஏற்பட்டதே மீதியானது. மேற்படி விடயத்தை ஞாபகப்படுத்தியவன் "எதற்கும் நாங்கள் சற்றுப் பொறுப்போம்." எனக்கூற அதிகாரி " ஏன் "என சற்ற சினத்துடன் கேட்கிறான். அப்பொழுது "தமிழீழத்தில் இருந்து உங்களுக்கு அவசர தகவல் வந்துள்ளது" என பிரதான கணினியானதும் குரல்கொடுக்கின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொடர்பிற்கான அனுமதியைப் பெற்றவுடன் அத்திரையில் முதலில் விரிந்த காட்சியானது அச்சூழ்நிலைக்கு தொடர்பற்றதாகவே இருக்கிறது. இரு நாடுகளும் பிரிவதற்கான இறுதிப் போரில் ஏற்பட்ட உயிர் இழப்பு, சொத்திழப்புபோன்றவற்றின் சுருக்கமான விபரம் ஒளிபரப்பபடுகின்றது. "இதை ஏன் இவர்கள் இப்ப போடுகின்றார்கள்?''' என அதிகாரி சலித்துக்கொள்ளும் பொழுது எழுத்தோட்டமாகவே செய்தி தொடர்கின்றது " நீங்கள் இப்பொழுது எதிர்கால தமிழர்களின் போர்க்குணத்தை இல்லாது ஒளிக்கும் மரபணு விகாரமாக்கி கதிர் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளீர்கள் இது ஒரு வீணடிப்பு செயற்பாடாகும். ஏனெனின் தற்போது இருக்கும் தமிழர்களின் எல்லாக்கலன்களிலும் எதிர்மரபானு விகாரமாக்கி ஏற்படுத்தப்பட்டு விட்டது. சந்தேகம் இருந்தால் அதற்கான தகவல்களையும் சமன்பாட்டையும் பின்வரும் தகவல் பெட்டியில் இருந்து நீங்கள் பெற்று வாய்ப்பு பார்க்கலாம்" எனத்தொடர்ந்து அதற்கான இலக்கங்களும் வெளியிடப்படுகின்றது. மேலும் சிறிலங்கா அரசிற்கு உத்தியோக பூர்வமாக அனுப்பப்பட்ட வேண்டுகோளின் நகல்ஒன்று உங்களிற்கும் தரப்படுகிறது. அமெரிக்கா மக்களிடையே புதியநோய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு மரபணு விகாரமொன்றே காரணம் என்று அறியப்பட்டுள்ளது.அதற்கான மாற்றுவழி கண்டுபிடிக்கத் தாமதமாகும் ஒவ்வொரு கணமும் பல குழந்தைகள் அந்நோயுடன் பிறந்த வண்ணம் இருப்பார்கள்.அதனைத் தடுப்பதற்கான ஆராட்சிகள் உலக மரபணு பகுப்பாய்வு ஒன்றியத்தால் முடுக்கி விடப்பட்டுள்ளது. அதற்கு தலைமை தாங்கும் நாடு என்ற வகையில் தமிழீழம் உங்களிடமிருந்து பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது.எனக்கூறி முடிய அத்திரையின் ஒளிர்வு அடங்குகின்றது. அதில் தற்பொழுது வளம் கொழித்துக் கொண்டிருக்கும், ஆனால் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மணற்பரப்பாகக் காணப்பட்ட சகாரா பாலைவனத்தின் காட்சியும், வெம்மையும் தோன்றுவது போன்ற பிரமையை அவ்வதிகாரி உணர்கின்றான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ்ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


தாய் வெளியீடு